ASOKA

(TAMIL)

V2
N19
85831

MADRAS

C. COOMARASAWMY NAIDU & SONS

1919

Rights Reserved]

[Price 4 As.

அசோகர் சரித்திரம்

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரஜிஸ்தர் செய்தது]   1919   [விலை 4 அணா

Printed at
The 'Caxton 'Press'
Madras, E.

அசோகர் சரித்திரம்

நாட்டு நிலைமை

கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஆறும் நூற்றுண்டில் ஸ்ரீசாக்கிய கௌதம புத்தர் இந்தப் பரதக் கண்டத்திற் பிறந்தார். அவர் மிக்க வலிபொருந்திய மதசாகையை ஏற் படுத்தினர். அதற்குப் பௌத்த மதம் என்று பெயர். அவருடைய ஜீவித காலத்திலேயே இந்துஸ்தானத்தில் அனேக இடங்களில் அவர் தமது மதம் பரவச் செய்தார். ஆன போதிலும், அந்த மதத்தின் கொள்கைகள் ஜனங்களின் மனங்களில் நிலையாக வேரூன்ற வில்லை. அதற்குள்ளாக, புத்தமுனி பரலோக மேகினர்.

அவருக்குப் பிறகு, அவருடைய சிஷ்யர்கள் தம் மதத்தைப் பரவச் செய்வதே பெரிய நோன்பெனக் கொண்டு பக்தி சிரத்தை வைராக்கியங்களோடு வியவகரித் தன ரானபோதிலும், ஒரு மணிமாலிகையிலுள்ள நாயக மணியானது தவறிப்போன பிறகு மற்ற மணிகளுக்குப் பெருமையும் பிரகாசமும் பலமும் எப்படிக் குறைந்து போமோ அப்படியே, பௌத்த ஸங்க சக்திக்கு முக்கிய மணியாகிய கௌதமபுத்தர் நிர்வாண மெய்திய பிறகு மற்ற மணிகள் காந்தி குன்றிப் போயின. அதனல், அந்த ஸங்கத்துச் சக்தியும் குறைந்தது.

பின்னர், மதபேதங்களும் பரஸ்பர விரோதங்களும் பிரபலமாகி, வேறு வேறு ஸம்பிரதாயங்கள் ஏற்படலாயின. இந்தக் காலத்தில் தர்ம சாஸ்திரங்களுக்கும் ஆசரணத்திற்கும் வித்தியாசம் அகப்படுவது போல, அந்தக் காலத்திலும் சாஸ்திரத்திற் சொல்லிய லக்ஷணங்களுக்கு ஒவ்வாத ஆசரணம் இருந்தது. இஃது எல்லா மதங்களினும் சாமானியமாக இருக்கும் விஷயமேயாம். ஆதலினாலேயே, ஜனங்கள் தர்ம சாஸ்திரங்களை அப்பியஸிக்காமல் விடுத்தனர்.

ஒரு புறத்தில் நியாய சாஸ்திர முறைப்படி செய்த விசாரணையினால் ஏற்பட்ட கண்டனமும், மற்றொரு புறத்தில் நிரீசுவர வாதத்தின் பிரசாரமும், வேறோரிடத்தில் யோகசாஸ்திர ஆராய்ச்சியும், பின்னுமோர் இடத்தில் சாந்தம், தயை, க்ஷமை (பொறுமை) முதலாகிய குணங்களின் மகத்துவத்தைக் கொண்டாடும் பௌத்த தர்மோபதேசமும் நடந்துவந்தன. இப்படிப்பட்ட பரஸ்பர விரோதமான சக்திகளுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டிருந்த பிராமணர்களின் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாயிருந்தது.

இதுவன்றி, அலெக்சாண்டர் முதலாகிய கிரேக்க ராஜர்கள் பரதக்கண்டத்தின்மீது படையெடுத்துத் தேசத்தை மிகவும் வருத்தினதனால், அந்நிய தேசத்தவர்களோடு அடிக்கடி ராஜகாரியங்களைக் குறித்துப் பேசி வியவகரிக்க வேண்டிய ஆவசியகமும் நேரிட்டுக் கொண்டிருந்தது.

கடைசியில், பரதகண்டத் தரசர்களுக்கும் பிறத் தேசத்தரசர்களுக்கும் ஒருவிதமான உடன்படிக்கை ஏற்பட்டதனால், தேசத்திற்கு க்ஷேமம் உண்டாயிற்று. இம்மட்டேயன்றி, ஸ்வதேசத்து அரசர்களுக்கும் பிறத் தேசத்து அரசர்களுக்கும் பரஸ்பர விவாக சம்பந்தங்

களும் ஏற்பட்டதாகச் சில அரசர்களுடைய சாஸனங்களி னல் விளங்குகின்றது. மகத தேசாதிபதியாகிய சந்திர குப்தர் * (அசோகருடைய பாட்டனர்) கிரேக்க ராஜபுத் திரியை மணம்புரிந்து கொண்டதாக இதிஹாஸம் சொல் லுகின்றது. அரசருடைய ஒழுக்கத்தை அவருடைய உத்தியோகஸ்தர்களும் பின்பற்றினர்கள்.

இவ்வாறு, அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் தோன்றிய மதப் பிரிவினைவித்து (தர்மக்கிராந்திபீஜம்) அவ ருடைய பாட்டனராகிய சந்திரகுப்தராலேயே போடப் பட்டதென்று தெரியவருகிறது. கி. மு. மூன்றும் நூற் ருண்டிலும் நான்காம் நூற்ருண்டிலும் கிரேக்கர்கள் அடிக்கடி பரதக்கண்டத்திற்கு வந்துகொண் டிருந்தார்கள். அவர்களுக்கும் இந்துக்களுக்கும் சினேகம் ஏற்பட்டது. அதனலேயே, கிரேக்கர்கள் ஆசார வியவகாரங்களிற் சிறப் புற்ருேங்கிச் சீர்திருத்த முற்றவர்களாக விளங்கலாயினர்.

மேலும், கிரேக்கர்களிடத்திலிருந்து இந்துக்கள் பௌ திகசாஸ்திரமும் வேறு சில வித்தைகளும் கிரகித்துக் கொண்டனர். இப்படிச் சொல்லியதனல், அதுவரையில் இந்துக்களுக்குப் பௌதிக சாஸ்திரம் தெரியாதென் றும் கலைகள் தெரியாவென்றும் கொள்ளக்கூடாது. அந்த வித்தைகளிலுள்ள சில அமிசங்களை அவர்களி டத்திலிருந்து இந்துக்கள் கற்றுக்கொண்டன ரென் பதே பொருள். அதுபோலவே, இந்துக்களிடத்தி லிருந்து கிரேக்கர்கள் சில வித்தைகளைக் கிரகித்துக் கொண்டார்கள். அதற்கு முன் வெகு காலமாகவே இந்துக்கள் பல கலைகளில் தேர்ந்திருந்தன ரென்பது இதனல் விளங்கும். இதற்கு உதாரணமாக, டாக்ட்டர்

* கிரேக்க பாஷையில் "ஸாந்திர கோட்டஸ்" (Sandracotus) என்று எழுதப்பட் டிருக்கிறது.

பெர்கியூஸன் என்னும் சிற்ப கலா விசக்ஷண பண்டிதர் எழுதி யிருப்பதைக் கவனிக்க —

"கிறிஸ்துவுக்கு முன்னர் மூன்ருவது நூற்ருண்டில் புத்த கயை என்னும் இடத்திலுள்ள தேவாலயமானது இந்துக்களாலேயே கட்டப்பட்டது. அதனில் பிறத்தேசத்துக் கட்டடமுறைகளின் கலப்பே இல்லை. அன்றியும், யானைகள், மான்கள், குரங்குகள், செடிகள், கொடிகள் முதலாகிய சித்திரங்களினுல் விளங்கும் சிற்பத திறமை மிகவும் புகழத்தக்கது."

அந்தக்காலத்தில் ஜனங்கள் வழங்கிவந்த பாஷை இன்னதென்று நிச்சயிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் அகப்படவில்லை. ஆயினும், அசோகர் தம் சிலாசாஸனங்களைப் பாலீ பாஷையில் எழுதியிருப்பதனுல், அந்தக் காலத்துப் பாஷை பாலீயாகவே இருக்கலாமென்று தோன்றுகிறது.

அந்தக் கல்வெட்டுகளிலும் பாஷை வித்தியாசப்படுகின்றது. இதற்குக் காரணம் என்னவென்று விசாரிக்குமளவில், அந்தப் பாலீ பாஷையானது தேசபேதத்தையனுசரித்துச் சிற்சில எழுத்துக்கள் குறைந்து மாறுபாடுற்றிருந்ததெனத் தெரியவருகின்றது. பாஞ்சாலப்பாலீ, உஜ்ஜயனிப் பாலீ, மாகதிப் பாலீ என்னும் மூன்று வகையான பாலீ பாஷை அந்தக் காலத்தில் வழங்கிற்று.

பாஞ்சாலப் பாலீயில் (ர)-என்னும் எழுத்தைத் தெளிவாக உச்சரிப்பார்கள். மற்றும், ச, ஷ, ஸ-என்னும் எழுத்துக்களையும் அவர்கள் தெரிந்துகொண்டிருந்தார்கள்.

உஜ்ஜயனிப் பாலீயில் (ர), (ல)-என்னும் இரண்டு எழுத்துக்களும் இருந்தபோதிலும், (ர)-என்னும் சப்தத்தை இலேசாக உச்சரிப்பார்கள். அவர்களுக்கு ச, ஷ, ஸ-என்னும் சப்தங்களுக்குள்ள வித்தியாசம் தெரியாது.

மாகதிப்பாலீயில் (ர) - என்னும் எழுத்தே இல்லை. அதற்கும் பதிலாக (ல) - என்னும் எழுத்தே உபயோகப் படுத்திக்கொண் டிருந்தார்கள்; அப்படியே உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

அசோகருடைய காலத்தில் பாலீ பாஷையின் எழுத்துக்கள் இரண்டு விதமாக எழுதப்பட்டு வந்தன. அரபி பாஷை, பார்ஸீ பாஷை முதலியவை வலது புறத்திலிருந்து இடது புறமாகவும், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் முதலியன இடது புறத்திலிருந்து வலது புறமாகவும் எழுதப்பெறுவது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. கபர்த்த கிரியிலுள்ள அசோக சிலா சாஸனமானது அரபி பாஷையின் முறையை யனுசரித்து வலது புறத்தினின்று இடது புறமாக எழுதப்பட்டிருக்கின்றது. இந்த லிபியை அங்கிலப் பண்டிதர்கள் "ஆரியானோ பாலீ" என்பார்கள்; மற்றச் சாஸனங்களெல்லாம் தமிழைப்போல இடது புறத்திலிருந்து வலது புறமாக எழுதப்பட்டிருக்கின்றன; இந்த லிபியை "இந்தோ பாலீ" என்பார்கள்.

குலம்

மகத தேசமானது பண்டைக் காலத்தி லிருந்து தேச சரித்திரங்களிற் பிரசித்திபெற்று விளங்கினதாக இருக்கிறது. குரு பாண்டவர்களுடைய காலத்திற் பராக்கிரம மிகுந்தவனெனப் பெயர்பெற்ற ஜராஸந்தன் இந்தத் தேசத்தி லிருந்தவனவன். அவன் அனேக ராஜ்யங்களை ஜயித்துச் சில ராஜர்களைத் தனக்கு அடிமைக ளாக்கிக்

கொண்டான்; வேறு சிலரைச் சிறையி லடைத்து வைத்தான். கடைசியிற் கிருஷ்ணமூர்த்தி பிராமண வேஷம் பூண்டு பாண்டவர்களுடன் ஜராஸந்தனுடைய யஞ்ஞ சாலைக்குப் போய், பீமனைக்கொண்டு மற்போர் செய்வித்து, அதனில் அவனைக் கொல்லுவித்த விஷயம் உலகப் பிரசித்தமா யிருக்கின்றது.

ஜராஸந்தனுடைய குமாரனான ஸஹதேவன் என்பவன் குருக்ஷேத்திரத்தில் நடந்த பாரத யுத்தத்திற் கௌரவர்களின் பக்கத்தைச் சார்ந்து போர் புரிந்தான். ஸஹதேவனுக்குப் பிறகு இருபத்தொருராஜர்கள் அந்தத் தேசத்தை ஆண்டார்கள். அதன்பிறகு மகத தேசத்து ஆதிபத்தியம் பிரத்தியோத வமிசத்தவர்களுடைய வசமாயிற்று. அதற்குப் பின்னர் அரசாண்ட ராஜர்களுடைய பெயர்கள் விஷ்ணுபுராணத்திற் கூறியபடி,

1. சிசுநாகன், 2. காகவர்ணன், 3. க்ஷேமதர்மன், 4. க்ஷத்திரௌஜன், 5. பிம்பஸாரன், 6. அஜாதசத்துரு, 7. தர்ப்பகன், 8. உதயீசன், 9. நந்தவர்த்தனன், 10 மகாநந்தி, 11. ஸுமாலியன்—என்பவர்கள் ஆவர்.

ஸுமாலியன் என்பவனுக்கு எட்டுப்பேர் தம்பிமார்கள் இருந்தனர். அவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்தனர். நந்த வமிசத்துக் கடைசி யரசனுடைய காலத்திற் சந்திரகுப்தர் மகத தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று, அதனைச் சுவாதீனப்படுத்திக் கொண்டார். சந்திரகுப்தர் என்பவர் தாஸி புத்திரரென்று நமது புராணங்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது. அவர், ராஜகாரிய துரந்தரனெனப் பிரஸித்திபெற்ற சாணக்கியன் என்பவனைத் தம் வசமாக்கிக் கொண்டார்; அவனுடைய பேருதவியினால் நந்த வமிசத்தை அடியோடழித்து மகத ராஜ்யத்துச் சிங்காசன மேறினர்.

சந்திரகுப்தர் மோரிய நகரத்து ராணியின் புத்திரராவர். ஆதலினலேயே, அவருடைய குலத்திற்கு மௌரிய வமிசம் என்னும் பெயர் வந்தது என்று பௌத்த நூல்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது அஃது எப்படியிருப்பினும், சந்திரகுப்தர் பராக்கிரம மிகுந்தவர் என்பதற்கு ஐயமில்லை.

அவருடைய சபையில் கிரேக்க ராஜ்யத்து நியாயாதிபதியாகிய மேகஸ்தனீஸர் என்பவர் வெகுகாலம் இருந்தார். கிரேக்க ராஜராகிய ஸெலியூக்கஸ் என்பவர் தமது குமாரியைச் சந்திரகுப்தருக்குக் கலியாணஞ் செய்து கொடுத்திருந்தார். சந்திரகுப்தர் கி. மு 291-ஆம் ஆண்டில் பரலோக மெய்தினர்

பிறகு, அவருடைய குமாரனுகிய பிந்துஸாரன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவனைக் கிரேக்கர்கள் "அமிர்தகேது" எனறும, "சத்துரு விநாசகன்" என்றும் சொல்லிக்கொண் டிருந்தார்கள். பிந்துஸாரனுக்கு இரண்டு புத்திரர்கள் உண்டு; அவர்களுள், ஸுஸீமன் என்பவன் மூத்தவனுவன்; அசோக வர்த்தனன் என்பவன் இளையவனுவன்; அவனை அசோகன் என்றுஞ் சொல்வார்கள். அந்த அசோகனே இந்தச் சரித்திர நாயகனுவன்.

அசோக சரித்திரத்தை விவரிக்கும் கிரந்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் மூன்று உள. அவை 1. அவதான சதகம், 2. திவ்வியாவதானம், 3. அசோகாவதானம் என்பனவாம். அசோகாவதானம் என்பது ஓராயிரம் அனுஷ்டுப்புச் சுலோகங்களமைந்தது, விசேஷ மகத்துவம் பொருந்தியது. அந்தக் கிரந்தத்தில் அசோக சக்கரவர்த்தியின் வமிசாவளியானது,

1. பிம்பிஸாரன் (கௌதம புத்தருடைய காலத்தில் இருந்தவன்), 2. மஹீபாலன், 3. உதயீசன், 4. மண

டன், 5. காகவர்ணி, 6. ஸஹலி, 7. தரகரி, 8. மகா மண்டலன், 9. பிரஸேன ஜித்தன், 10. நந்தன், 11. பிந்து ஸாரன், 12. அசோகன்

என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. திவ்வியாவதானம் என்னுங் கிரந்தத்திற் குறிக்கப்பட்டிருக்கிற விவரத்திற்கும் இதற்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கின்றது.

அசோகனுடைய பிறப்பைப் பற்றி ஊர்க்கதையொன்று உண்டு. அது வருமாறு — அசோகனுடைய தந்தையாகிய பிந்துஸாரன் என்பவன் அரசாண்டு வந்த காலத்தில் சம்பாபுரி என்னும் ஊரில் ஓர் எளிய பிராமணன் இருந்தான். அவனுக்கு ஸுபத்திராங்கி என்னும் பெயருடைய குமாரி ஒருத்தி இருந்தாள். அவள் அழகிற் சிறந்தவள், குணத்தில் மேம்பட்டவள். அவளுக்குத் தகுந்த வரனைத் தேடிக் கலியாணஞ் செய்து கொடுப்பதற்காக அந்தப் பிராமணன் கவலைகொண்டிருக்கையில், ஒருநாள் அவனுடைய வீட்டுக்கு ஒரு ஜோஸ்யர் அதிதியாக வந்தார். அவர் அந்தச் சிறுமியின் ஜாதகத்தைப் பார்த்துக் குணிதஞ்செய்து, அவளுடைய கர்ப்பத்தில் மகாமண்டலேசுவரன் ஒருவன் தோன்றுவான் என்று சொன்னார்.

அந்த வார்த்தையைப் பரீக்ஷிக்கக் கருதி அந்தப் பிராமணன் ஸுபத்திராங்கியை மிகப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தான். ஜோஸ்யர் சொல்லியதற் கேற்பத் தகுந்தவன் எப்படியாவது கிடைப்ப னென்பதே அவனுடைய நம்பிக்கை. அப்படியிருக்கையில், ஒருநாள் பிந்துஸார மகா ராஜன் சம்பாபுரிக்கு விஜயஞ் செய்திருந்த பொழுது, ஸுபத்திராங்கி என்னும் சிறுமியின் ரூபலாவணியத்தைப் பற்றி வர்ணித்து ஒருவர் சொல்லக்

கேட்டான். அவ்வளவு அழகுள்ள இளம்பெண் தன் அரமனைக் குரியவளே யல்லாது வறுமையினால் வாடி யுதிர்ந்துபோகத் தக்கவளல்லளெனத் தேர்ந்து, அவளைத் தனது ராஜதானிக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்தான்.

அந்தப் பெண்ணினிடத்தில் அவன் மிகுந்த பிரேமை வைத்திருந்தான். அதனை யுணர்ந்த அவனுடைய மனைவிமார்கள் பொறாமை மேற்கொண்டு, அந்தப் பெண் அரசனுடைய பார்வைக்கு வராதவாறு அவளுக்கு வேலைகளிட்டு அவளை ஒதுக்கி விட்டனர். அரமனைமாதர்களுடைய கொடுமைக்கெல்லாம் உட்பட்டு ஸுபத்திராங்கி உடலும் உள்ளமும் நொந்திருந்த போதிலும், யௌவனத்தின் கலையும் பொறுமைக் குணமும் மிகுந்திருந்தாள். அரசனுக்கு அவளிடத்துள்ள பிரீதி குறைவதற்கும், அவள் அவனுடைய கண்ணுக் கெதிர்ப்படாதிருப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை அரமனைமாதர்கள் செய்து கொண்டே வந்தார்கள். அதனால், அரசனுக்கு ஸுபத்திராங்கியின் ஞாபகமே இல்லாமற் போயிற்று. ஸுபத்திராங்கி தாஸிவேலை செய்துவரும்படி அந்தப்புரத்து மாதர்கள் அவளுக்கு விதித் திருந்தார்கள். அவள் செய்யவேண்டிய காரியங்களுள், அரசனுக்குத் தலையை வாரி முடிப்பதும் ஒன்றாகும். அந்த வேலையை அவள் மிகுந்த சிரத்தையோடு சிறப்பாகச் செய்து வந்தாள். அரசனிடத்தில் தனக்குள்ள மனக்குறைகளைச் சொல்லிக் கொள்வதற்குச் சமயம் வாய்க்கவேண்டுமென்று அவள் ஈசுவரனைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தாள்.

அவள் தலையை வாரி முடித்ததில் ஒருநாள் அரசன் அதிக சந்தோஷமடைந்து அவளைப் பார்த்து, "உனக்கு என்ன வெகுமதி வேண்டுமோ, அதனைக் கேள்; தரு

வோம்'' என்று சொன்னான். அப்பொழுது அந்த ஸுந்தராயுவதி, "பிரபுவே! ஸ்திரீகளுக்குப் பட்ட மகிஷியின் பதவியைவிட உயர்ந்தது என்ன இருக்கின்றது? மகாராஜா அவர்கள் அனுக்கிரகஞ் செய்வதா யிருந்தால், அதனையே எனக்குக் கிருபை செய்யவேண்டும்'' என்றாள். அந்த விண்ணப்பத்தைக் கேட்டு அரசன், "அது ஸாத்திய மாகுமோ? நாங்கள் க்ஷத்திரியர்கள்; நீயோ தாஸி; அன்றே?'' என்றான். அந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லு மளவில் ஸுபத்திராங்கி தன் விருத்தாந்தத்தை அரசனுக்கு எடுத்துரைத்து, ராணி வாஸத்து ஸ்திரீகளின் பொறாமையையும், அந்தப் பொறாமையினால் அவர்கள் தன்னை ஒதுக்கி இழிவுபடுத்தி யிருப்பதையும் விளக்கினாள்.

அந்த விவரங்களை யுணர்ந்த அரசன் ஸுபத்திராங்கிக்கு நேர்ந்த கஷ்டங்களுக்காக விசனப்பட்டு, அவளுடைய பொறுமைக்கும் மற்றுமுள்ள நற்குணங்களுக்கும் அவளை மெச்சிக் கொண்டாடுவானாயினான். ஸுபத்திராங்கியின் அதிஸுந்தரமான ரூபமும், அவளுடைய ஸுகுணமும் அரசனுடைய மனத்திற் குடிகொண்டன. அவன் மனமுவந்து அவளை மணந்து பட்டத்துராணி யாக்கினான்.

அதுமுதல் அவர்கள் இருவரும் ஆனந்தமாகக் காலங் கழித்து வந்தார்கள். அவர்களுடைய பிரேமவிருக்ஷம் ஈன்ற முதற்பயனே "அசோகன்'' என்னும் புத்திரரத்தினமாம். அந்தக் குழந்தையைப் பிரஸவித்த காலத்தில் தாயாருக்கு எவ்விதமான பிரயாஸமு மில்லாதிருந்ததனால், அவனுக்கு "அசோகன்'' எனப் பெயரிட்டனர்.

அசோகனுக்குப் பிறகு மற்றொரு குமாரன் அவர்களுக்குப் பிறந்தான். அந்தக் குழந்தை பிறக்கையிலும் தாயாருக்கு வேதனை யெதுவு மில்லாததனால், அவனுக்கு "வீதாசோகன்'' எனப் பெயரிட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை யொட்டிப் பார்க்கும் பொழுது, "ஸுசீமன்" என்பவன் பிந்துசாரனுக்குள்ள மற்றொரு பாரியைக்குப் பிறந்தவனா யிருக்கவேண்டு மென்று தோன்றுகின்றது.

அசோகரது இளமைப் பருவம்

அசோகர் அழகுடையவ ரல்லர், குச்சிதமான ஸ்வ பாவமுள்ளவர். அவருடைய நடை யுடை பாவனைகளைப் பார்த்தால், அவரிடத்து மற்றவர்களுக்குப் பிரியம் உண் டாகாது. அந்தக் காரணத்தினாலேயே அவருடைய தந் தையாகிய பிந்துஸார மகாராஜர் அவரிடத்து அதிகப் பிரீதிவைக்கவில்லை.

அசோகர் தம்முடன் விளையாடுஞ் சிறுவர்களை எப் பொழுதுந் தொந்தரவு செய்துகொண் டிருப்பார்; அவர் களை எந்த வகையிலேனுந் துன்புறுத்துவார். அதனால், அவர்கள் அவருடன்இணங்காமல், மனவருத்தங்கொண்டு, அவர் எந்த வேளையில் என்ன செய்வாரோ என்று பயப் பட்டுக் கொண்டிருப்பார்கள்; அவருக்குச் "சண்டன்" என்னும் வசைப்பெயரிட்டு வியவகரிப்பார்கள்.

"சண்டன்" என்னும் பதத்திற்கு "அஸுரன்" என் றும், "நமன்" என்றும் அர்த்தமாம். அப்படிப்பட்ட கொடிய தன்மைகளுடைய அசோகரே பிற்காலத்தில் "தேவானும் பிரியன்" என்னும் பதவிக்கு உரியவராயினர். "தேவானும் பிரிய:" என்னும் பதம் இந்தக் காலத்தில்

ஒரு வசைச்சொல்லாக வழங்குகின்றது. அதற்கு இப்போது "பகவதமூட" (பசுவைப்போன்ற மூடன்) என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். ஆனால், பௌத்த கிரந்தங்களில் அந்தப் பதத்தை "தேவர்களுக்குப் பிரியமானவன்" என்னும் நல்ல அர்த்தத்திலேயே உபயோகித்திருக்கிறார்கள்.

அசோகர் நாளுக்குநாள் அபிவிருத்தி யடைந்து வந்தனரெனினும், அவருடைய தார்க்குணங்கள் மாத்திரம் அவரைவிட்டு அகலவில்லை. அதனால் பிந்துஸாரனுக்கு அவர்மீது கோபமுண்டாகியது. எப்படியாவது அந்தத் துர்மார்க்கனை வீட்டைவிட்டுத் துரத்தவேண்டு மென்று தந்தை ஆலோசித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும் நாளில் (கி. மு. 250 ஆம் ஆண்டு) தக்ஷசிலை (பஞ்சாப்) என்னுந் தேசத்தில் ஊர்க்கலகம் நடப்பதாக வர்த்தமானம் எட்டியது. அவ்விடத்து ஜனங்கள் அரசனுடைய சட்டத்திட்டங்களுக்கு அடங்காமல் ஸ்வேச்சையாக விவகரித்துக் கலகஞ் செய்து வந்தார்கள். அவர்களை யடக்கி அந்தத் தொந்தரவைப் போக்குவதற்காக பிந்துஸாரமகாராஜன் தனது குமாரனாகிய அசோகனை அனுப்பினான்.

அசோகர் அந்தப் பிரதேசத்தை யணுகினவுடனே, அந்த ஜனங்களெல்லாரும் மகாராஜருக்குரிய மரியாதைகளோடு எதிர்கொண்டுவந்து அவரை உபசரித்து, "எங்களுடைய 'சுபேதார்' (கவர்னர்) செய்கிற உபத்திரவம் பொறுக்காமல் நாங்கள் அப்படிக் கலகித்தோமே யல்லாமல், எங்களுக்கு ராஜத் துவேஷமில்லை" என மனுச் செய்துகொண்டார்கள். மற்றும், அவர்கள் சொல்லும் வார்த்தைகள் உண்மையானவை யென்று அசோகரது மனத்திற் பதியுமாறு பலவகைகளில் நடந்து கொண்டதன்றி ராஜகாணிக்கைகளுங் கொண்டுவந்து சமர்ப்பித்தார்கள்.

அவ் வுபசாரங்களையும் உறுதிமொழிகளையும் ஏற்றுக் கொண்டு அசோகர் மனங்களித்து மிக்க வைபவத்தோடு தக்ஷசிலை யென்னும் நகரத்திற்குட் பிரவேசித்தார். அங்குள்ள குடிகளின் குறைகளைக்கேட்டு, அவைகளுக்குத் தக்க பரிகாரங்கள் செய்து, அவர்களைத் திருப்திப்படுத்திய பின்னர், அசோகர் காஸ்ஸரம் (காச்மீரம்) என்னும் ராஜ்யத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்.

காச்மீர தேசத்தைக் கைவசப்படுத்திக் கொண்ட செய்தியைக்கேட்டு அரசன் சந்தோஷமடைந்து, அசோகரை உஜ்ஜயினுக்குச் சுபேதாராக நியமித்தான். அந்த வர்த்தமானத்தைக் கேட்டுத் தக்ஷசிலா நகரத்தவர்களெல்லாரும் அசோகரை விட்டுப் பிரியவேண்டி வந்த துயரத்தைத் தாளாமல் பரிதபித்தனர். அவர்களை ஒருவாறு சமாதானப் படுத்திய பிறகு அசோகர் உஜ்ஜயினீ பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டார். போகும் மார்க்கத்தில் சைத்தியகிரி (விஸநகரம்) என்னும் ஊரில் தங்கினர்.

சைத்தியகிரி என்னும் ஊரிலுள்ள வர்த்தகனொருவனுக்குச் சுந்தரவதியான பெண்மணியொருத்தி இருந்தாள். அவளைக் கண்டு அசோகர் மோகித்து, அவளை கி. மு. 274-ஆம் ஆண்டில் மணம் புரிந்துகொண்டார். இவர்களுக்கு மகேந்திரன் என்னு மொரு குமாரனும், சங்கமித்திரை என்னு மொரு குமாரியும், உண்டாயினர் அந்த மகேந்திரன் என்பவன் மிகுந்த கீர்த்திபெற்று விளங்கினன். அவனுடைய சரித்திரம் மற்றோரிடத்து விவரிக்கப் பெறும்.

அசோகர் உஜ்ஜயினிக்குப் போய்ச் சேர்ந்த பிறகு தக்ஷசிலா ஜனங்கள் மறுபடி கலகிக்கத் தொடங்கித் துரைத்தனதிகாரிகளுக்குத் தொந்தரவுங் கவலையும் உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, பிந்துஸார மகாராஜன் தனது மூத்தகுமாரனாகிய ஸுசீமன் என்ப

வனை அவ்விடத்திற்கு அனுப்பினன். அவன் தக்ஷசிலா நகரத்திற்குப் போய்ச்சேரும் தறுவாயில், பிந்துஸாரமகா ராஜனுக்கு இறுதிக்காலம் சமீபித்து விட்டது. அப்பொழுது, அவன் தனக்குப் பிறகு ராஜ்யாதிகாரத்தை எவருக்கு ஒப்புவிப்ப தென்னுங் கவலையினல் மனங்கலங்கிக்கொண் டிருந்தான்.

அசோகர் குரூரியாகவும் ஸ்வேச்சாசாரியாகவும் இருந்ததனல், அவர்மீது பிந்துஸாரமகாராஜனுக்கு அபிமான மில்லையென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோமன்றே? அது நிற்க, வேறு சில காரணங்களினல் ஸுஸீமனிடத்தும் பிந்துஸாரனுக்குப் பிரீதி யில்லாதிருந்தது ஆகையால், அவன் இவ்விஷயமாகத் தனது மந்திரியின் அபிமதத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினன்.

இதற்கு முன் ஒரு சமயத்தில் மந்திரியை ஸுஸீமன் அவமானப்படுத்தி யிருந்தான். அந்த மனஸ்தாபத்தை மந்திரி உள்ளூறக் கொண்டாடிக்கொண்டே யிருந்தானதலின், அந்தப் பகையைச் சாதிப்பதற்கு ஏற்ற தருணம் இதுவே யெனக் கைக்கொண்டு, அவன் அசோகருக்குப் பட்டங் கட்டுவதே தகுதியென்றும் நியாயமென்றும் அரசனுக்கு மனுச்செய்தான். ஆனபோதிலும், தக்ஷசிலா நகரத்துக் கலகத்தை யடக்கி ஸுஸீமன் திரும்பி வருமளவும் அசோகர் தனது ராஜ்யபாரத்தை வகித்து வரவேண்டு மென்றும், அவன் திரும்பி வந்த வுடனே ராஜ்யத்தை அவனுக்கு ஒப்புவித்து விடவேண்டு மென்றும் விதித்துவிட்டுப் பிந்துஸார மகாராஜன் கி. மு. 263 ஆம் ஆண்டில் மரண மடைந்தான்.

ஆயினும், பிந்துசாரன் செய்த ஏற்பாடு அவனுக்கு ஈடேறவில்லை. இவ் விஷயமாகக் கன்னிங்ஹாம் என்னும் அங்கில கிரந்தகர்த்தர் பின் வருமாறு எழுதி யுள்ளார் —

"தனக்குப் பிராணாவசானகாலம் சமீபித்ததெனத் தெரிந்து பிந்துசாரன் தன் மந்திரியை வரவழைத்துச் சுசீமனைத் தருவிக்குமாறு கட்டளையிட்டான். பிரதானியானவன் சுசீமனை வரவழைக்காமல் மோசஞ் செய்து, அசோகரை வரவழைத்து விட்டான். அசோகர் வந்துவிட்டதனால் பிந்துசாரனுக்குத் திகிலுண்டாகி இருதயம் பிளந்து போயிற்று; அதனால், மார்பினின்று இரத்தம் பெருகியொழுகியது. அதுவே காரணமாக அவன் மரணமெய்தினான்."

அவர் எழுதியுள்ள விஷயத்தின் உண்மை நமக்குத் தெரியாதாயினும், அசோகரே ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார் என்பதை அறிவோம். ராஜ்யம் அவருடைய வசத்திற்கு வந்து நான்கு வருஷங்களுக்குப் பிறகு அவருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. அந்தப் பட்டாபிஷேகம் நடந்த தேதியைப்பற்றிப் பலர் பலவாறாகக் கூறுகின்றார்கள். அது கி. மு. 263 அல்லது 265-ஆம் ஆண்டில் நடந்தது என்று மாக்ஸ்முல்லரும், 267-ஆம் ஆண்டிலென்று ரிஸ்டேவிஸ் என்பவரும், 269-ஆம் ஆண்டிலென்று ஸேனார்ட்டு என்பவரும், 271-ஆம் ஆண்டிலென்று பாபு மனமோகன சக்கரவர்த்தியுஞ் சொல்லுகின்றார்கள். பாலீ பாஷையிலுள்ள நூல்களில், 272-ஆம் ஆண்டில் நடந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

பிந்துஸாரன் மரணமடைந்தானென்னும் வர்த்தமானம் தெரிந்தவுடனே, ஸுஸீமன் பாடலீபுத்திரத்தை நோக்கிப் புறப்பட்டான். அப்படி அவன் அவசரமாக வந்துகொண்டிருக்கையில், அசோகர் ராஜ்யபதத்தை அபகரித்தனரென்னுஞ் செய்தி அவனுக்கு வழியில் எட்டியது. அந்தச் சங்கதியைக் கேட்டு ஸுஸீமன் மனம்நொந்து ஆசையொழித்திருந்த போதிலும், தைரிய மேற்கொண்டு, சிறு

படையொன்றைத் திரட்டினான். தன் பலத்தையும் மாற்றான் பலத்தையுஞ் சீர்தூக்கிப் பாராமல், அவன் பாடலீபுத்திரத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் ஆத்திரத்தோடு புறப்பட்டுப் போனான்.

அசோகர் இயற்கையாகவே பராக்கிரம மிகுந்தவர்; அவருடைய தந்தையின் சேனை மிகுதியாக இருந்தது; அந்தச் சேனை அவருடைய அதீனத்திலிருந்தது; மகாதந்திரசாலியாகிய ராதாகுப்தன் என்பவன் அவருக்குப் பிரதானியாயிருந்தான். இத்தனை அனுகூலங்கள் இருக்கையில் அவர் ஸுசீமனை வெல்வது கஷ்டமாமோ? அந்த விஷயத்தில் அவருக்கு எவ்விதமான பிரயாசையுமிராது.

ஸுசீமன் முதலான தன் உறவினர்கள் எல்லாரையும் தலையெடுக்காமற் செய்யுமாறு அசோகர் தம் சேனாதிபதியொருவனுக்குக் கட்டளையிட்டார். "மானிடோத்தியானத்திலுள்ள மரங்களையெல்லாம் வெட்டித் தள்ளு" (மனிதர்களென்னும் மரங்களடர்ந்த உத்தியானவனத்திலுள்ள விருக்ஷங்களையெல்லாம் வெட்டி வீழ்த்து) என்று அவர் ஸங்கேதமாகச் சொல்லினராம். அந்தக் கோரமான காரியத்தை நிறைவேற்றுவதற்கு அந்தச் சேனாதிபதி இசையவில்லை. ஆதலால், அசோகரே அந்தக் காரியததை மேற்கொண்டு, குழந்தை முதலாகக் குறவர்வரையிலிருந்த ஸமஸ்தமான புருஷர்களையும் சங்கரித்தார். இனிச் சிறிதும் பயமின்றி ராஜ்யபாலனஞ் செய்யலாமெனத் தைரியம் பூண்டு அவர் தமது விலாஸவதிகளாகிய ஸ்திரீகளோடு கூடிக் கிரீடிக்கும் பொருட்டுக் களியாட்டுத் தோட்டமேகினர்.

மேலே சொல்லியபடி அசோகர் தமது பந்துக்களையெல்லாம் சங்கரித்தாரென்று சிலர் சொல்லுகிறார்கள்; வேறு சிலர் வேறு வேறு விதமாகச் சொல்லுகிறார்கள்:—

ஸகலமான பந்துக்களையும் கொன்று அசோகர் பட்டாபிஷேகம் செய்துகொண்டார்; ஆனால், திஷ்யன் என்னும் தம்பி யொருவன் மாத்திரம் ஸந்நியாஸியாக இருந்தமையின், அவனைக் கொல்லவில்லை என்பதாகச் சிங்களத்தீவிலுள்ள சிலாசாஸனத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்று நேபாள தேசத்துப் பௌத்தகிரந்தமாலை கூறுகின்றது.

அசோகர் தமது தம்பிமார் ஆறுபேரைக் கொன்றனரென்று தாரா நாதர் என்பவர் எழுதியிருக்கிறார். ஆனால், இஃது உண்மை எனத் தோன்றவில்லை. ஏனெனின், தவ்ஸி என்னும் இடத்திலும், ஜயகடை என்னும் இடத்திலும் அசோகர் எழுதுவித்துள்ள சிலாசாஸனங்களில் தமது தம்பிகளும் தங்கைகளும் ஜீவித்திருப்பதாகச் சொல்லுகிறார்.

ஸுஸீமனைக் கொன்றபோது அவனுடைய மனைவி கர்ப்பவதியாக இருந்தாள். அவள் ஒரு சண்டாளனிடத்தில் அடைக்கலம் புகுந்து அவனுடைய வீட்டிலேயே ஒரு புருஷப் பிரஜையைப் பெற்றாள். அந்தப் பிள்ளையே பௌத்தபிக்ஷு (ஸந்நியாஸி) ஆகி, தன் சிறிய தகப்பனாகிய அசோகர் செய்த தோஷங்களையும் அபராதங்களையும் மறந்து, அவருக்குப் பௌத்த தர்மத்தை உபதேசித்தான்—என்று உவீலர் துரை எழுதியிருக்கிறார்.

மகாவம்சம் என்னும் கிரந்தத்தில், உவீலர் துரை சொல்வது போலவே, சொல்லப்பட்டிருக்கிறது.

அசோகருடைய கொடுந் தன்மையைப்பற்றி இன்னும் அநேக கதைகள் சொல்லுவார்கள். அவருடைய ராஜ்யபாலனத்தில், அற்பமான தப்பிதம் செய்தவர்களுக்குங்கூடக் குரூரமான தண்டனை விதிக்கப்பட்டது என்

பார்கள். அதனால், அபராதம் செய்தவர்கள் தப்பிப் பிழைப்பது அரிதாயிருந்தது. அவருக்குப் பிரியமானவர்களும் அவரிடத்துத் தப்பிதம் செய்து பிழைத்ததில்லை. ஒரு நாள் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகள் தத்தம் சுக துக்கங்களைக் குறித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் அசோகருடைய விகாரரூபத்தைப்பற்றியும் பேசினார்களாம். அவர்கள் அப்படி வம்பளந்த செய்தி தெரிந்து அசோகர் அந்த ஸ்திரீகளை வெளியில் இழுத்துக்கொண்டு வரும்படியாகக் கட்டளையிட்டார். அவர்களை வெளியிற் கொண்டு வந்த பிறகு, சேவகர்களுள் துஷ்டனான சண்டகரிகன் என்பவனை அழைத்து அந்த ராணிவாஸத்து ஸ்திரீகளை உயிரோடு தீக்குழியில் வீழ்த்திக் கொளுத்துமாறு அசோகர் கட்டளையிட்டாராம். கோரமான அந்தப் பாபகாரியத்தைத் துஷ்டனாயினும் அந்தச் சேவகன் நிறைவேற்றி யிருக்கமாட்டா னென்று நினைப்போம்.

அப்படி அவர் கடுந்தண்டனை ஸ்திரீகளுக்கு விதித்தது அவருடைய ரூபத்தை இகழ்ந்ததற்காக அன்றென்று அசோகாவதானம் என்னும் நிஜசரித்திரகிரந்தம் சொல்லுகின்றது. அஃது எப்படியெனின், அதனிற் சொல்லப்பட்டிருக்கிற காரணம் வேறாக இருக்கிறது. அரசருடைய சிங்காரவனத்திலுள்ள அசோகமரத்துக் கிளைகளை முறித்ததற்காக ராணிவாஸத்தவருக்குத் தேகாந்த பிராயச்சித்தம் விதிக்கப்பட்டது என்று அசோகாவதானம் கூறுகின்றது.

இப்படிப்பட்ட குரூரதண்டனம் எப்பொழுதும் நடந்து வந்ததனால், குடிகள் மிகவும் பயப்பட்டுக் கொண் டிருந்தார்கள். அவருக்குட்பட்ட சிற்றரசர்களெல்லாரும் திகிலினால் நடுங்கிக்கொண் டிருந்தார்கள். ராஜ்யாதிகாரம்

தமக்கே உரியது. தமக்கு ஈடானவர் எவருமில்லை என்று அசோகர் கர்வித்து மதோன்மத்தரா யிருந்தார். மற்றும், தேவேந்திரர் என்பது தாமே எனப் பாவித்துக்கொண்டார். ஐசுவரியம், அதிகாரம், சாமர்த்தியம் ஆகிய இவைகளில் தாம் தேவேந்திரருக்குக் குறைந்தவரல்ல ரெனவும், அவருடைய வாஸஸ்தானமாகிய பாடலீபுத்திரமே அமராவதி நகரமெனவும் அவர் நினைத்துக்கொண் டிருந்தார்.

தேவதைகளின் ராஜ்யத்தில் தீய செயல் செய்யும் பாபிகளுக்கு நரகம் என்னும் தண்டனஸ்தானம் இருப்பது போல, தமது ராஜ்யத்திலும் தண்டனஸ்தானம் ஒன்று மாத்திரமே குறையென்று நினைத்து, அதனை ஏற்படுத்துவதற்கு ஆலோசனை செய்து, மகா பயங்கரமான நரகஸ்தானமொன்றை அமைத்தார். * எப்படி யெனின்,—

விசாலமான வெளி நிலத்தில் மிக உயரமான சுவர்களை யெழுப்பி, அந்த இடத்தில் கோரமான யாதனோபகரணங்களை அமைத்து வைத்தார். அவ்வுபகரணங்களாவன: — கொதிக்கக் காய்ச்சின எண்ணெய்க் கொப்பரைகள், இரும்பினற் செய்த சூலாயுதங்கள், சக்கரங்கள், பலவிதமான சஸ்திரங்கள். இவை அங்கங்கே வைக்கப் பட்டிருந்தன.

முதன் முதலில், குற்றம் செய்தவர்களை மாத்திரமே அந்த நரகஸ்தானத்திற்கு அனுப்பிச் சிக்ஷித்துவந்தார். பின்னர், அந்த இடத்திற்கு வந்தவர்களை யெல்லாம் விசாரணை யின்றி அந்நரக வேதனைக்குள்ளாக்கிக் கொல்லுவித்து வந்தார்.

---

* அவர் உஜ்ஜயினிப் பட்டணத்தில் சுபேதாராக (கவர்னராக) இருந்தபொழுது இந்த நரகஸ்தானத்தை நிர்மித்தாரென்று கன்னிங்ஹாம் துரை சொல்லுகிறார்.

அந்த நரகஸ்தானத்தின் வெளிப்புறத்தில் மிகவும் ரமணீயமான உத்தியானவனங்களும், தெள்ளிய நீருள்ள தடாகங்களும் பிரகாசித்துக்கொண்டிருந்தன. ஆகையால் அந்த இடத்திற்கு யாத்திரிகர்கள் இளைப்பாறும் பொருட்டு வருவதுண்டு. அங்கே போவதற்கு எவருக்கும் எவ்வித மான தடையுமில்லை. அங்கே போனவர் எவரும் மறுபடி திரும்பி வந்ததில்லை. இவ்வாறு "மோசஞ் செய்து மனிதர்களை இமிசிப்பது அசோகருக்கு மகானந்தமாயிருந்தது" என்று ஸியூகி என்பவர் எழுதிய கிரந்தத்திற் சொல்லப் பட்டிருக்கிறது

அப்படி நடந்துவருங் காலத்தில் ஒரு நாள் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அது வருமாறு —

பௌத்த யதீசுவரர் ஒருவர் அந்த மார்க்கமாகப் பிக்ஷைதேடப் போய்க் கொண்டிருந்தார். அங்குத் தோன்றிய மகோத்தியானத்தையும், நிர்மலமான நீருள்ள தடாகத்தையுங் கண்டு அவர் சிறிது நேரம் அவ்விடத்தில் இளைப்பாறிப் பின்னர்ப் பயணப்பட்டுப் போகலாமென் றெண்ணி அத் தோட்டத்திற்குள் பிரவேசித்தார். உடனே, வாயிற்காப்போன் ஒருவன் வந்து அந்த யதியின் கையையுங் காலையுங்கட்டி, நரகவாதனைக்கு உட்படுத்தும் பொருட்டு, மேலதிகாரியி னண்டைக்கு அனுப்பினன்.

அதன்மீது அந்த பிக்ஷுவானவர், தாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லாமையால், அவ் வதிகாரியை நோக்கி —

"ஐயா! யானோ நிரபராதி; பிக்ஷுகன்; என்னை இனித் தாம் தண்டிப்பதற்குத் தடை யொன்றுமில தன்றோ? யான் தங்களுடைய வசத்தில் அகப்பட்டிருக்கிறேன்.

ஆனபோதிலும், நான்கு நாழிகைப்பொழுது தெய்வப் பிரார்த்தனை செய்துகொள்வதற்கு எனக்கு அனுமதி தயைசெய்வீர்களாக. பின்னர்த் தங்களிஷ்டப்படி என்னைத் தண்டியுங்கள்''

எனப் பிரார்த்தித்தார். அவ்வதிகாரி மனமிரங்கி அவருக்கு நான்கு நாழிகை அவகாச மளித்தான்.

இஃதிப்படி நிற்க, மற்றொருவனைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். நரகசாலாதிகாரியானவன் அவனைச் சக்கரத்தில் வைத்து அழுத்தினவுடனே இரத்தம் பீரிட்டு வெள்ளமெடுத்தது. மரணவேதனை பொறுக்காமல் அவன் அலறி யோலமிட்டான். இந்த அவஸ்தையைக் கண்டு பௌத்த பிக்ஷு பெருந் திகிலடைந்தார்.

பிறகு, நான்கு நாழிகை நேரம் கழிந்தவுடனே தூதர்கள் அம் முனிவரரைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய்க் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரைக்குள் போட்டார்கள். ஆஹா! பரம ஆச்சரியம்!! அந்தத் தீயானது தன் இயற்கைக் குணத்தைவிட்டுச் சாந்தமாகியது; கொதிக்கும் எண்ணெயானது பனிநீரெனக் குளிர்மை காட்டியது; அம் முனிவரரது முகமானது மிகுந்த தேஜஸோடு கூடி ஆனந்த நிலையமென விளங்கியது. அவ் வதிசயத்தைத் தூதர்கள் கண்ணுற்றுப் பயமெய்தி அசோகருக்குத் தெரிவித்தார்கள். அரசர் ஈதென்ன விந்தையெனச் சிந்தித்துப் பிரமித்து, அவ் வற்புதத்தைக் கண்ணாரக் கண்டு தெளிவதே சரியெனத் தேர்ந்து, அதிவேகமாக வந்து பார்வையிட்டுத் திகைத்து நின்றார். உடனே, அம் முனிபுங்கவரைக் கொப்பரையினின்று வெளியிலெடுத்து உபசரித்து, அவருக்குப் பதிலாக நரகாதிகாரியை அதனில் வீழ்த்திக் கொல்லுவித்தார். மற்றும், அந்த நரகஸ்தானத்தை நாசஞ் செய்யுமாறு கட்டளையிட்டார்.

பிறகு, அசோகர் அந்த யதீசுவரரது பாதபத்மங்களிற் பணிந்து மன்னிப்புவேண்டி மன்றாடி நின்றார். பிக்ஷுவானவர் அசோகருடைய தோஷங்களைச் சிறிதும் மனத்திற் கொள்ளாமல், அவருக்குத் தர்மோபதேசஞ் செய்தார். அந்தத் தர்மோபதேசத்தைச் செவிக்கொண்டதன்மீது அசோகர் மிகுந்த பச்சாத்தாப மெய்தினர். அன்றியும் புத்த முனியினிடத்து விசேஷமான பக்தி பாராட்டுவாராயினர். அது முதல் அவர் பௌத்த தர்ம ஸம்ரக்ஷகராகவும் பிரசாரகராகவும் விளங்கலுற்றார்.

இந்த விஷயமாக அசோகாவதானம் என்னும் கிரந்தத்திலும், பாஹியான் என்னும் சீனதேசத்தவர் சஞ்சாரார்த்தமாக இந்தியாவுக்கு வந்திருந்தபோது எழுதிய சரித்திரக் கிரந்தத்திலும், * வியூகி முதலானவர்கள் எழுதியுள்ள கிரந்தங்களிலும் ஒரேமாதிரியான அபிப்பிராயம் காணப்படுகிறபடியால், அசோகர் முதலில் குரூரஸ்வபாவமுள்ளவராக இருந்து, பிறகு ஸத்துவஸ்வபாவமுள்ளவராயினர் என்று சொல்வதிற் சந்தேகத்திற்கு இடமேயில்லை.

குக்குடோத்தியானம் என்னும் தோட்டத்தில் அசோகர் பௌத்த தேவாலயமொன்று நிர்மித்தார். இந்துக்களுடைய தேவாலயமானது "கோவில்" எனவும், துருக்கருடைய தேவாலயம் "மசூதி" எனவும், கிறிஸ்தவருடைய தேவாலயம் "சர்ச்சு" எனவும் கூறப்படுவது போல, பௌத்தர்களுடைய தேவாலயமும் ஜைனர்களுடைய தேவாலயமும் "சைத்தியம்" எனப்படும். மற்றும், அவர் 84,000 ஸ்தூபிகள் (கலசங்கள், சிகரங்கள்) கட்டுவித்தார். மனிதனுடைய சரீரத்தில் 84,000 என்புகள்

* தன் ஊரைவிட்டு வேற்றூருக்குப்போய் இருத்தல் பிரவாஸம்" என்னப்படும். அப்படிப்பட்ட காலத்து விருத்தாந்தங்களின் குறிப்பு "பிரவாஸ சரித்திரம்" என்னப்படும்.

இருக்கின்றமையின், புத்தமுனிவரது தேகத்திலுள்ள என்பு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஸ்தூபியாக 84,000 ஸ்தூபிகளைக் கட்டுவித்ததாகச் சொல்லுகிறார்கள். அவர் கட்டுவித்தவை 3,51,00,00,000 ஸ்தூபிகள் என்று அசோகாவதானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இஃது அதிசயோக்தி (மிகைபடக் கூறல்) எனச் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

பௌத்த தர்மத்தை மேற்கொள்வதற்கு முன்னால் அசோகர் எந்த மதத்தை யனுசரித்து வந்தாரென்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனபோதிலும், அவர் ஜைன மதஸ்தராயிருந்தன ரென்று சிலர் சொல்லுகிறார்கள். அவர் ஹிந்துமதஸ்தரென்று ராஜேந்திரலால் மித்திரர் என்பவர் சொல்லியிருக்கிறார். இவர் சொல்வதே உண்மையாக இருக்கக்கூடுமென்று தோன்றுகின்றது. எப்படியெனின், இந்திரன், அக்கினி, சூரியன், வாயு ஆதியாகவுள்ள தேவதைகளை அசோகர் ஆராதித்து வந்தன ரெனவும், அவ் வாராதனையின் ஓர் அங்கமாகத் தினந்தோறும் 60,000 அந்தணருக்கு அன்னமளித்து உபசரித்து வந்தனரெனவும் கன்னிங்ஹாம் என்னும் அங்கிலேயர் எழுதியுள்ளார்.

இந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தத் தக்க ஊர்க்கதை யொன்று பௌத்தர்களுக்கு வழங்குகின்றது. அந்தக் கதையின்படி, அசோகர் இளமைப்பருவத்தில் பௌத்தர்களை மிகவும் பீடித்துக் கொண்டிருந்தனராம்; புத்தருடைய ஜன்ம ஸ்தானமாகிய கபிலவாஸ்து என்னும் நகரத்திற்குச் சமீபத்திலுள்ள ராமபுரம் என்னும் கிராமத்தில் புத்தருடைய ஞாபகக் குறியாகக் கட்டப் பெற்றிருந்த எட்டு ஸ்தூபங்களுள் ஏழு ஸ்தூபங்களை அவர் இடித்துத் தள்ளினராம். ஹியூகி என்பவர் எழுதியுள்ள கிரந்தத்திலும் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

அசோகர் பராக்கிரம மிகுந்தவர், தன்மூப்புடைய வர், ஸ்வேச்சையின்படியே நடப்பவர், திடமான நிச்சய புத்தி யுள்ளவர், முன்கோபி என்பதற்கு ஐயமில்லை. ஏனெனின், அவர் குரூபி யென்று அவருடைய தந்தை அவரை இளமைப் பருவத்திலேயே அசட்டையாக விட்டு விட்டார்; அதனால், இளமையிற் கிடைக்கவேண்டிய ஸதாசார சிக்ஷை முதலியன அவருக்குக் கிடைக்காமற்போயின. மற்றும், அவருடைய தந்தை அவ ரொருவருக்கு மாத்திரமே மகாதிகாரங் கொடுத்து தக்ஷசிலைக்கு அனுப்பினர். வாலிபத்திலேயே மிகவும் பெரிய அதிகாரம் கிடைத்ததனுல், அவருக்கு ஏற்கெனவே இருந்த துராசாரங்களல்லாமல் வேறு சில துராசாரங்களும் அவருக்கு வழக்கப்படுவதற்கு அவகாசமாயிற்று.

அம்மட்டே யன்றி, மிகச் சொற்பகாலத்திலேயே ராஜ்யாதிகாரமும் அவருக்குப் பிராப்தமாயிற்று. ராஜ்ய பட்டாபிஷேகம் ஆனபிறகு உறவினர்களை யெல்லாம் சிக்ஷித்தார். சின்னுட்குப் பிறகு, களிங்க தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று மிகுந்த கொடுஞ்செயல்கள் புரிந்தார். களிங்கதேச விஜயத்தைக் குறித்து அசோகர் செதுக்கியுள்ள சிலாலேகம் ஒன்றினிற் பின்வருமாறு எழுதப்பட் டிருக்கிறது :—

"தேவப் பிரியராகிய பிரியதர்சி என்னும் அரசர் பட்டாபிஷேகம் செய்துகொண்ட எட்டாம் வருஷத்திற் களிங்கதேசத்தை ஜயித்தார். அப்பொழுது ஒரு லக்ஷத்து ஐம்பதினுயிரம் பேரைச் சிறைபிடித்துக் கொண்டுவந்தார். ஒரு லக்ஷம்பேர் யுத்தத்தில் மாண்டனர்; இன்னும் அனேகர் நாசமடைந்தார்கள்."

இவ்வாறு, ஆதியிலிருந்தே துஷ்கிருத்தியங்கள் வழக்கப்படுவதற்கு அனுகூலமான ஸம்பவங்களே நிகழ்ந்து

வங்கமையின், அசோகர் இளமைப் பருவத்தி லிருந்தே குரூர இருதய முடையவராக இருந்தனரென்பது மிகை படக் கூறலன்று.

அசோகர் துர்வர்த்தனங்களில் எவ்வாறு படிப்படியாகத் தேர்ச்சியடைந்தனரோ, அவ்வாறே ஸத்வர்த்தனங்களிலும் படிப்படியாகத் தேர்ச்சியடைந்து ஸத்வகுண மேற்கொண்டார். ஸதாசாரங்களை யனுஷ்டித்தார். தர்மம் மிகச் செய்தார். வாலிபத்திலிருந்த குரூரகுணம் அடியோடு அழிந்தது. ஜனங்கள் அவரைத் தெய்வமெனக் கொண்டாடலானார்கள். இப்படிப்பட்ட சிறந்த லக்ஷணங்களுள்ளவருக்குச் சமானமானவர் கிறிஸ்து பக்தரான அகஸ்தீன் என்பவர் ஒருவரேயென்று சரித்திரசோதகர்கள் சொல்லுவார்கள்.

அசோகருடைய துஷ்ட ஸ்வபாவங்கள் பௌத்த கிரந்தங்களில் விவரிக்கப்பட் டிருப்பதற்குக் காரணம் அவருடைய மகிமையை அதிகப்படுத்தவேண்டு மென்னும் விருப்பமே யென்று ரமேசசந்திர தத்தர் முதலானவர்கள் தம் கிரந்தங்களில் எழுதி யிருக்கிறார்கள். இஃது ஒப்புக் கொள்ளத் தக்க காரணமாகத் தோற்றவில்லை. ஏனெனின், பௌத்த தர்மத்தை மேற்கொண் டவர்கள் எத்தனையோபேர் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரங்களிலும் விஷயங்கள் உள்ளபடியே எழுதப்பட் டிருக்கின்றன. பௌத்த தர்மத்தின் மாகாத்மியத்தைப் பிரகடிப்பதற்காக அசோகர் பூர்வவயதில் துஷ்டஸ்வபாவமுள்ளவராக இருந்தார் என்பது பயன்படுமோ? அதனால் பௌத்த தர்மத்தின் மகிமை அதிகப்படுமோ? பௌத்த தர்மத்தின் மகிமையை அதிகப்படுத்துவதற்காக அவருக்குத் துஷ்ட ஸ்வபாவத்தை ஆரோபிக்கத் தக்க அற்ப

குணம் பௌத்தர்களுக்கு ஒருகாலும் இராது என்று சொல்வது பொருந்தாதோ?

அதுநிற்க, அசோகருடைய நடவடிக்கையைக் குறித்து அனேகர் அனேகவிதமான காரணங்களைச் சொல்லுகிறார்கள். யௌவனப் பிராயம் கழிந்து முதிர்வயது வந்தவுடன், அதற்கு முன்னுற் செய்திருந்த கெட்டகாரியங்களை நினைத்து அவர் பச்சாத்தாபப் பட்டனர் என்பார் சிலர். தக்ஷசிலை, பாஞ்சால தேசம் முதலிய இடங்களிலிருந்த பொழுது அவருக்குத் துஷ்டகுணங்கள் வழக்கப்பட்டன; பிறகு, மகத தேசத்திற்கு வந்தவுடனே அவருக்கு இயற்கையிலமைந்துள்ள நற்குணங்கள் மறுபடி தலையெடுத்து விளங்கலாயின என்பார் வேறுசிலர். களிங்கதேசத்தை ஜயித்தபொழுது அனேகாயிரம் ஜனங்கள் மாண்டுபோனதைக் கண்டு பெரும் பீதி கொண்டவராகி அவர் சாந்தமான சித்தமுடையவராயினர் என்பார் இன்னும் சிலர்.

மேற்சொல்லிய காரணங்களினுல் அசோகருக்கு நற்குணமும் நன்னடக்கையும் வழக்கத்திற்கு வந்தனவென்றே நாம் ஊகிக்கத் தக்கதாக இருக்கின்றது. அவருக்குப் பௌத்த தர்மத்தைப் போதித்த பிக்ஷுவின் பெயர் உபகுப்தர். அந்த உபகுப்தருடைய உபதேசம் அசோகருக்கு நற்குணமூட்டி நன்னடக்கை பயிற்றுவதற்கு நிமித்தமாத்திரமாகவே இருந்திருக்கலாம் என்று சொல்வதும் பொருந்தும்.

அசோகரது ஆசாரியராகிய உபகுப்தர் என்பவரைப் பற்றி இதிஹாஸங்களில் எங்கும் குறிப்புக்கள் அகப்படவில்லை. அவரைப்பற்றி இரண்டொரு பௌத்த கிரந்தங்கள் மாத்திரம் சொல்லி யிருக்கின்றன. அவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் விஷயங்களாவன:

உபகுப்தர் என்பவர் மதுரா நகரவாஸி; அவர் வைசிய குலத்தவர்; 17-ஆவது வயதில் பிக்ஷுவாகி, 20-ஆவது வயதில் "அர்ஹத்" என்னும் மகாபதவியைப் பெற்றவர்; பெரும்பாலும் மலைக் குகைகளில் வஸித்துக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருப்பர் — என்பனவாம்.

சீனதேசத்தினின்று புறப்பட்டு உலக ஸஞ்சாரம் செய்யக்கருதி 'ஹியான் - த்ஸாங்' என்பவர் இந்தியா தேசத்திற்கு வந்து சிறிது காலம் தங்கி, அங்கு மிங்கும் அலைந்து பார்த்தார் என்பதும், அப்படி அவர் கண்டறிந்த விஷயங்களை எழுதிவைத்துள்ளார் என்பதும் எல்லாரும் கேட்டறிந்த விஷயங்களே. தம் ஊரைவிட்டு வேற்றூருக்குப் போய்த் தங்கியிருப்பது 'பிரவாஸம்' எனப்படும்; அப்படிச் சிறிதுகாலம் தங்கியிருப்பவர் 'பிரவாஸி' எனப்படுவர்; அவர் எழுதிவைக்கும் விஷயக் குறிப்புக்கள் 'பிரவாஸ சரித்திரம்' எனப்படும். அந்த 'ஹியான் - த்ஸாங்' என்னும் பிரவாஸியானவர் உபகுப்தர் நிலைகொண்டருளியிருந்த ஸ்தலத்தைப் பற்றித் தமது பிரவாஸசரித்திரத்திற் சொல்லியிருக்கிறார். அந்த ஸ்தலம் 'வேணுவனம்' என்னும் பெயருடையது என்று 'வீயூகி' என்பவருடைய கிரந்தங்களினால் விளங்குகின்றது. 'வேணுவன'த்தைப்பற்றி 'அசோகாவதானம்' என்னுங் கிரந்தமும் கூறுகின்றது.

தமக்குக் குருவாக ஏற்பட்டபிறகு, தம்முடைய நிஜ ராஜதானியாகிய 'ராஜக்கிருஹம்' என்னும் பட்டணத்தில் எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று உபகுப்தரை அசோகர் மிகவும் வேண்டிக்கொண்டார். அதற்கு அம் முனிபுங்கவர் "எமது குகையே எமக்கு உத்தமமானது" என்று மறுமொழி பகர்ந்தார். அவர் அப்படிச் சொல்லியபோதிலும் அசோகர் தமது ராஜதானியிற் பெரிய

குகை யொன்றை அவருக்காக அமைத்து வைத்தார். உப குப்தர் என்பவர் இந்திரிய நிக்கிரகஞ் செய்த மகாத்மாவா வர்; அவர் மிகுந்த பரோபகாரபுத்தி யுடையவர். அவ ரைப்பற்றி அபூர்வமான கதை யொன்று பௌத்த கிரந் தங்களில் சொல்லப்பட் டிருக்கின்றது. அதனை இங்குச் சுருக்கமாகக் குறிப்போம்:

மதுரா பட்டணத்தில் உபகுப்தர் தமது வைசியகுல தர்மத்தை யனுசரித்துப் பலசரக்குக்கடை யொன்று வைத்துக்கொண்டு ஜீவனஞ் செய்து வந்தார். அந்த ஊரில் வாஸவதத்தை என்னுமொரு வேசி இருந்தாள். அவளு டைய வேலைக்காரி ஒருநாள் உபகுப்தருடைய கடைக்கு வந்து ஸுகந்ததிரவியங்கள் வாங்கிக்கொண்டு போனாள். அப்பொழுது அவள் அவருடைய ஸௌந்தரியாதிசயத் தைக்கண்டு மனமகிழ்ந்து, தன் வியப்பைத் தன் யஜமானி யாகிய வாஸவதத்தைக்குத் தெரிவித்தாள். அவளுடைய வார்த்தையைக் கேட்டது முதல், உபகுப்தரைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் அந்த வேசிக்கு உண்டாகியது. வர வர அந்த ஆசை மிகுந்து அவள் "தமது தரிசன ஸஹவாஸ லாபத்தை விரும்புகிறேன்" என்று வணக்க மாகத் தன் காதலைக் காட்டிக் கடிதமொன்றெழுதி அத னைத் தன் வேலைக்காரியின் வசமாக அவருக்கு அனுப்பி னாள். அதற்கு அவர், "நான் ஏழை, என் தரிசனத்தி னால் உனக்கு வரும் லாபமென்ன? உன்னை நான் பார்க்க வேண்டிய சமயம் இனி ஒரு கால் வரும்" என்று பதில் சொல்லி யனுப்பிவிட்டார். அந்தப் பதிலினால் திருப்தி யடையாமல் வாஸவதத்தையானவள், "தங்களுடைய பணம் எனக்கு ஒருகாசுகூட வேண்டாம். தங்களைப் பார்த்துக் களிக்கும் பாக்கியம் அளிக்கப் பிரார்த்திக் கிறேன். வேறெதுவும் எனக்கு வேண்டாம்" என்று மறு

படி எழுதியனுப்பினுள். அதற்கும் அவர் இணங்காமல் முன்போலவே பதில் சொல்லிவிட்டார்.

சிறிதுகாலம் சென்றபிறகு, ஒரு சங்கதி நடந்தது. வாஸவதத்தையின் காதலன் அவளுடைய வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கையில் அவளுடைய வைரியொருவன் அவனைக் கொன்றுவிட்டான். ராஜதூதர்கள் வந்து அதைப் பற்றி விசாரித்து உண்மையை உணராமல், திரவிய ஆசையினுல் வாஸவதத்தையே அவனைக் கொன்றிருக்க வேண்டுமென்று எண்ணி, அந்தப்படி அரசனுக்குத் தெரிவித்தார்கள். ராஜஸபையிலுள்ளவர்களும் அப்படியே தீர்மானித்து அவளை அங்கச்சேதஞ்செய்து சுடுகாட்டில் விட்டு விடவேண்டு மென்று சிக்ஷை விதித்தார்கள். அந்தச் சிக்ஷை நிறைவேறியது. அப்படி வாஸவதத்தை கஷ்டதசைக்கு வந்தபோதிலும், அவளுடைய வேலைக்காரி மாத்திரம் யஜமானி யிடத்து வைத்திருந்த நன்றியறிவினுல், அவளுடனேயே இருந்தாள்.

அந்த வர்த்தமானம் உபகுப்தருக்குத் தெரிந்தது. உடனே அவர் வேலைக்காரனை யழைத்துக் கொண்டு சுடுகாட்டுக்குப் போனுர். அவரைப் பார்த்தவுடன் வேலைக்காரியானவள், அவர் இன்னுரென்று வாஸவதத்தைக்குத் தெரிவித்தாள். அப்படி அவயவக் குறைகள் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் அவரைத் தரிசிக்கவேண்டி வந்ததற்காக அவள் வெட்கமும் துக்கமுமுற்றுக் கலங்கினுள். உபகுப்தர் அவளுக்கு அருகிற்போய் உட்கார்ந்துகொண்டார். அப்பொழுது வாஸவதத்தை அவரை நோக்கி, "ஸ்வாமி, இந்தத் தேகமானது நாண்மலர்ந்த நறுமலரே போன்று தருணிப் பிராயத்தில் தளதள வெனும் தேஜஸோடு கூடி வெகு விலை வாய்ந்த வஸ்திராலங்காரங்களினுல் விளக்கமுற்று, காண்போர் மனத்தைக் கவரும் நிலைமையிலிருந்த

காலத்தில் நான் வருந்தி வேண்டியும் தரிசன மளித்திரில்லை. ஐயோ! இப்பொழுது இப்படிப்பட்ட கஷ்டமும் துரதிருஷ்டமும் எனக்கு வாய்த்திருக்கின்றனவே! ஆனந்தம், ஸுகம், ஸௌந்தரியம் முதலானவைகளெல்லாம் மாயமாய்ப் போயின. இப்படிச் சின்னபின்னமுற்று வெறுக்கப்பெறும் நிலைமையிலுள்ள சரீரத்தைக் காண்பதற்கு ஏன் வந்தீர்கள்?'' என்று வினவினள்.

அவளுடைய முறைப்பாடுகளைச் செவியுற்று உபகுப்தர் மிகவும் பரிதபித்துக் கண்ணீர் சொரிந்து அவளைப் பார்த்து, ''வாஸவதத்தாய்! இதுவே உன்னைப் பார்ப்பதற்கு உற்ற சமயமாகும். மானிடர்க்குரிய இம்மைச்சுகங்களனைத்தும் இதுபோலவே நிலையாது அழியத்தக்கவையென்று தெரிந்துகொள்ளும்பொருட்டே இவ்விடத்திற்கு வந்தேன்'' என்று சொல்லிப் பிறகு, அவளுடைய மனத்தைத்தேற்றி அவளுக்குத் தர்மோபதேசஞ் செய்தார். அவருடைய வாயினின்று பொழிந்த வாக்கு என்னும் அமிர்ததாரையினால் வாஸவதத்தையின் துக்காக்கினி ஆறியது; அவளுடைய மனம் சாந்தியடைந்தது. அதன் பிறகு அவள் புத்ததர்ம சங்கங்களை நாடிக் காலக்கிரமத்தில் உயிர் நீத்தாள்.

பௌத்த மதம்

அசோகருடைய நடவடிக்கைகள் எல்லாம் மாறியதைக் கண்டு சிலர் சந்தோஷப்பட்டார்கள். அவர் பௌத்த தர்மத்தைக் கைப்பற்றியதற்காக இந்துக்கள் மிகவும் விசனப்பட்டார்கள். அவர் பௌத்த தர்மோபதேசம் பெற்ற பிறகு தினந்தோறும் போதி விருக்ஷத்தி

னடியில் உட்கார்ந்து தியானஞ்செய்துகொண் டிருப்பார். அவர் அப்படி எப்பொழுதும் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு திஷ்யரக்ஷிதை என்னும் அவருடைய ராணி அந்த மரத்தை மிகவும் இரகசியமாக வெட்டுவித்தாள்.

அந்தக் காரியமானது அசோகருடைய பூர்வவயதில் நடந்திருக்குமாயின், அரமனையி லுள்ள ரனைவரையும் அவர் மிகக் குரூரமாகக் கொல்லுவித்திருப்பார். இப்பொழுது ஆசாரியராகிய உபகுப்தருடைய தர்மோபதேசத்தினல் அவருடைய மனம் மிகுந்த சாந்தமடைந்திருந்தமையின், அவர் அதனைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆயினும், அதனல் அவருடைய மனம் மிக வருந்தியது. அந்த மரம் மறுபடி முளைத்துக் கொழுந்துவிடுமளவும் அவர் பட்டினிவிரத மேற்கொண்டிருந்தார் என்பார் சிலர்.

ஸகல ஜனங்களும் பௌத்ததர்மத்தை யனுஷ்டிக்க வேண்டுமென்று பிரஸித்த பத்திரிகைகளை அசோகர் எல்லாத் தேசங்களுக்கும் அனுப்பினர். பௌத்த பிக்ஷுக்களிடத்தும் பிக்ஷுணிகளிடத்தும் விசேஷமான கௌரவம் பாராட்டிவந்தார். அவர்களுக்குத் திரவியங் கொடுத்துச் சகாயஞ்செய்து, அவர்களைக் கொண்டு பௌத்தமதம் பரவுமாறு செய்தார். அரசருடைய மதானுஷ்டானத்தைக் கண்டு அவருடைய ராஜ்யத்திலுள்ள செல்வவான்கள் அவரைப்போலவே தாமும் அனுஷ்டிக்க வேண்டுமென்னும் எண்ணங் கொள்வாராயினர். இதனல் பிராம்மணர்களுக்குக் கௌரவமும் ஆதரவும் குறையலாயின. லௌகிகப் பெருமையை நாடிய பிராம்மணர் சிலர் பௌத்த பிக்ஷுக்களைப்போல வேஷந்தரித்து, அந்தச் சங்கத்திற் சேர்ந்தனர்.

காலக்கிரமத்தில் பௌத்த ஸங்கத்திலும் அனேக விதமான அனுசாரங்கள் பிரவேசித்தன. பௌத்த ஸங்கத்தவரைக் கண்டித்துத் திருத்தத்தக்க அதிகாரி எவருமில்லை. மொக்கலீபுத்திரசிஷ்யர் என்பவர் ஒருவர், பெயருக்கு மாத்திரம் பௌத்த பிக்ஷுகர்களின் ஸபைக்கு அதிபதியெனப் பட்டம் வகித்திருந்தார். அவரை எவரும் லக்ஷியம் செய்யாததனால், அவர் காட்டுக்கேகினார். இந்த விருத்தாந்தங்களெல்லாம் அசோகருக்குத் தெரிந்தபிறகு,

"இக் கஷ்டங்களை நிவர்த்திப்பிக்கிறதற்காக ஒருசபை கூட்டப்பெறும். வாதவிவாதங்கள் செய்வதற்கு இச்சையுள்ளவர்களெல்லாரும் சித்தமாக இருக்க வேண்டும்"

என்று அவர் ஓர் அதிகாரியின் மூலமாகச் சொல்லியனுப்பினார். அந்தச் செய்தியைத் தெரிவிக்கப் போன அதிகாரியானவன், "அரசரது கட்டளையை மீறி நடப்பவர்களைச் சிரச்சேதம் செய்வதற்கு நான் அதிகாரம் பெற்றிருக்கிறேன்" என்னும் வார்த்தைகளையும் சேர்த்துப் பிரகடித்தான்.

அந்தப் பிரகடன வாக்கியங்களைக் கேட்டுக் கோபாவேசங்கொண்ட பிக்ஷுவொருவன் அதற்கு எதிரிடையாகச் சில வார்த்தைகளாடினன். பிரகடனதிகாரிக்கும் அவனுக்கும் வாக்குவாத முண்டாகியது; வார்த்தைகள் தடித்தன. அதிகாரியானவன் குரோத பரவசனாகி அந்தப் பிக்ஷுவின் தலையை வெட்டி வீழ்த்தினன். அதனால், முன்னிருந்த கஷ்டத்தை விட அதிகமானதொரு பெருங் கஷ்டம் நேர்ந்தது. தேசமெங்கும் குழப்ப மதிகரித்தது.

அந்த விருத்தாந்தத்தைக் கேட்டு அசோகர் மிகவும் பரிதபித்து, அந்தக் கொலையைத் தாம் செய்ததாகத் தம் தலைமீது பழிசார்ந்ததே யெனத் துக்கித்துத் தம்மைத் தாமே தூஷித்துக்கொண்டார். பண்டிதர்களாகிய பௌத்

தபிக்ஷுக்களைச் சபை கூட்டி, அதற்குப் பிராயச்சித்தம் என்னவென்று வினவினர். அவர்களுக்குள் அபிப்பிராயங்கள் வேறுபட்டமையின், அவர்கள் அதற்குப் பிராயச்சித்தம் இன்னதென்று தீர்மானிக்காமற் போயினர். பின்னர், மொக்கலீபுத்திரசிஷ்யரை மிகுந்த வைபவத்தோடு வரவழைத்து அவருடைய பாதகமலங்களிற் பணிந்து அசோகர் கைகூப்பிப் பிரார்த்தித்து நின்று, நடந்த விஷயங்களை விண்ணப்பஞ்செய்து, தமக்குப் பிராயச்சித்தம் விதிக்குமாறு வேண்டினர். விருத்தாந்தங்களை யெல்லாம் விவரமாகக் கேட்டு அந்த முனிபுங்கவர், — "சிரச்சேதம் செய்யுமாறு ராஜகட்டளை இல்லை; அதிகாரி நல்லுத்தேசத்தோடேயே அனுப்பப்பட்டான். அவன் தன்னுடைய ஸாஹஸத்தினல் அக்கிரமஞ் செய்தான். உண்மையில் அரசரது நல்லெண்ணம் ஸகல ஜனங்களின் க்ஷேமத்தை நாடியதாக இருக்கின்றது'' என மொழிந்தார். அந்த வார்த்தைகளுக்கு எவரும் பதிலுரையாமல் எல்லாரும் வாளா இருந்தார்கள்.

மேற்சொல்லிய சங்கதி நடந்து ஏழுநாளைக்குப் பிறகு (கி. மு. 241) புத்த மகாசபை கூட்டப்பெற்றது. மொக்கலீபுத்திரசிஷ்யர் நிவஸித்துக்கொண் டிருந்த கங்காதீரத்தில் மகா விசாலமான மண்டபமொன்றை நிர்மித்து, அதனில் ஒருபுறத்தில் அரசருக்காகச் சிங்காஸனமமைத்து வைத்தார்கள். பிக்ஷுகர்களைப் பரீக்ஷிப்பதே அந்தச் சபையின் முக்கியமான காரியமாகும். ஒவ்வொரு பிக்ஷுவும் ஸபாநாயகரண்டை போய், அவர் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி கூறல்வேண்டும். அந்த மறுமொழியானது பௌத்தமதக் கிரந்தமாகிய திரிபிடகத்திற்கு இசையாதிருப்பின், உடனே அவனுடைய காஷாய வஸ்திரத்தைக் களைந்து, வெள்ளையாடை யுடுத்தி யவனைக் கிரு

கஸ்தாசிரமத்திற்கு அனுப்பிவந்தார்கள். இவ்வாறு அறுபதினயிரப் பிக்ஷுகர்களைப் பௌத்த ஸங்கத்தினின்று நீக்கினார்கள். போலி பிக்ஷுகர்களும் துஷ்டர்களும் களையப் பெறவே, தர்மத்திற் சிரத்தையுள்ள உண்மையான பிக்ஷுகர்கள் மாத்திரமே மிகுந்தார்கள். அவர்களுக்குப் பௌத்த ஸங்கத்தில் இடங்கொடுத்து ஆதரித்தார்கள்.

அந்த புத்த மகாசபையின் இரண்டாவது உத்தேசம் பௌத்த தர்மத்தை ஸ்திரப்படுத்துவதற்கான உபாயங்களைத் தேடுவதாகும். இனி அந்த விஷயத்தைக் கவனித்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யத் தீர்மானித்தார்கள். அங்கே வந்திருந்த பிக்ஷுகர்களுள் பண்டிதர்களாக ஆயிரம் பேரைப் பொறுக்கி யெடுத்து ஒரு தனிச் சங்கமாக வமைத்து, அவர்களைக் கொண்டு திரிபிடகம் என்னுங் கிரந்தத்தைச் சோதிக்கத் தொடங்கினார்கள். "திரிபிடகம்" என்றால் 'மூன்று கிரந்தங்களின் தொகுதி' என்று அர்த்தமாம். புத்தரது நிர்வாணத்திற்குப் பிறகு மகாகாசியபர் என்பவர் ஸபை கூட்டி நிச்சயித்த ஸூத்திரங்கள், விநயம், அபிதர்மம் என்னும் மூன்று தர்ம கிரந்தங்களுஞ் சேர்ந்து "திரிபிடகம்" எனப்படும். இம் மகா கிரந்தத்தை ஒன்பது மாதகாலம் மிகச் சிரமப்பட்டு நிர்த்தாரணஞ் செய்தார்கள்.

ஸூத்திர பிடகத்தில் உபாஸகர்களைப்பற்றிய விஷயங்களும், விநயபிடகத்தில் பௌத்த பிக்ஷுகர்கள், பிக்ஷுணிகள் ஆகிய இவர்களுடைய நித்தியாசார முறைகளும், அபிதர்ம பிடகத்தில் பௌத்த தரிசனமும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பௌத்த தர்மத்தைப்பற்றியுள்ள மதபேதங்கள் எல்லாவற்றையும் பரிஹரித்து ஸர்வஜன ஸம்மதமாக இருக்கக்கூடிய முறையில் தர்மத்தை நிர்ணயிப்பதற்காக அசோ

கர் மிகப் பிரயாஸப்பட்டுச் சபைகூட்டுவித்து, அப்படிப் பட்ட தர்மத்தை நிர்ணயித்து, அதனை ஆசரணைக்குக் கொண்டு வந்தார். அந்த முறையே சிங்களத் தீவில் இன்றைக்கும் நடைபெற்று வருகின்றது. அசோகர் இறந்துபோனபிறகு, மறுபடி அனேக பேதங்கள் உண்டாயின. இப்படி வேறுபட்ட மதங்களே இப்பொழுது சீனு, பர்மா, ஸயாம், திபேத்து, ஜபான், நேபாளம், தார்த்தாரம் முதலான தேசங்களில் வியாபித்திருக்கின்றன.

ஆனபோதிலும், பர்மா, ஸயாம் என்னு மிரண்டு தேசங்களிலும், ஆஹாரவிஷயத்தை மாத்திரம் தவிர்த்து, மற்றத் தர்மங்களெல்லாம் அசோகர் பரிசோதித்து ஏற்படுத்தியபடியே இன்றைவரைக்கும் நடந்துவருகின்றன.

அன்றியும், அந்த மகாசபையார் தர்மசோதனை செய்ததேயன்றி, தம் மதத்தைப் பரவச் செய்வதற்காகத் தர்மோபதேசகர்களைப் பற்பல தேசங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஸூசனை செய்தார்கள். அந்த ஸூசனையை மேற்கொண்டு அசோகர் பல தேசங்களுக்குத் தர்மோபதேசகர்களை யனுப்பினுர். அந்த விவரம் "தீபவமிசம்" எனுங் கிரந்தத்தில் எட்டாம் அத்தியாயத்திலும், "மகாவமிசம்" எனுங் கிரந்தத்தில் பன்னிரண்டாம் அத்தியாயத்திலும் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கின்றது:—

பிறத்தேசங்களுக்குத் தர்மோபதேசகர்களை அனுப்பி மதக்கொள்கைகளைப் பரவச்செய்தவர்கள் புத்தரும் அசோகருமே யாவார்களென்றும், கிறிஸ்தவர்கள் பாதிரிமார்களை யனுப்பி அங்கங்கே தமது மதத்தைப் பரவச் செய்து வருவது புதுமையன்றென்றும், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே அசோகர் அந்தக் காரியஞ் செய்துவந்தாரென்றும் ஜெனரல் கன்னிங்காம் என்னும் துரை எழுதியிருக்கின்றுர்.

தேசங்கள்	தர்மோபதேசகர்கள்
காச்மீரம், காந்தாரம் (காபூல் நதிக் குத் தென்கரை)	மஜ்ஜாந்திகன்
மஹீசம் (மைசூர்)	மகாதேவன்
வனவாஸி (இது ராஜபுத்திர ஸ்தானத்திலுள்ள பாலைவனம் என்று 'ரிஸ் டேவிஸ்' என்னும் துரை சொல்லுகிறார்)	ரக்ஷிதன்
அபரஸ்தகம், அல்லது, அபராந்தகம் (பாஞ்சால தேசத்திற்கு மேற்புறம்; இது கொங்கண தேசம்)	தர்மரக்ஷிதன் *
மகாராஷ்டிரம்	மகா தர்மரக்ஷிதன்
ஹிமவந்தம் (இமயமலையின் அடிவாரம்)	மஜ்ஜிமன், துரபிஸாரன், ஸஹதேவன், மூலகதேவன்
யோனம் (ஸிரியா முதலான தேசங்களும், கிரீக்கு தேசமும்)	மகாரக்ஷிதன்
ஸ்வர்ணபூமி (பிரம்ம தேசம்-பர்மா)	ஸோனன், உத்தரன்
சிங்களத்தீவு (ஸிலோன்)	மகேந்திரன் (மஹிந்தன்)

* இவன் 'பாக்ட்ரியா' தேசத்தி லிருந்தவனும்.

மகேந்திரன், சங்கமித்திரன், குநாலன்

ராமாயணத்திற் குறிக்கப்பட் டிருக்கும் லங்காபுர மானது சிங்களத் தீவேயாயின், இந்துஸ்தானத்திற்கும் அதற்கும் சம்பந்தம் தொன்று தொட்டு ஏற்பட்டிருக் கின்றதென்று கூறல் தகும். இந்தத் தீவில் அரக்கர்கள் வசித்துக்கொண் டிருந்தார்களென்று தீபவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. இதனால், இதுவே லங்காபட்டண மென்று தோன்றுகின்றது. ஆயினும், பண்டிதர்கள் சிலர் இந்த வார்த்தையை ஒப்புக்கொள்ளுவதில்லை. இந் தத் தீவில் வசித்துக்கொண் டிருந்தவர்கள் எவர்களாக இருப்பினும், அவர்கள் காட்டு மனிதர்களாகவே இருக்க வேண்டுமென்னும் விஷயத்தில் தர்க்கம் இல்லை. அந்த ஜனங்களை இந்துஸ்தானத்து மன்னன் ஒருவன் வென்று, அந்தத் தீவைத் தன் வசப்படுத்திக் கொண்டு ஆண்டு வந்தன னென்பது உண்மையே. அசோகருடைய காலத் தில் இந்தத் தீவை திஷ்யன் என்னும் அரசன் பாலித்து வந்தான். அவன் அசோகருடைய கீர்த்தியைக் கேட்டுத் தானும் அவரைப்போல 'தேவானும் பிரிய:' என்னும் பட்டம் தரித்துக் கொண்டான். தர்மோபதேசகர்களை அசோகர் பற்பல தேசங்களுக்கு அனுப்பினா ரென்று கூறியிருக்கின்றோமன்றோ? அப்படி அனுப்பப்பட்டவர்க ளுள், சிங்களத் தீவிற்குப் போன மகேந்திர னென்பவன் அசோகருடைய குமாரன். அசோகருக்குப் பட்டாபி ஷேக மானபிறகு ஆறும் வருஷத்தில் மகேந்திரன் உல கத்து விவகார விஷயங்களில் வெறுப்புற்று துறவறம் (பிக்ஷு விரதம்) பூண்டு இகலோகத்துப் பற்றுக்கள் அற்று வர்த்தித்துவந்தான்.

சிங்களத் தீவின் அரசனாகிய திஷ்யனுக்கு அசோகனிடத்தும் பௌத்த மதத்தினிடத்தும் பக்தியும் விசுவாசமும் இருந்தமையின், அவன் மகீந்திரனுக்கு மிகுந்த மரியாதைகள் செய்தான். * சிங்கள தேசத்திற்கு மகீந்திரன் போனபொழுது அநேக பிக்ஷுகர்களைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போனான்; பாடலீபுத்திரத்து மகா சபையில் பரிசோதித்துப் புதிதாகச் சித்தஞ் செய்யப்பட்ட திரிபிடகம் என்னும் பௌத்தமத கிரந்தத்தையும் அதன் பாஷியங்களையும் எடுத்துக்கொண்டு போனான்.

சிங்களாதிபதியான திஷ்யன் என்பவன் மகீந்திரனிடத்து பௌத்ததர்ம தீக்ஷை பெற்று, தன்னுடைய ராஜ்யத்தில் ஆங்காங்குப் பௌத்தத் துறவிகள் வசிப்பதற்கேற்ற மந்திரங்களைக் கட்டுவித்தான். அந்த மந்திரங்கள் விஹாரங்கள் எனப்படும்; அவை மிக அழகாக இருக்கும். மகீந்திரனுக்காக அநுராதபுரத்திற்குச் சமீபத்தில் ஒரு விஹாரம் கட்டுவித்தான். அஃது இப்பொழுது சிதிலமடைந்திருக்கின்றது. அந்த இடம் மிக ரம்மியமானது; நாற்புறங்களிலும் உன்னதமான பர்வதங்களினாற் சூழப்பெற்றது; நடுவிற் பலவகை மரங்கள் அடர்ந்த காடு அமைந்தது; ஏகாந்த வாசத்திற்கு மிகவும் யோக்கியமானது. மகீந்திரன் அவ்விடத்திலே வசித்துக்கொண்டு தியானதாரணம் செய்துகொண் டிருந்தான். அங்கேயே

---

* இதற்கு முன்னரே அசோகருக்கும் திஷ்யனுக்கும் பத்திர விவகாரம் (உத்தரப் பிரத்தியுத்தரங்கள்) நடந்துகொண்டிருந்ததென்றும், பரஸ்பரமாக ஒருவனுடைய ராயபாரி (Ambassador) மற்றொருவனுடைய ஸம்ஸ்தானத்தில் இருந்துகொண்டிருந்தானென்றும், அசோகருடைய ராயபாரியே திஷ்யனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தா னென்றும் ரிஸ் டேவிஸ் (Rhys Davis) என்னும் பெரிய பௌத்த நூலாசிரியர் எழுதியிருக்கின்றார்.

அவன் கிரியாண மெய்தினன். அவனுடைய சமாதியை மிகவும் பத்திரமாக இன்றளவும் காப்பாற்றி வருகின்றார்கள். மகம்மதியர்கள் இந்து தேசத்திற் பிரவேசித்துத் தேவாலயங்களையும், ஆசிரமங்களையும், சமாதி ஸ்தலங்களையும் பாழாக்கினார்கள். ஆனபோதிலும், சிங்களத் தீவில் அவர்கள் பிரவேசியாததனால், அங்கே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பௌத்த விஹாரங்களும், ஸ்தூபிகளும், சமாதி ஸ்தலங்களும் இன்றைக்கும் நாசமாகா திருக்கின்றன.

திஷ்யராஜன் பௌத்த மதத்தை மேற்கொண்டதனால், அவனுடைய ராணியாகிய * அநுலை என்பவளும் அவளுடைய தோழிகளும் மகிந்திரனிடத்திற்கு வந்து, தமக்குத் தர்மோபதேசஞ் செய்யும்படி அவனை வேண்டினார்கள். அதற்கு மகிந்திரன், "ஸ்திரீகளுக்குத் தர்மோபதேசஞ் செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை. அதற்கு என் தங்கையாகிய சங்கமித்திரை என்பவளை வரவழைக்கின்றேன்; அவள் உங்கள் விருப்பத்தை ஈடேற்றுவாள்" என்று பதில் கூறினன். பிறகு, திஷ்யராஜன் தன்னுடைய சேவகர்களை யனுப்பி சங்கமித்திரையையும் அவளுடைய சகிகளான உத்தரை, ஏமை, மாலாகல்லை, அக்கினிமித்திரை, தபை, பர்வதச் சின்னை, மல்லை, தர்மதாசி முதலான பிக்ஷுணிகளையும் வரவழைத்தான். † திஷ்யனுடைய

* அநுலை என்பவள் திஷ்ய ராஜனுடைய ராணியின் தங்கை யென்று டாக்டர் கோபல்ஸ்டன் என்னும் துரை சொல்லுகின்றார்.

† மகிந்திரனும் சங்கமித்திரையும் சிங்களத்திற்குப் போகவில்லை யென்று புரோபெஸர் ஒல்டன்பர்க் என்னுந் துரை சொல்லுகின்றார். அவருடைய வார்த்தை அநேக கிரந்தங்களுக்கும் பிரத்தியக்ஷமான நிதரிசனங்களுக்கும் விரோதமாக இருக்கின்றது.

ராணிக்கும் அவளுடைய சேடிகளுக்கும் சங்கமித்திரை தீக்ஷையளித்து அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றினள்.

மகிந்திரனுடைய பிரயத்தனங்கள் நிறைவேறுவதற்கு அவனுடைய தந்தையின் பிரபாவமும், சிங்களேசுவரனை திஷ்யனுக்கு அசோகனிடத்துள்ள பூஜ்ய புத்தியும் மாத்திரமே காரணங்களாகா. மகிந்திரன் ராஜபுத்திரனுய் இருந்து தர்மவிஷயத்தில் மிகுந்த பக்தியுடையவனுய் இருந்தான்; அதன் நிமித்தம் வைராக்கியம் பூண்டு துறவற மேற்கொண்டான்; சாந்தமும், கம்பீரமான நடவடிக்கையும், விலக்ஷணமான புத்தியும் உடையவனுய் இருந்தான்; ஆக்ஷேபத்திற் கிடமில்லாத ஸ்மரண சக்தியும், ஞான விசேஷமும் ஸதாசாரமும் உள்ளவனுய் இருந்தான்.

இவ்வளவு மேன்மையான யோக்கியதைகள் அவனிடத்து அமைந்திருந்தமையின், அவன் ஜனங்களுடைய மனங்களை எளிதிற் கவர்ந்தான்; அவர்களெல்லாரும் அவனை நாடி, அவனிடத்துப் பக்தியும் விசுவாசமுங் கொண்டாடினர்கள். ஆனதனுலே, அவனுக்குச் சிங்களத்தில் அவ்வளவு ஜயமுண்டாயிற்று.

இவ்வளவு சிரேஷ்டமான குணங்கள் பொருந்தியிராவிடின், தந்தையின் மகிமையினுலும், திஷ்யனது சகாயத்தினுலும் மாத்திரமே அவன் அவ்வளவு பெருங்காரியம் சிங்களத்தீவிற் செய்திருக்கமுடியாது.

அப்பொழுது மகிந்திரனுக்கு வயது 20. சங்கமித்திரைக்கு வயது 19. அவ்வளவு சிறுபிராயத்தவர்கள் தர்மத்தினிடத்து பேரவா பூண்டு நடப்பதைக் காணும்பொழுது, அவர்களைப்போலவே ஒழுகவேண்டும் என்னும் ஆசை எப்படிப்பட்டவர்களுக்கும் எழுமன்றே? அது நிற்க,

சிங்களத்தவர்கள் தம்முடைய க்ஷேமத்தின் பொருட்டே அவ்வளவு தூர தேசத்திற்கு அவரை ஈசுவரன் அனுப்பிக் கொடுத்தாரென்று எண்ணினர்கள். அவர்களுடைய உபதேசாமிருதத்தைப் பானஞ்செய்து சகல ஜனங்களும் தங்களுடைய பாவங்களையெல்லாம் போக்கடித்துக்கொண்டார்கள். சிறு பிராயம் வாய்ந்த தமையனும் தங்கையும் செய்த நற்போதனையினல் பிற மதஸ்தவர்களான இரண்டு மூன்று லக்ஷம் ஜனங்கள் பௌத்ததர்மத்தை மேற்கொண்டார்கள். இந்த அருங்காரியம் உபதேசகர்களுடைய குண விசேஷத்தினலும் வைராக்கியத்தின் பிரபாவத்தினுலுமே சாதிக்கப்பெற்றதென்பது எல்லா மதத்தவர்களும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

சங்கமித்திரை இலங்கைக்குப் போகையில் மற்றொரு மகாவிசேஷமான பதார்த்தத்தையும் கொண்டுபோனள். புத்தகயையில் சாக்கிய கௌதமர் ஓர் அரசமாத்தினடியிற் பத்மாசனத்துடன் அமர்ந்திருந்து தவஞ்செய்து திவ்விய ஞானம் எய்தினர். அதுமுதற்கொண்டு அந்த அரச மரத்திற்குப் போதி விருக்ஷமென்றும், ஞான விருக்ஷமென்றும் பெயர். அந்த மரத்தின் கிளையொன்றை அவள் தன்னுடன் எடுத்துக்கொண்டு போய், அதனைச் சிங்களத்தீவில் நாட்டினள். இப்பொழுது இரண்டாயிரம் வருஷத்திற்கு அதிகமாய்விட்டபோதிலும், அந்த மரம் அங்கே செழித்து நல்ல நிலைமையில் இருக்கின்றது. இவ்வளவு பழைய மரம் வேறெங்கும் இல்லை. கி. மு. 245-ஆம் ஆண்டில் அந்த மரத்தைச் சங்கமித்திரை நாட்டினள் ஆகையால், இப்பொழுது அந்த மரத்தின் வயது 2158 வருஷங்கள் ஆகின்றது.

இந்த அரச மரத்தைக் குறித்து சர் எமர்சன் டெனண்ட் என்னும் துரை எழுதியுள்ளதைக் கவனிக்க:—

செனேகால் தேசத்து 'தெவோ பெப்' என்னும் மரத்திற்கும், தாஸ்மேனியா தேசத்து 'யூகலிப்டஸ்' என்னும் தருவிற்கும், ஒரோடாவா தேசத்து 'ட்ரேகன்' என்னும் விருக்கத்திற்கும், காலிபோர்னியா தேசத்து 'வெல்லிங்டோனியா' என்னும் தருமத்திற்கும் ஆயிரம் முதல் நாலாயிரம் வரையில் வயது ஆயிற்றென்று நினைப்பார்கள். இது வெறும் ஊகையேயன்றி நிச்சயமன்று. போதி விருக்ஷத்தின் விஷயம் அப்படிப்பட்டதன்று. அதனை நாட்டிய தேதிமுதல் இன்றளவும் ஒவ்வொரு தலைமுறையாரும் காப்பாற்றி வருகின்றார்கள். 'எல்லர்ஸ்லி ஒக்' என்னும் விருக்ஷத்தை இதனோடு ஒப்பிட்டு நோக்கின், அஃது இதன் சிறுமுளையாகும். வின்சர் என்னும் காட்டிலிருக்கும் 'கான்கரர் ஒக்' என்னும் விருக்ஷத்திற்கு இந்தப் போதி விருக்ஷத்தின் ஆயுளில் பாதிகூட இராது. ஆகையால், எல்லா இடங்களிலும் இருக்கும் புராதன விருக்ஷங்களை விட இஃது ஒரு நூறு ஆண்டுகளேனும் அதிகமான வயதுடையதாகும். இம்மட்டேயன்றி இந்த மரம் நாளுக்கு நாள் வளரும் நிலைமையிலேயே இருக்கின்றது.

பக்தர்களான பௌத்த நூலாசிரியர்கள் இந்தப் போதி விருக்ஷம் நீடூழிகாலம் இருக்குமென்றும், இதன் அபிவிருத்தியே பௌத்த மதாபிவிருத்தியின் அறிகுறி என்றும் அதிசயமாக வர்ணித்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த வார்த்தை சிங்களத் தீவில் பிரத்தியக்ஷமாக நடந்தேறி வருகின்றது. எப்படியெனின், சங்கமித்திரை சிங்களத் தீவில் நாட்டிய போதி விருக்ஷம் எப்படிப் பூர்வ ஸ்திதியி லிருக்கின்றதோ, அப்படியே மகிந்திரன் போதித்த மதமும் அந்த ஸ்திதியிலேயே இருக்கின்றது. ஆயினும், இந்து தேசத்தில் மாத்திரம் பௌத்த தர்மம் பூர்வஸ்திதியில் இல்லை. புத்த கயையிலுள்ள போதி விருக்ஷம்

1855-ஆம் வருஷத்தில் நசித்துப் போயிற்றென்று சொல்லுவார்கள்: இந்தப் பிரகாரமே, பாபு ஸ்ரீ கிருஷ்ணவிகாரி சேன் என்பவர் எழுதிய அசோக சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கின்றது.

சீனதேசத்து யாத்திரிகர்கள் புத்த கயையிலுள்ள முதல் போதிவிருக்ஷத்தின் மகிமையைத் தங்களுடைய சரித்திரங்களிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த மூல போதிவிருக்ஷத்தின் கிளை ஒன்றை பர்மா தேசத்தரசன் ஒருவன் 1833-ஆம் ஆண்டில் தன்தேசத்திற்குக் கொண்டு போய் நாட்டினன். புத்த கயையிலுள்ள மூல போதிவிருக்ஷத்தைத் தரிசிக்கும் பொருட்டுப் பௌத்த ராஜர்கள் எத்தனையோபேர் பக்தி சிரத்தைகளுடன் ஆயிரக் கணக்கான யோஜன தூரங்களினின்றும் வந்து, அத்தர் பனிநீர் முதலாகிய நறுமணத் திரவியங்களையும், எண்ணிறந்த பசும் பாற்குடங்களையும் அதற்கு அபிஷேகஞ் செய்துவந்தார்கள். இப்பொழுது, மூல விருக்ஷம் இருந்த இடத்திலேயே புதிய அரச மரம் ஒன்றை ஸ்தாபித்துள்ளார்கள்.

குநாலன்

அசோகருக்குக் குமாரர்கள் அநேகர் இருந்தார்களென்று அவருடைய சிலாசாசனங்களினால் தெரியவருகின்றது. ஒரு சிலாசாசனத்தில் 'எனது குமாரர்களுடையது' என்று பன்மையிற் குறிக்கப்பட்டிருக்கின்றது. அசோகருக்குப் பிறகு அவருடைய குமாரனை ஸுயசன் என்பவன் பட்டத்துக்கு வந்ததாக நமது புராணங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. அசோகருக்கு தர்மவர்த்தனன் என்னுங் குமாரன் ஒருவன் இருந்தனனெனவும், அவன்

காந்தார (கந்தஹார) தேசத்திற்கு முக்கியாதிகாரியாக இருந்தனனெனவும், ஹுயான்த்சாங் என்னும் சீனத்து யாத்திரிகன் எழுதியிருக்கின்றான். மகீந்திரனென்னுங் குமாரனும், விவாகஞ் செய்துகொள்ளாத சங்கமித்திரையும் பௌத்த தர்மத்து தீக்ஷையை மேற்கொண்டு சிங்களத் தீவிற்குப் போய் அங்கே தமது மதத்தைப் பரவச் செய்தார்களென்று தீபவம்சம் என்னும் நூலிலும், மகாவம்சம் என்னும் நூலிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், இந்த மகீந்திரன் அசோகருடைய சிறிய தாயாரின் மகனென்று ஹுயான்த்சாங் என்பவன் எழுதியிருக்கின்றான். அசோகருக்கு குநாலன் என்னும் ஒரு குமாரன் உண்டென்று அசோகாவதானம் என்னும் நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. அப்படியே மௌரியசம்ராட் என்னும் நூலிலும் எழுதப்பட்டிருக்கின்றது.

குநாலப் பறவையின் கண்ணைப்போலப் பிரகாசமாகவும் கறுப்பாகவும் அவனுடைய கண்கள் இருந்ததனால், அவனுக்குக் குநாலன் எனப் பெயரிட்டார்கள். அவன் காஞ்சனமாலை என்னுங் கன்னிகையை மணம்புரிந்து கொண்டான். ஆயினும், சிறுபிராயத்திலிருந்து தந்தையின் நல்லுபதேசங்களைப் பெற்று வளர்ந்துவந்திருந்தமையின், அவன் நாளடைவில் விரக்தனுயினன்; எப்பொழுதும் தியான தாரணங்களிலும், தர்ம விசாரங்களிலுங் காலத்தைக் கழித்துவந்தான். அவனுடைய சிறிய தாயாகிய திஷ்யரக்ஷியதை என்பவள் அவனுடைய சௌந்தரியாதிசயத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டு அவன்மீது மோகங் கொண்டாள். தன்னுடைய விருப்பத்தை ஈடேற்றிக்கொள்வதற்காக அவள் பலவிதமான பிரயத்தனங்கள் செய்தாள். அவளுடைய துஷ்டபுத்தியை மாற்ற எண்ணி மகா புருஷனும் நல்ல தர்ம சீலனும் இருந்த குநாலன்

தன்னிடத்தில் வரும் தூதிகளின் மூலமாக எத்தனையோ நற்போதனைகளை அவளுக்குச் செய்தான். இழிகுணமுள்ளவர்களுக்கு நல்லுபதேசமென்பது விஷத்திற்குச் சமானமேயன்றோ? முடிவில், குநாலனைக் கொல்லுவிக்கக் கருதி அவள் அரசனிடத்தில் இல்லாத பொல்லாத கோள்களை அவன்மீது சொல்லி, தக்ஷசிலைக்கு அவனைச் சுபேதாராக அனுப்புவித்தாள்.

சிலநாள் கழிந்தபின்னர் அவள் கணவனோடு விநோதமாகப் பேசிக்கொண்டிருந்து, ராஜமுத்திரையைத் தந்திரமாகக் கைக்கொண்டாள். அந்த முத்திரையை உபயோகித்து, "குநாலனுடைய கண்கள் இரண்டையும் பிடுங்கி, அவனைத், தக்ஷசிலையினின்று துரத்திவிட வேண்டும்" என்று கடிதம் எழுதித் தக்ஷசிலையிலுள்ள அதிகாரி ஒருவனுக்கு அனுப்பினள்.

குநாலன் தக்ஷசிலைக்குப் போனது முதற்கொண்டு அவனுடைய நல்ல தன்மையைக் கண்டு ஆனந்தித்து எல்லாரும் அவனுக்குப் பணிவாக நடந்து வந்தார்கள். அவனிடத்து ஒவ்வொருவருக்கும் அத்தியந்தப் பிரியம் உண்டாயிருந்தது. மேற்சொல்லிய விபரீதமான கட்டளையைப் பார்த்து எல்லாரும் மிக ஆச்சரியப்பட்டார்கள். அரசனது ஆணையை நிறைவேற்றுவதற்கு எவருக்கும் மனம் ஒப்பவில்லை. சகலமானவர்களும் பரிதபித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு, அவரவர்களும் மெல்ல மெல்லப் பேசிக்கொண்டிருப்பதைக் குநாலன் தெரிந்துகொண்டு, அவர்களை நோக்கி, "அந்தக் காரியஞ் செய்வதற்கு நீங்கள் என் பின்வாங்குகிறீர்கள்? அரசனது ஆணையை மீறி நடக்கக்கூடாது" என்று சொல்லி, "எனது தந்தையின் கட்டளை

யை நிறைவேற்றுகிறவர்களுக்கு விசேஷ வெகுமானங் கொடுக்கப்படும்'' என்று பறை அறைவித்தான்.

யோக்கியமானவர்களெவரும் அந்தக் காரியஞ் செய்வதற்கு உடன்படவில்லை. பணத்தின் ஆசையினால் சண்டாளன் ஒருவன் அந்தக் காரியத்திற்கு முன் வந்தான். சுற்று முற்று முள்ள ஜனங்களெல்லாரும் கிலேசத்தினால் கண்ணீர் உதிர்த்துக் கதறிக்கொண்டிருக்கையில், குநாலன் தன் கண்களைப் பிடுங்கும்படி அந்தச் சண்டாளனுக்கு அநுமதி கொடுத்தான். அந்தச் சமயத்தில் ஜனங்களுக்கு உண்டான மனோவேதனையைச் சொல்லவும் முடியாது, எழுதவும் முடியாது. எத்தனையோ ஜனங்கள் ஹா ஹா வென அலறினார்கள்; எத்தனையோபேர் தலையை மோதிக்கொண்டு மடிந்தார்கள்; எத்தனையோ பேர் தமது கண்களைப் பலாத்காரமாகப் பிடுங்கி எறிந்தார்கள்; எத்தனையோ பேர் துக்கந்தாளாமல் விழுந்து இறந்தார்கள்; எத்தனையோ பேர் மூர்ச்சித்தார்கள்.

அப்பொழுது ஜனங்களைச் சமாதானப்படுத்தும் பொருட்டுக் குநாலன், சண்டாளன் பிடுங்கிய தன் கண் ஒன்றை உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு அதனைப் பார்த்து, "பெருமையும் பாக்கியமும் இழந்த மாமிச பிண்டமே! இதுவரையிற் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரமூர்த்திகள் இனி உனக்கு அகப்படார் வீணாக நான் உன்னை என்னுடையது என்று பரிதவித்துக் கொண்டிருந்தேன். என்னைப்போன்ற மூடன் வேறொருவனு மில்லை" என்று சொன்னவுடனே, மற்றொரு கண்ணும் பிடுங்கப் பட்டது. அப்பொழுது குநாலன் பின் வருமாறு கூறினான் :—

"சகலமான பாபங்களும் கண்களினாலேயே உண்டாகின்றன. ஆகையால், அவை போனதற்குச் சந்தோஷப்

படுவதே நன்று. தோற்கண்களுக்குப் பதிலாக ஞானக் கண்கள் வந்தன. இது சாதாரணமாகக் கிடைக்குமா? ராஜன் என்னை நீக்கி ஒழித்தான்; ஆயினும் தர்மராஜன் என்னைப் புத்திரனாகக் கட்டித் தழுவிக்கொண்டான். கஷ்டங்கள் மிகுந்த இந்தப் புவிராஜ்யத்தில் உன்னதமான பதவியிலிருந்து நான் பிரஷ்டனானேன். ஆனபோதிலும், மிகவும் ஆனந்தமயமான தர்மராஜ்யத்தில் பிரவேசித்தேன்.''

பிறகு, தன்னுடைய தர்மபத்தினியுடன் குநாலன் பிச்சையெடுத்துப் புசித்துக்கொண்டு, இந்தத் தேசம் அந்தத் தேசம், இந்த ஊர், அந்த ஊர் என்னும் வேற்றுமையின்றி எங்குஞ் சஞ்சரித்துக்கொண்டு பாடலீபுரத்திற்கு வந்து சேர்ந்தான். அவ்வூர் ராஜவீதியில் குநாலன் ஒரு நாள் வீணைவாசித்துக்கொண்டு பக்திரசம் மிகுந்த கீதங்களைப் பாடிக்கொண்டு, காஞ்சனமாலையின் உதவியினால் பிச்சை வேண்டிக்கொண்டு போகையில், அந்த வீணா நாதத்தைக் கேட்டுச் சந்தோஷமெய்தி அரசன் சேவகர்களை யனுப்பி, அவர்க ளிருவரையும் அரண்மனைக்கு வரவழைத்தான். அப்படிப் பாடிக்கொண்டு யாசிப்பவர்கள் எவர்கள் என்பது அசோகருக்குத் தெரியாது. அவர்களும் தங்களுடைய வரலாற்றை அரசனுக்குத் தெரிவிக்கவில்லை. ஏனெனில், அவர்கள் மகா சக்கரவர்த்தி முதற்கொண்டு பறைச்சேரியிலிருக்கும் நாய் வரையிலுள்ள சகல பிராணிகளையும் ஒரே மாதிரியாகப் பார்ப்பவர்கள் அன்றோ?

பிறகு, குநாலனைப் பார்த்து அசோகர், "நீ எவ்விடத்தான்? இவள் யார்?'' என்று வினவினர். அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுமளவில் குநாலன் தன்னுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் எடுத்துரைத்தான். அதைக் கேட்டு அரசன் மிகவும் வருத்தப்பட்டு, திஷ்யரக்ஷிதையைச் சங்கரிக்கும்படி கட்டளையிட்டான். அந்

4

தச் சமாசாரம் தெரிந்தவுடனே, குநாலன் சாஷ்டாங்க மாக நமஸ்காரஞ் செய்து, "பிரபுவே! பெண்கொலை பெரும் பாவம். அபராதம் செய்தவர்களிடத்துக் கருணை காட்டுவதைவிட ஔதாரியம் வேறு இல்லை. இஃது ஆசாரியரான ததாகதருடைய வாக்கியமாகும்" என்று மிகுந்த விநயத்தோடு சொன்னான்.

மற்றும், "என்னுடைய கண்கள் போனதனால் எனக்கு எள்ளளவும் கிலேசமில்லை. அதனால் வேதனையும் உண்டாகவில்லை. தயைகூர்ந்து என் தாயாரை எனக்காகச் சிக்ஷிக்காமலிருக்க வேண்டுகின்றேன். என்னுடைய அதிருஷ்டப் பிரகாரம் எனக்கு சிக்ஷை நேர்ந்தது. நான் பூர்வ ஜன்மத்திற் செய்த பாவத்தை இந்த ஜன்மத்தில் அநுபவிக்கின்றேன். எனது வார்த்தைகளிற் சற்று விசுவாஸம் வைக்கவேண்டும்" என்று தந்தையை நோக்கி விண்ணப்பஞ் செய்துகொண்டு, — "ஓ மாம்சமயமான கண்களே! முன்னர் இருந்த நிலைமையில் இருப்பீர்களாக" என்று சொன்னான். * உடனே, கண்கள் முன்போல அவனுக்கு உண்டாயின.

இந்த அற்புதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அசோகருடைய தம்பியாகிய வீதாசோகன் என்பவன் மிகவும் பரிதபித்து, உபகுப்தரென்னும் ஆசாரியருடைய மடத்திற்குப்போய், அங்கேயே வசித்துவந்தான். பிறகு, குணகரர் என்னும் யதியினிடத்துத் தர்மதீக்ஷை பெற்றான்.

---

* "தர்ம விஷயத்தில் இருந்த ஆசையிலும், ஸ்வதர்மத்தைப் பரவச் செய்வதற்காகப் பண்ணின பிரயத்தனங்களிலும் அசோகருக்குச் சமானமானவன் பிரசித்திபெற்ற கிறிஸ்தவராஜனை கான்ஸ்டன்டைன் என்பவன் ஒருவனே. குடும்பசம்பந்தமான விஷயத்திலும் இவர்கள் இருவரும் சமானர்களே என்று கனிங்காம் துரையும் சொல்லுகின்றார்: திஷ்யரக்ஷிதையைப்

இந்தக் காலத்திலே நிர்க்கிரந்தம் என்னும் வேறொரு மதமும் பிரபலமாயிற்று. இந்த மதத்தவ னொருவன் பௌத்த தர்மத்தை நிந்திக்கத் தொடங்கினன். எப்படி யெனின், தான் சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பதுபோலவும், புத்தர் தன்னுடைய காலில் விழுந்து பிரார்த்தித்துக்கொண் டிருப்பதுபோலவும் சித்திரப்பட மெழுதி, அதனைப் பண்டுவர்த்தனபுரம் முதலாகிய இடங்களில் பிரசித்தப்படுத்தினன். அதனல் அசோகருக்குக் கோபம் மூண்டது. அந்த நிர்க்கிரந்தியைப் பிடித்துக்கொண்டு வருகிறவனுக்கு வெகுமானங் கொடுப்பதாகப் பறையறைவித்தார். வெகுமானத்தின்மீது ஆசைகொண்ட அமீர் ஒருவன் வீதாசோகனே நிர்க்கிரந்தி யென்று எண்ணி, அவனைக் கொன்று அவனுடைய சரீரத்தை அசோகருக்கு எதிரிற் கொண்டுவந்து வைத்தான். அதைப் பார்த்து, அது தன்னுடைய தம்பியின் தலை யென்றுணர்ந்து அசோகர் மிகவும் பச்சாத்தாபப்பட்டுத் துக்கித்துக்கொண் டிருந்தார்; உலகத்தையே மறந்து பரிதவித்துக்கொண் டிருந்தார். பிறகு, அவருக்கு உபகுப்தர் தருமோபதேசஞ் செய்து, அவருடைய மனக்கிலேசத்தைப் போக்கடித்தார். இந்த விஷயம் அசோகாவதான மென்னும் நூலிலும் குறிக்கப்பட் டிருக்கின்றது.

போலவே கான்ஸ்டன்டைனுடைய ராணியும் தன்னுடைய சக்களத்தியின் மகன்மீது மோகங்கொண்டாள். ஆயினும், அசோகர் வெகு புண்ணியசாலி யானதனல், திஷ்யரக்ஷிதையின் கோரிக்கை நிறைவேறவில்லை. ரோமானிய ராஜன் அவ்வளவு புண்ணியசாலி யல்லன்" என்று பாபு ஸ்ரீ கிருஷ்ணவிஹாரிசேன் என்பவர் எழுதியுள்ள அசோகர் சரித்திரத்திற் குறிக்கப்பட் டிருக்கின்றன. இப்படியே மற்ற நூலாசிரியர்களும் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

தர்ம காரியங்கள்

பௌத்த தர்மத்தை அபிவிருத்தி செய்வதற்காக அசோகர் மிகுந்த பிரயத்தனங்கள் செய்தாரென்பது உலக மறிந்த விஷயம். அவர் அனேக தேசங்களுக்குப் போய், பௌத்த தீர்த்த ஸ்தானங்களைத் தரிசித்து, அங்கங்கே புதிய ஸ்தூபிகள் கட்டுவித்து, பழைய ஸ்தூபிகளைப் புதுப்பித்தார். இந்த விஷயம் நிக்ரீவம் படேரியா என்னும் இடங்களில் உள்ள கல்வெட்டுகளினால் தெளிவாகின்றது.

அவர் தம்முடைய ராஜ்யத்தில் 84,000 ஸ்தூபிகள் நிர்மித்ததாக ஊர்க்கதை சொல்லுவார்கள்: அவர் பிரதிஷ்டை செய்த ஸ்தம்பங்களும் மண்டபங்களும் இன்றைக்கும் அங்கங்கே அகப்படுகின்றன. புத்தகயையிலுள்ள போதி விருக்ஷத்திற்கும் வஜ்ராசனங்களுக்கும் சுற்றியுள்ள திண்ணைகளை அசோகர் கட்டுவித்ததாகச் சொல்லுவார்கள். இக்காலத்தில் அந்தத் திண்ணைகள் ஜீர்ணாவஸ்தையில் இருக்கின்றன. இவையன்றி பௌத்த பிக்ஷுகர்களுக்கும் பிக்ஷுணிகளுக்கும் அவர் தர்மசாலைகள் கட்டியிருக்கின்றார்.

அசோகர் தரிசித்த பவித்திர ஸ்தலங்களுள் முக்கியமானவைகளை இங்கே விவரிப்போம்:—

1. புத்தரின் ஜன்மஸ்தலமான உலும்பினீவனம், 2. புத்தரது தந்தையின் ராஜதானியான கபிலவாஸ்து பட்டணம், 3. புத்தர் விரக்தியடைந்த ராஜமந்திரத்தினின்று இருட்டில் வெளிப்போந்து ஊருக்கு வெளியில் வந்த பொழுது அவரைப் பின்றொடர்ந்து வந்த சேவகனுக்கு அவர் தரித்திருந்த பூஷணங்களை அளித்து, அவர் தமது சிகையைக் கத்தியினால் அறுத்தெறிந்து வைராக்கிய

மடைந்த பிரதேசமாகிய அனோமா என்னும் நதிதீரம், 4. புத்தரது காலத்தில் இருந்த பிந்துசார னென்பவனுடைய ராஜதானியாகிய ராஜக்கிருகம், 5. அந்த ராஜக்கிருகத்திற்குச் சமீபத்தில் மலைக்குகைகளினிடையில் ஏகாந்தமாகத் தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களை புத்தர் ஆசிரயித்த பிரதேசங்கள், 6. முனிவர்களுடன் கூடிச் செய்த ஜபம் தபம் முதலிய சாதனங்களினால் திருப்தியடையாமல் ஆறுவருஷகாலம் சிந்தனையில் ஆழ்ந்து அவர் உட்கார்ந்திருந்த (புத்தகயைக்குச் சமீபத்திலுள்ள) உருவேலங்காடு, 7. தவச்சரியைகள் வியர்த்தமானவை யென்றும் அவைகளினால் அனர்த்தம் விளையுமென்றும் தெரிந்துகொண்டு அவர் மெலிந்திருந்த தமது சரீரத்திற்கு வேண்டியமட்டும் உணவளித்துப் பலமூட்டிக்கொண்ட இடமும், சுஜாதை யென்னும் ஸ்திரீ அவருக்கு வேண்டிய அளவு அன்னமிட்ட இடமுமாகிய நிரஞ்சனா நதிதீரம், 8. அவர் திவ்விய ஞானோதயமெய்திய இடமாகிய புத்தகயை என்னும் ஸ்தலம், 9. ஞானசித்தி பெற்றபிறகு அவர் முதன்முதல் தருமோபதேசஞ் செய்யத்தொடங்கிய இடமாகிய (காசிநகரத்திலுள்ள) மிருகதாவகானனம் என்னும் ஸ்தானம், 10. தருமோபதேசஞ்செய்து உலகத்தவருக்கு நற்கதியுண்டாக்கிச் சமாதான சித்தம் படைத்து பூவுலகப் பற்றைத் துறந்து அவர் நிர்வாணம் எய்திய குசிநகரம் என்னும் பட்டணம்—ஆகிய இந்த ஸ்தலங்களையெல்லாம் அசோகர் தரிசித்து அங்கங்கே ஸ்தூபிகள், மண்டபங்கள், விஹாரங்கள் முதலானவைகளை நிர்மித்தார்.

இனிவரும் சந்ததியாருக்குத் தருமோபதேசஞ் செய்யும்பொருட்டுப் பௌத்த தர்மத்தின் முக்கியமான தத்துவங்களை மனத்திற் பதிப்பிக்கத்தக்க சிறுசிறு வாக்கியங்களையும் ஸூத்திரங்களையும் சிலைகளின்மீதும் கம்பங்

களின்மீதும் விஹாரங்களிலுள்ள சுவர்களின்மீதும் எழுதி வைத்தார். இதுவன்றிப் பிரயாணிகள் முதலானவர்களும் பசுக்களும் இளைப்பாறும்பொருட்டுச் சாலைகளின் இரு புறத்திலும் மாமரங்களை வைத்துப் பயிர்செய்தார்; ஒவ்வொரு நாழிகை தூரத்திலும் வழிப்போக்கர்கள் தாகந் தணித்துக்கொள்வதற்கு அநுகூலமாகக் கிணறுகள் வெட்டுவித்தார்; இரவுகளில் அவர்கள் தங்குவதற்கு அங்கங்கே சத்திரங்கள் கட்டுவித்தார்; ஜனங்களுக்கு வைத்திய சிகிச்சை செய்வதற்காக சிகிச்சாலயங்கள் (ஆசுபத்திரிகள்) அமைத்து வைத்தார்; அப்படியே, பசு முதலியவைகளுக்கும் சிகிச்சாலயங்கள் ஏற்படுத்தினர்.

இந்தக் காரியம் கிறிஸ்து பிறப்பதற்கு 250 வருஷங்களுக்கு முன்னரே அசோகர் செய்துள்ளார். மற்றும், மருந்துக்கு உபயோகமாகத் தக்க மூலிகை முதலியவைகளை இமாலயப் பிரதேசங்களினின்று வரவழைத்து, அவைகளை அங்கங்கேயுள்ள தோட்டங்களில் வைத்துப் பயிர்செய்யும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். இன்னும் பலவிதமான தர்மகாரியங்கள் செய்து கீர்த்தி பெற்றார்.

அசோகருடைய சாசனங்கள்

அசோகர் எழுதுவித்த பௌத்த தர்ம சம்பந்தமான இதிகாசங்கள் அனேகம் உண்டு. அவைகளைவிட அவருடைய சிலாசாசனங்கள் மிகவும் கவனிக்கத்தக்கவையாகும். இவைகளின் உதவியினால் உண்மையான சரித்திராம்சங்களைத் தெரிந்துகொள்வதற்காகும். இந்தச் சாசனங்களெல்லாம் அசோகராலேயே எழுதப்பட்டன. இவைகளிற்

V2:C N19

சில கற்களின் மீதும், வேறு சில கற்றூண்களின் மீதும் மற்றும் சில விசாலமான கற்பலகைகளின் மீதும் எழுதப்பட்டிருக்கின்றன.

இவைகளுள், கற்களின் மீது, செதுக்கப்பட்டிருப்பவை மற்றவைகளைவிட மூந்தினவாகவும் மனத்தைக் கவரத் தக்கனவாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு சாசனத்திலும் அவர் பட்டாபிஷேகஞ் செய்துகொண்ட மறுவருஷங்கூடத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. கற்களின் மீது எழுதுவித்த சாசனங்களுள் பிரசித்தமானவை பதினன்காகும். அவை அவர் பட்டாபிஷேகஞ் செய்து கொண்ட பிறகு பதின் மூன்று பதினன்கு வருஷங்களுக்குள் எழுதப்பட்டவை. கற்றூண்களிலுள்ளவை 27, 28 வருஷங்களுக்குள் செதுக்கப்பட்டவை. இந்த லேகைகளிலெல்லாம் அசோகர் என்னும் பெயர் இல்லை. ஒவ்வொரு லேகையிலும் 'பியதசி,' அல்லது 'தேவானும் பியதசி,' * (பிரியதரிசி அல்லது தேவானும் பிரியதரிசி) என்னும் பெயர் காணப்படுகின்றது.

85831

இந்தப் பிரியதரிசி என்னும் அரசன் எவனென்று சிலர் சங்கை கொள்ளக்கூடும். இவனே அசோகன். இந்த விஷயமாக சார்லஸ் டர்னர் என்னும் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் சிங்களத்துப் பண்டிதர்களுடைய உதவியைக் கொண்டு பாலீ பாஷையைக் கற்று, சிங்களத்தீவிலுள்ள மகாவம்சம், தீபவம்சம் என்னும் பிரசித்தமான பௌத்த நூல்களைப் படித்தார். அந்த நூல்களில் அசோகருடைய சரித்திரமும், அவர் பிரதிஷ்டைசெய்த சிலாலேகை

* அசோகனுடையவையென மகாவம்சத்தில் எழுதப்பட்டிருக்கும் சரித்திரமும் பற்பல காரியங்களும் தீப வம்சத்தில் பிரியதரிசனுடையவை யென எழுதப்பட்டிருக்கின்றன.

முதலானவைகளும், மற்றுமுள்ள விஷயங்களும் விஸ்தார மாக எழுதப்பட்டிருக்கின்றன.

கி. பி. 1837 - 1838-ஆம் வருஷத்தில் ஜேம்ஸ் பிரின் ஸெஸ் என்னுந் துரை பௌத்த மந்திரங்களிற் கிடைத்த அநேக சிலாசாசனங்களையும் நாணயங்களையும் பரிசோதித்துப் பார்த்து, அவைகள் பாலீபாஷையிலே எழுதப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து, அந்த லேகைகளையும், மற்ற லேகைகளையும், டில்லியிலுள்ள பிரோஜஷா ஸ்தம்பத்திலுள்ள லேகைகளையும் இங்கிலீஷில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தார்.

அந்த மொழிபெயர்ப்புக்களை டர்னர் துரை படித்து, அவை தாம் மகாவம்சத்திலும் தீபவம்சத்திலும் படித்தவை போலவே இருக்கின்றனவென்று தெரிந்து கொண்டார். அந்த லேகைகளில் அசோகர் தம்முடைய காலத்திருந்த டாலமி, மேகாஜ் முதலான கிரேக்க ராஜர்களுடைய பெயர்களையும், தமது தாதாவாகிய சந்த்ரகுப்தருடைய பெயரையும் எழுதியிருக்கின்றார். ஆகையால், 'அசோகரே' 'பிரியதரிசி' என்னும் விஷயத்தைப்பற்றி வாதம் இல்லை.

குஜராத்திலுள்ள சுனகடப் பிராந்தத்தி லிருக்கும் கினர் என்னும் இடத்திலும், ஒரிசாப் பிராந்தத்திலுள்ள தவலீ என்னு மிடத்திலும், ஜெயகட என்னு மிடத்திலும், யமுனா நதியின் வடகரையில் மசூரேய்க்குச் சமீபத்திலுள்ள காலஸி என்னுமிடத்திலும், வடமேற்கில் அன்டகமென்னும் ஊருக்குச் சிறிது தூரத்திலுள்ள கற்புதக்கிரிக்கு அருகில் சகாபாஜகட என்னும் இடத்திலும் உள்ள கற்களின்மீது அநேக சாசனங்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன. மேற்சொல்லிய இடங்களில் இருப்பதுபோல மற்றப் பிரதேசங்களிற் பெரும்பாறைகள் இல்லாததனுல்,

கற்றாண்களின்மீது சாசனங்களைச் செதுக்கி அங்கங்கே அந்தத் தூண்களை நாட்டினர்.

டில்லிமா நகரத்திலும் பெரோஜஷா ஸ்தம்பம் என்னும் அசோகருடைய ஸ்தம்பம் ஒன்று இருக்கின்றது. அதனை யமுனா நதி தீரத்திலுள்ள கிஜராபாத்திலிருந்து பிரோஜஷா கொண்டுவந்து டில்லியில் நாட்டினன். அது $42\frac{1}{2}$ அடி உயரமுள்ளது. அந்தத் தூணின் நான்கு பக்கங்களிலும் உபதேச வாக்கியங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

அலகாபாதிலுள்ள கற்றாணின் உயரம் 35 அடி. இதன் அகலம் அடிப்புறத்தில் மூன்று அடியும், நுனியில் இரண்டு அடியும் இருக்கின்றது.

உபதேச வாக்கியங்களை அசோகர் இப்படிக் கற்களின்மீது எழுதுவித்ததற்குக் காரணம் தெரிந்துகொள்வது கஷ்டமன்று. கல்வெட்டுகள் நெடுங்காலம் அழியாதிருக்குமென்றும், பின் சந்ததியாருக்குப் பௌத்த தர்மம் எளிதில் விளங்குமென்றும் எண்ணியே அவர் அப்படிச் செய்துள்ளார். ஆனதினாலேயே, பிறதேசத் தரசர்கள் எத்தனையோ பெயர் வந்து இந்த தேசத்தை ஆண்டபோதிலும், புதிய மதங்கள் எத்தனையோ தோன்றிப் பிரபலமடைந்தபோதிலும் இந்தக் கல்வெட்டுகள் அசோகருடைய பிரபாவத்தை இன்னும் உணர்த்துகின்றன. ஆயினும், இந்தச் சாசனங்களின் பிரயோஜனம் சாமானிய ஜனங்களுக்குத் தெரியாது.

அசோகருடைய ராஜதானி நகரம் பாடலீ புத்திரமென்று முன்னர்க் கூறியிருக்கின்றோம். இந்தப் பட்டணத்தின் பெயர் இக்காலத்துப் பூகோள புத்தகங்களில் அகப்படுவதில்லை. ஆயினும், மேகஸ்தனீசரும், சீனதேசத்து யாத்திரிகர்களும் எழுதியிருக்கும் சரித்திரக் குறிப்புகளைப்

பார்க்குமிடத்து, இக்காலத்து பாட்ணு நகரத்திற்குச் சமீபத்தில் பாடலீபுத்திர மென்பது இருந்திருக்க வேண்டுமென்று தெரிகின்றது. இந்த நகரம் கங்காநதியில் மூழ்கிப்போய் இருக்கக்கூடும்; ஜனங்கள் சொல்லிக்கொள்வதும் அப்படியே யாகும். பாடலீ புத்திர நகரத்திற்குச் சமீபத்தில் பிக்ஷுகர்களுக்காக அசோகர் அநேக விஹாரங்களை நிர்மித்தார். அவைகளிற் சில ஜீர்ணமான நிலைமையில் கங்கா தீரத்தில் அங்கங்கே அகப்படுகின்றன.

இதுவன்றி, பாட்ணு நகரம் இருக்கும் இடத்தை 'பகாரா' அல்லது 'பிசாரா' என்று சொல்லுவார்கள். அசோகருடைய ராஜதானியாகிய பாடலீபுத்திரம் அந்த ராஜ்யத்தின் நடுவில் இருந்ததென்று கூறியிருக்கின்றோமன்றோ? அந்த ராஜதானியி லிருந்து நாற்புறங்களும் போகத்தக்க ராஜமார்க்கங்கள் இருக்கின்றன. அவைகளுள், முதற்சாலை நேபாளம் வரைக்கும், இரண்டாவது கயாவின் வழியாகச் சோட்டா நாக்பூர் கணவாய்களின் ஊடே சென்று ஒட்ரதேசம் வரைக்கும், மூன்றுவது பிரயாகை, உஜ்ஜயனி என்னும் நகரங்களின் வழியாக காட்டேவாடா வரைக்கும், நான்காவது பஞ்சாபு, கந்தஹாரம் வரைக்கும் போகத்தக்கனவாகும்.

இந்த மார்க்கங்கள் நான்கிலும் ஜனங்கள் இடைவிடாமல் கூட்டங் கூட்டமாகப் போய்க்கொண் டிருந்தார்கள். ஆகையால், அந்த மார்க்கங்களில் கற்றூண்களை நாட்டுவதனுல் அநேகர் படிப்பதற்கு அநுகூலமாகு மென்றெண்ணி, திறமைவாய்ந்த சிற்பிகளைக்கொண்டு அவைகளின்மீது உபதேச வசனங்களைச் செதுக்குவித்தார். அந்தத் தூண்களிற் காணப்படும் சிற்பத் திறமையைக் கண்டு இக்காலத்துச் சிற்பசாஸ்திரிகள் எல்லாரும் மிகவியப்புறுகின்றார்கள்.

நற்போதங்கள்

அசோகருடைய சாசனங்கள் பலவற்றுள் கற்பாறைகளின்மீது செதுக்கப்பட்டுள்ள பதினன்கு கட்டளைகள் மகத்துவமுள்ளவை யென்று முன்னர்க் கூறியிருக்கின்றோமன்றோ?

அந்தப் பதினன்கு லேகைகளின் சாராம்சங்களை இங்கே விவரிப்பாம்:—

1. இந்தச் சாசனம் பிரியதரிசி என்னும் ராஜனுடையது. பிராணிவதை முற்றும் நிறுத்தப்பட்டது. இனி எவரும் மாம்சபோஜனம் செய்யார். பிரியதரிசி ராஜனுடைய மடைப்பள்ளியில் உபசாரமாக விருந்திடும்பொருட்டு லக்ஷக் கணக்கான ஜந்துக்களைக் கொன்றுவந்தார்கள். இனி அப்படிப்பட்ட உபசாரத்தின்பொருட்டும் பிராணிவதை செய்யக்கூடாதென்று அரசன் நிச்சயித்திருக்கிறன்.

2. 'தேவதா பிரியதரிசி' ஜயித்துள்ள பிரதேசங்களிலும், சத்திய புத்திரம், கேரளபுத்திரம், தாமிரபரணி முதலான ஸ்தலங்களிலும், ஆன்டியாகஸ் என்னும் யவன ராஜனது தேசத்திலும், மற்றும் சமீபத்திலுள்ள ராஜ்யங்களிலும் இருக்கும் சகலமான ஜனங்களுக்கும் தெரியப்படுத்துவதென்னவென்றால்,—மனிதர்களுக்கும், விலங்கு பறவை முதலியவைகளுக்கும் உபயோகப்படத்தக்க செடிகளையும் மரங்களையும் அவை இருக்குமிடங்களினின்று கொண்டுவந்து இல்லாத இடங்களில் நாட்டியிருக்கின்றேன். கிணறுகளும் குளங்களும் வெட்டுவித்திருக்கின்றேன்.

3. எனது ராஜ்யபாலனத்தின் பன்னிரண்டாம் வருஷத்தில் இந்தச் சாசனம் பிரகடிக்கப்பட்டது. எனது ராஜ்யத்திலுள்ள குடிகளும் மற்ற ஜனங்களும் நான் விதித்துள்ள தர்மக் கட்டளைகளைக் கிரமமாக நடத்திவரும் பொருட்டு ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும். ஔதாரியம், அஹிம்சை அபரிமிதத்வம், பரநிந்தை செய்யாமை ஆகிய இவை நற்காரியங்கள். தன்னுடைய நடக்கையினால் இவைகள் மற்றவர்களுடைய மனத்திற் பதியும்படி செய்யவேண்டும்.

4. பிராணிகளைக் கொல்லுவதும், பிராணிகளை உபத்திரப்படுத்துவதும், சமானமான ஜனங்களை ஆதரியாதிருப்பதும், பிராம்மணர்களையும் சமணர்களையும் அவமானப்படுத்துவதும் வெகுகாலமாக நடந்துவந்தன. இப்பொழுது பிரியதரிசி ராஜன் எக்காள மூதுவதனாலும், கரி தேர்ப் புரவி யேற்றம் முதலிய வைபவங்களினாலும் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவதென்னவென்றால்,— மேற் சொல்லிய பிராணிஹத்தி, ஜந்துக்களுக்கு அபாயம், சமானமானவர்களுக்கு அநாதரணை, பிராம்மணர்களுக்கும் சமணர்களுக்கும் மானபங்கம் ஆகிய இவை இனி நடவா. தர்மம் வளர்ந்தோங்கும். இந்தக் கட்டளையை அசோகனுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் நடத்திவருவார்கள். துராசாரமுள்ளவன் ஒவ்வொருவனும் இந்தச் சாசனங்களைப் படித்தால் அவனுக்கு மேன்மை உண்டாகும். இந்தக் கட்டளைகளுக்கு விரோதமாக நடப்பதற்கு எவரும் மனங்கொடுக்கக் கூடாது. இது அசோகனது ராஜ்யாபிஷேகம் நடந்த பன்னிரண்டாம் வருஷத்தில் எழுதப்பட்டது.

5. நல்ல விஷயங்களைக் கெட்ட வழிகளில் உபயோகிக்கக் கூடாது. அதனால், நல்லதின் பயனும் தீமையா

கத் திரியும். நான் ஜனங்களுடைய நன்மைக்காகப் பிர யத்தனப் படுகின்றேன். என்னுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் அந்தப் பிரகாரமாகவே நடப்பார்க ளென்று எண்ணுகின்றேன். ஒவ்வொருவனுக்கும் அவன வனுடைய கர்மத்திற்குத் தக்கபடியே பயன்கிட்டும். இது வரையில் அதிகாரிகள் அக்கிரமமாகப் பிரவர்த்தித்ததனால், பிரியதரிசி ராஜனது பாலனையின் பத்தாம் ஆண்டில் ஜனங் கள் அநீதிபரர்களாயினார்கள். அதன் நிமித்தமாகத் தர்ம மகா மாத்திரை என்னும் அதிகாரிகளை நியமித்திருக் கின்றேன். ஜனங்களைத் தர்ம மார்க்கத்தில் நடக்கும்படி நியமிப்பதே இவர்களுடைய வேலை. இவர்கள் யவனம், காம்போஜம், காந்தஹாரம், பெதினிகை முதலான தேசங்களிலுள்ள ஜனங்களுக்குத் தர்மத்தைப் போதிப் பார்கள். மற்றும், பிராமணர், க்ஷத்திரியர், பிக்ஷுகர்கள் முதலாக உள்ளவர்களுக்கு க்ஷேமாபிவிர்த்தி உண்டாகச் செய்வார்கள். தெரியாதவர்களுக்கு, ஆறுசத்துருக்களை வெல்லும் முறையை உபதேசிப்பார்கள். பாவிகளை முக் தர்களாக்குவதற்குப் பிரயத்தனப்படுவார்கள். தர்மகிருத் தியங்களை விருத்திசெய்வார்கள். இந்த உத்தேசத்தோ டேயே இந்த ஆதேசம் பிரகடிக்கப்பட்டது. ஜனங்கள் இதனைப் பாலிப்பார்களாக.

6. சமாசாரங்களைச் சீக்கிரமாகத் தெரிந்து கொள்ளு வதற்குப் பூர்வத்தில் எப்பொழுதாவது ஒற்றர்களை எவரும் வைத்திருக்கவில்லை. இப்பொழுது நான் புதிதாக அந்த ஏற்பாடு செய்திருக்கின்றேன். உணவருந்தும் வேளையி லும், ஓய்வற்றிருக்கும் வேளையிலும், ஏகாந்தமாக இருக் கும் சமயத்திலும், உத்தியானவனத்தில் உலவிக்கொண் டிருக்கும் வேளையிலும், எந்த வேளையிலும் எந்தச் சமயத்

திலும் சமாசாரம் கொண்டுவருகிறவர்கள் சந்தேகமில்லாமல் என்னிடத்திற்கு வரலாம்; ஜனங்களுக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களை உடனே செய்வேன். இந்த விஷயமாக, என் வாயினற் சொல்லியது போல, எனது ஆக்கினையை என் அதிகாரிகள் ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். தர்ம குருக்களின் சமாஜத்தில் எங்கேயாவது சண்டை, வாதம், மதபேதங்கள் முதலியன உண்டானல் வார்த்தாஹரர்கள் உடனே எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஏனெனில், நியாயாநியாய விமரிசனம் வெகுசீக்கிரத்தில் நடப்பது நன்று. உபதேசமூலமாக ஜனங்களுக்கு நன்மையைப் போதிப்பது எனது கடமை. எல்லாரும் பாரமார்த்திகர்களாக வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். என்னுடைய புத்திர பௌத்திராதி பரம்பரைக்காரர்கள் இதனைப் பரிபாலிப்பார்களாக! அவர்களும் என்னைப் போலவே பிரஜைகளின் நன்மைக்காக எப்பொழுதும் பிரயத்தனஞ் செய்வார்களாக.

7. நல்லொழுக்கமும், நீதியும் நாஸ்திகர்களுக்கும் அவசியமேயாகும். ஆதலால், எனது ராஜ்யத்தில் நாஸ்திகர்கள் எவரேனும் இருந்தாலும், அவர்களை எவரும் தொந்தரவு செய்யலாகாது. ஏனெனில், மனுஷ்யனுடைய மதமும் விசாரமும் வேறு வேருக இருந்தாலும், முடிவில் அவனுடைய உத்தேசம் ஒன்றினிடத்தே இருக்கும். நல்லொழுக்கமும் நீதியும் அவசியமில்லாதவனிடத்தும் உதாரமாக விவகரிக்க வேண்டும். ஏனெனில், மனிதன் எப்படிப்பட்ட இழிதொழில் உள்ளவனுயினும், அவனுக்கு நன்றியறிவு இல்லாமற் போகாது.

8. பூர்வத்தில் அரசர்கள் வேட்டையாடும் பொருட்டும் வேடிக்கையின் பொருட்டும் ஊர் சுற்றுவார்கள். பிரியதரிசி ராஜன் ஊர்சுற்றுவதற்குக் காரணம் அதுவன்று.

மற்றெதெனின், — பிராமணர்களுக்கும் சமணர்களுக்கும் ஒவ்வோரிடத்திலும் தக்ஷிணை கிடைக்கின்றதோ இல்லையோ, குருமார்களுக்குப் பண உதவி கிட்டுகின்றதோ இல்லையோ, ஜனங்கள் எப்படிப் பிரவர்த்திக்கின்றார்கள், அவர்களை நல்லொழுக்க முடையவர்க ளாக்குவதற்கு எவ்விதமான சாசனங்கள் செய்யவேண்டும் என்பன முதலாகிய விஷயங்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு தெரிந்து கொள்ளுவதே யாகும்.

9. கலியாண காலத்திலும், மகப்பேறுபெற்ற காலத்திலும், சிஷ்டாசாரமுடைய பெரியார் விஜயஞ்செய்யுங் காலத்திலும் எல்லாரும் உற்சவங் கொண்டாடுவார்கள். செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடிக்கும் தினமே நிஜமான உற்சவதினமாகும். இப்படிப்பட்ட உற்சவம் எல்லாருங் கொண்டாடவேண்டும். எஜமானனுடைய கட்டளையைச் சேவகன் நிறைவேற்றல், சிறியவர்கள் பெரியவர்களைச் சம்மானித்தல், பிராணிகளிடத்துத் தயைகூர்தல், பிராமணர்களுக்கும் சமணர்களுக்கும் தான தர்மங்கள் செய்தல் முதலிய காரியங்கள் நடக்கும் தினங்களே நிஜமான உற்சவதினங்களாகும். இப்படிப்பட்ட தினங்களில் மக்களிடத்துத் தந்தைக்கும், சேவகர்களிடத்து யஜமானனுக்கும், இப்படியே சகலமானவர்களுக்கும் ஆனந்தம் பொங்கும். ஆகையால் இந்த உற்சவத்தைச் செய்ய வேண்டும்.

10. பிரியதரிசி ராஜன் கீர்த்தியின் பொருட்டுப் பெருங்காரியங்கள் செய்வதில்லை. தன்னுடைய பிரஜைகளை நல்லொழுக்க முடையவர்களாக்கினன் என்னுங் கீர்த்தியே அவனுக்கு வேண்டியது. இதுவுமன்றி இதர காரணங்களினல் உண்டாகுங் கீர்த்தியை அவன் கிளிஞ்சில் ஓட்டுக்குச் சமானமாக நினைப்பான். தன்னயங் கருது

வோர் இவ்விரண்டாம் பதவியைச் சம்பாதித்துக் கொள் வார்களாக!

11. தர்ம தானத்தைப் போன்ற தானம் இல்லை. தர்ம தானத்தால் சேவகர்களிடத்துப் பிரீதி, தாய் தந்தையர்களிடத்து ஆதரவுடன் கூடிய பிரேமை, உற்றார் உறவினர்களுக்கு உதாரணமாகச் செய்த உதவி, பிராணிகளிடத்து அஹிம்சை ஆகிய இவை முதலானவை உண்டாகும். இதனுல், இம்மையிற் சுகமும் மறுமையிற் சுகப் பிராப்தியும் எய்தும்.

12. இல்லறத்தார், துறவிகள் முதலானவர்கள் எல்லாரும் ஆச்ரயிக்கும் தர்மமார்க்க விஷயங்களைப் பிரிய தரிசி ராஜன் ஆதரிக்கும் புத்திகொண் டிருக்கின்முன். அவர்களுக்கு இறையிலிகள் அளித்தும், வேறுவகைகளிற் சகாயஞ் செய்தும், அவர்களிடத்துள்ள பூஜ்ய புத்தியை அவன் வெளிப்படுத்தி யிருக்கின்முன். தர்மவிருத்தியை விடப் பெரிய புண்ணியம் வேறு இல்லை யென்பது அவனுக்குத் தெரியும். அவன் தன் தர்மத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பிற தர்மத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சகாயஞ் செய்கின்முன். ஏனெனில், பிற தர்மத்திற்குச் சகாயஞ் செய்வதினுலும் ஸ்வதர்மம் விருத்தியடையும். பிற தர்மத்தவர்களை நிந்திப்பவன் ஸ்வதர்மத்திற்குப் பங்கம் செய்பவனே யாவான். ஆகையால், ஒவ்வொருவரும் தத்தமக்குரிய குல தர்மப் பிரகாரம் பிரவர்த்தித்துக் கொண்டு இருக்க வேண்டியது.

13. பிரியதரிசி ராஜன் களிங்க தேசத்தை ஜயித்து லக்ஷக்கணக்கான ஜனங்களைச் சிறையிலடைத்தான். லக்ஷ ஜனங்கள் மாண்டார்கள். அதைப் பார்த்த பிறகு, அரசனுடைய பிரவர்த்தி தர்மத்தை நாடியது. அதுமுதற்

கொண்டு தன்னுடைய உடலையும் உள்ளத்தையும் பொருளையும் தர்மத்தைப் பரவச் செய்யும்பொருட்டே உபயோகிக்கவேண்டு மென்னும் சங்கற்பமும் அந்தக் காரியாரம்பமும் உண்டாயின. புதிய தேசங்களை ஜயிப்பதனால் உண்டாகிற பிராணஹானியைக் குறித்து நான் மிகவும் துக்கப்படுகின்றேன். தங்கள் தங்களுடைய தர்மத்தின் பிரகாரம் நடப்பவர்களும், ஸதாசார சம்பன்னர்களும், நீதிவான்களும், சீலமுள்ள பிராமணர்களும், சமணர்களும், மற்றுமுள்ளவர்களும் யுத்தகாலத்தில் அநேக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி யிருக்கின்றது. மற்றும், ஒருவேளை அவர்கள் ஊரைவிட்டு ஓடிப்போனால், அவர்களுடைய பந்து மித்திரர்கள் துக்கத்திற்கு ஆளாவார்கள். களிங்க விஜயகாலத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் நீரில் விழுந்து இறந்தார்கள். எத்தனையோ பெயர் வெட்டுண்டார்கள். எத்தனையோ பெயர் சிறையி லடைபட்டார்கள். இவைகளை யெல்லாம் பார்த்துப் பிரியதரிசி ராஜனுக்கு மிகவும் கிலேச முண்டாயிற்று. பிராணிகளுக்கு நிர்ப்பயம், மனுஷ்யனுடைய நடவடிக்கையில் தயை ஆகிய இவ்விரண்டும் தர்ம விஜயக் கொடிகளாகும். இவ்விரண்டின் பொருட்டே பிரியதரிசி ராஜனுக்குத் தன் தேசத்தின்மீது கொஞ்சம் அபிமானம் இருக்கின்றது. யவனராஜனாகிய ஆன்டியாகஸனும், அவனுக்கு அப்பாலுள்ள டாலமி, அன்டிகோனஸ், மாகஸ், அலெக்சாண்டர் என்னும் இந்த நான்கு ராஜர்களும், தெற்கில் சோழ, பாண்டிய, தாம்பிரபரணி, கிரீக்கு, காம்போஜ, நாபக, நாபவந்தி, போஜ, பெதினிக, ஆந்திர, புளிந்த தேச ராஜர்கள் முதலா யுள்ளவர்களும் பிரியதரிசியினுடைய தர்மக் கட்டளைகளுக்கு உட்பட்டு நடந்துகொள்வார்கள். இன்னும் தர்மோபதேச குருமார்கள் அநேக பிரதேசங்களுக்குப் போயிருக்

கின்றார்கள். அவர்களுடைய தர்மபோதனைப் பிரகாரம் எவரும் நடந்துகொள்ளாமல் இரார். இவ்விதமாக எல்லா விடத்தும் ஜயமுண்டாகின்றது. இதைக் கண்டு எனக்கு அத்தியானந்தம் உண்டாகின்றது. ஆயினும், இவ் வானந்தம் பரலோகானந்தத்தைவிட இழிவானதென்று தோன்றுகின்றது. ஆகையால், இந்த ஆதேசம் எழுதுவிக்கப் பட்டது. என்னுடைய புத்திர பௌத்திரர்கள் கத்தியின் பலத்தினால் வெற்றியின்மீது ஆசை கொண்டு பிராணி ஹத்திசெய்வது தகாது. தர்ம விஜயத்தைவிட சிரேஷ்டமானது இல்லையென்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தர்மவிஜயம் இம்மையிலும் மறுமையிலும் மேலானது.

14. இந்தப் பதினான்காவது ஆதேசத்தில் மற்றப் பதின்மூன்று சாசனங்களிலுமுள்ள வாக்கியங்களே அடங்கியிருக்கின்றமையின், இதனை இங்கே விவரிக்கவில்லை. இனிக் கற்றூண்களிற் செதுக்கப்பட்டிருக்கும் சாசனங்களின் சாராம்சங்களை உதகரிப்போம்.

டில்லிநகரத்திலுள்ள ஸ்தம்பம் வடபுறத்திலுள்ள முதற் சாசனம்

தேவப்பிரியனான பிரியதரிசி ராஜன் இவ்வாறு கூறுகின்றான்:—

என்னுடைய ராஜ்யாபிஷேகம் நடந்த இருபத்தேழாவது வருஷத்தில் இந்த ஆதேசம் எழுதப்பட்டது. பிரீதியும் சிரத்தையும் இயற்கையாகவே வளர்ந்துகொண்டே இருக்கும். என்னுடைய ராஜ்யத்திலுள்ள ஸமஸ்தமான கிருகஸ்தர்களிடத்தும் யதிகளிடத்தும் தர்மபந்தனம் உண்டு. அவர்களெல்லாரும் நிரந்தரமாக தர்ம மார்க்கத்

தில் பிரவர்த்திக்காமல் இரார்கள். விசேஷ விஷயம் என்ன வென்றால், தங்களுடைய மனோவிகாரங்களை நிர்மூலஞ் செய்து மகத்துவமான ஞானத்தைச் சம்பாதியாமல் இரார்கள். ஏனெனில், இந்த ஞானமே நிஜமான ஞானம்; தர்மமே ஞானத்திற்குத் தந்தையாகவும், சார்பிடமாகவும், குருவாகவும் இருக்கின்றது. தர்மமே நிச்சயமான சுகவீடு.

இரண்டாம் சாசனம்

ஜகத்தில் தர்மமே சிரேஷ்டமானது. நற்காரியங்களைச் செய்வதும், தீக்காரியங்களை வெறுத்துத் தள்ளுவதும் தர்மம் எனப்படும். தயை, ஔதாரியம், அந்தக்கரண சுத்தி, பவித்திராசரணம் ஆகிய இவை ஸம்ஸ்காரத்திற்கு மூலங்கள். ஏழைகள், துக்கப்பட்டவர்கள், கிலேசமடைந்த ஜனங்கள், பசு பக்ஷி முதலியன, மற்றுமுள்ள ஜலசரங்கள் ஸ்தலசரங்கள் ஆகிய இந்தப் பிராணிகளுக்கு நான் தர்ம கிருத்தியங்கள் செய்திருக்கின்றேன். அப்படியே எல்லாரும் செய்யவேண்டியது. அப்படிச் செய்கிறவர்கள் சாசுவதமான சுகத்தை அனுபவிப்பார்கள்.

மூன்றாம் சாசனம்

எனக்கு நன்றென்று தோன்றிய தர்மகாரியங்களைச் செய்துளேன். அவை தீயவையென்று மற்றவர்கள் எண்ணினாலும் நான் அதனைப் பாவக்கிருத்தியமென்று எண்ணமாட்டேன். நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்வதற்காகக் கடவுள் புத்தியையும் கண்களையும் கொடுத்திருக்கின்றார். ஆகையால், அவரவர்கள் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது. அபகாரம், நிஷ்டூரத்வம், கோபம், கர்வம் ஆகிய இவை தீயவை யென்றும் பாவமென்றும் எண்ணப்படுகின்றன.

மேற்புறத்திலுள்ள சாசனம்

.... இன்றையதினம் லக்ஷக்கணக்கான ஜனங்கள் எனக்குப் பக்தர்களானார்கள். அவர்களுடைய அபராதங்களுக்காக விதிக்கவேண்டிய சிக்ஷையைக் குறித்து இங்கே எவ்வளவு எடுத்துச் சொல்லக்கூடும்........ என்னுடைய பக்தர்கள் எங்கெங்கே ஔதும்பர விருக்ஷத்திற்கு பிரதக்ஷிணம் செய்கின்றார்களோ அங்கங்கே அவர்களுக்குப் போசன சாமக்கிரியைகள் கொடுக்கவேண்டும். இதனால் அவர்களுக்கு ஹிதம் உண்டாகும். தப்புச் செய்கிற பக்தர்களும் அபராதத்திற்குத் தகுந்த சிக்ஷையைப் பெறுவார்கள். ஆயினும், எவருக்கும் மரண தண்டனையாவது சிறையிருப்பாவது விதிக்கப்படமாட்டாது........... பிராணிகளுக்குக் காயங்கள் உண்டாக்குவோருக்கும், பிராணிகளைக் கொல்லுவோருக்கும் அவர்களுடைய கை கால்களை நறுக்குவதற்குப் பதிலாக அவர்களிடத்துத் தயை கூர்ந்து உபவாச சிக்ஷை விதிக்கப்படும். ஸாராம்சம் என்னவென்றால்,—அபராதிகளிடத்தும் நான் கிருபையுள்ளவனாக இருப்பேன்.

தென்புறத்துள்ள சாசனம்

.............கிளிகள், புறாக்கள், நீர்க்கோழிகள் முதலான பறவை ஜாதிகள் எவைகளையும் கொல்லக் கூடாது. நாற்கால் மிருகங்களுள் எதனையும் ஹிம்சிக்கக் கூடாது. விலங்குகள் பறவைகள் முதலானவைகளை மாம்சத்தின் பொருட்டுக் கொல்லக் கூடாது. மற்றும், மனோல்லாசத்தின் நிமித்தமாகவும் பசு பக்ஷியாதிகளைப் பிடிக்கக்கூடாது. மாதந்தோறும் சதுர்த்தசி, பௌர்ணிமை, அமாவாசை ஆகிய இந்தத் தினங்களில் பசுக்களை மேயவிடக்கூடாது.

கிழக்குத் திக்கிலுள்ள முதற் சாசனம்

........என்து அரசாட்சியின் பன்னிரண்டாம் ஆண்டில் உலகத்தின் நன்மைக்காக ஓர் ஆதேசத்தைப் பிரசித்தப் படுத்தினேன். இப்பொழுது அதனை எடுத்தெறிந்துவிட்டேன். என்னுடைய பூர்வதர்மங்கள் பாப மூலமானவைகளாய் இருக்கின்றன வாதலின், தர்மவிஷயத்தில் வேறு வேறு மதங்கள் உள்ளவர்கள் எல்லாரும் என்னுடைய மார்க்கத்தையே அனுசரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். ஆகையால், இந்த ஆதேசம் பிரகடிக்கப்பட்டது.

இரண்டாம் சாசனம்

........முற்காலத்து ராஜர்கள் எத்தனையோ பெயர் இப்படியே எண்ணி எண்ணி மரித்துப் போனார்கள். மற்றவர்கள் (சாமானிய ஜனங்கள்) வேறு தர்மத்தை யனுசரித்து அதனை விருத்தி செய்வதைவிட, ராஜ்பகர்த்தர்கள் வேறு தர்மத்தை மேற்கொள்ளுவதனால் மிகவும் சீக்கிரமாக அது மேன்மையடையும். இன்று முதல் நான் தர்மோபதேசகர்களைத் தேசதேசத்திற்கும் அனுப்பக்கூடும். இதை எல்லாரும் தெரிந்துகொள்ளத்தக்கது.

மூன்றும் சாசனம்

........தர்மம் வளர்ந்தோங்குவதற்குத் தக்கபடி பிரதிபக்ஷத்திலும் பலம் உண்டாகிக்கொண்டிருக்கும். ஆகையால், ஜனங்களுக்குத் தர்மோபதேசஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். அதனால் நிஜமான ஞானம் உண்டாகும். அவர்கள் அதனை மற்றவர்களுக்கு உபதேசித்துத் தர்மத்தைப் பரவச் செய்யவேண்டும். அவர்களுடைய லக்ஷக்கணக்கான சிஷ்யர்களுக்கும் நான் இந்த வார்த்தை

யையே சொல்லுகின்றேன். அவர்கள் ஜனங்களுக்குத் தர்ம ஞானத்தைச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும்.

சாலைகளில் போய் வந்துகொண்டிருக்கும் மனிதர் முதலாகிய சகல பிராணிகளுக்கும் வெய்யில் தாக்காதபடி நிழல் கொடுக்கத்தக்க மாமரங்களையும் அத்திமரங்களை யும் வரிசையாக வைத்திருக்கின்றேன். மற்றும், ஒவ்வொரு நாழிகைவழி தூரத்திலும் ஒவ்வொரு கிணறும் சத்திரமும் நிர்மித்திருக்கின்றேன். ஸாராம்சம், வழிப் போக்கர்களுக்குச் சௌக்கியம் உண்டாக்கினேன். எல்லாரும் இப்படியே செய்யவேண்டும்.

தர்மசாஸ்திரங்களைக் கற்றறிந்த குருமார்கள் தானஞ் செய்யுஞ் சக்தியுள்ள செல்வவான்களிடத்திற்கும், நாஸ்திகர்களிடத்திற்கும், கிருகஸ்தர்களிடத்திற்கும், யதிகளினிடத்திற்கும், பிராமணர்களினிடத்திற்கும், தரித்திரர்களினிடத்திற்கும், அவர் இவர், என்று வித்தியாசம் பாராட்டாமல் எல்லாரிடத்திற்கும் போகவேண்டும். என்னுடைய ராணிவாசத்திலுங்கூட யுக்தியாகவும் மரியாதையாகவும் பிரவேசிக்கவேண்டும். எல்லாருக்கும் ஸத் தர்மத்தைப்போதிக்கவேண்டும். தர்மத்தினால் தயை, ஔதாரியம், சத்தியம், சௌசம், பிராமாணிகத்வம் முதலாகிய நற்குணங்கள் விருத்தியடையும். நானெப்படி நற்காரியங்கள் செய்திருக்கின்றேனோ அப்படியே எல்லாரும் செய்ய வேண்டும். தாய், தந்தை, குரு ஆகிய இவர்களைச் சேவிக்க வேண்டும். பெரியார்களிடத்து ஆதரவு புத்தி வைக்கவேண்டும். பிராமணர்கள், சமணர்கள், திக்கற்ற பாலகர்கள், ஏழைகள், தாசர்கள், சேவகர்கள், வேவுகாரர்கள் முதலானவர்களிடத்து இரக்கம் வைக்கவேண்டும். தர்மகாரியங்கள் செய்வதனாலும், தர்மஞ் செய்பவர்களுக்கு வாதை உண்டாக்காமலிருப்பதனாலும் தர்மம் வளர்ந்

தோங்கும். இவ்விரண்டு உபாயங்களேயும் நான் செய்து வருகிறேன். இவை என்னுடைய புத்திர பௌத்திரர்கள் வரைக்கும் நடந்தேறுமாக.

அலகாபாத்திலுள்ள ஸ்தம்பம்
ராணியின் ஆதேசம்

தேவப் பிரியனுடைய கட்டளேயினல் சகலமான பிரதானிகளுக்கும் தெரியச்செய்வது என்னவென்றல், —

இந்த மாமரங்களே * இரண்டாம் ராணியும், † கிசிகினி என்னும் மூன்றும் ராணியும் நாட்டினர்கள்........

ஸான்டி என்னும் ஊரிலுள்ள ஸ்தம்பம்

இந்த ஸ்தம்பம் பலவிடங்களில் உடைந்து போயிருக்கின்றது. அங்கங்கே சிற்சில வாக்கியங்கள் மாத்திரமே அகப்படுகின்றன. அவைகளின் ஸாராம்சம்:— தாகங்கொண்டவர்களுக்குக் கர்ப்பூரம் முதலிய சுகந்தங்கள் கலந்த ஜலம் கிடைக்கவேண்டு மென்று நான் கோருகிறேன். இந்த ஏற்பாடு நெடுங்காலம் நடைபெறுமாக.

பாராபரி என்னு மிடத்திலுள்ள குகைகளிற் சிறு சிறு லேகைகள் அநேக மிருக்கின்றன. அவை யெல்லாம் அசோகருடைய சரித்திர விஷயங்கள் அடங்கினவை. அவைகளிற் சிலவற்றை இங்கே உதகரிப்போம்:—

---

* இரண்டாம் ராணி அஸந்திமித்திரை என்பவளாக இருக்கவேண்டும். இவள் பௌத்த தர்மத்தில் விசேஷ சிரத்தையுள்ளவள்; கணவனுக்கு மிகவும் சகாயகாரியாக இருந்தவள்.

† கிசிகினி (?) என்பவளே அசோகர் தமது ராஜ்யபாலனத்தின் நான்காம் ஆண்டில் விவாகஞ் செய்துகொண்டதாக டார்னர் துரை கூறுகின்றார்.

இவ்விரண்டு பாரியைகளல்லாமல் திஷ்யரக்ஷிதை பத்மாவதி (குனாலனுடைய தாய்) என்னும் ராணிகளும் இருந்தார்கள்.

வைராடத்து லேகையின் ஸாராம்சம்

தேவப்பிரியனை பிரியதரிசி ராஜன் கூறுவது என்னவெனில்: — நான் இரண்டரை வருஷகாலம் உபாசகனாக இருந்தேன். அப்பொழுது தர்ம விஷயத்தில் விசேஷமான ஆசை காட்டவில்லை. சென்ற வருஷத்தில் நான் ஸங்கத்தின் தரிசனத்தைக் கைக்கொண்டேன். அந்த தினம் முதற்கொண்டு சம்பூத் த்வீபத்திலுள்ள பூர்வத்து தேவதைகளின் தேவத்வத்தை ஜனங்கள் நம்பாதவர்களானார்கள். *இது தர்மத்தில் எனக்கு உள்ள ஆசையின் பயன். இப் பயன் கேவலம் அதிகாரத்தினாலேயே விளைந்ததன்று. சுவர்க்கத்தை அடைவது மிகவும் கஷ்டமான காரியமாயினும், அது தர்மாஸக்தி யுள்ளவர்களுக்கு, அவர்கள் எவ்வளவு பலவீனர்களா யிருந்தபோதிலும், பிராப்தியாகின்றது. ஆகையால், (இந்த லேகையினால்) ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவ தென்னவென்றால், — பலமுள்ளவர்களாயினும், பலமில்லாதவர்களாயினும் (உச்சபதவியிலுள்ளவர்களாயினும், நீச பதவியிலுள்ளவர்களாயினும்) எல்லாரும் தர்மத்தில் ஆசைவைக்கவேண்டும். பிறத்தேசத்தவர்களுக்கும் தர்மோபதேசஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்வதனால் தர்மம் அபிவிருத்தியாகி, ஸ்திரமாயிருக்கும்.

ஸஹஸ்ராரத்து லேகையின் சாரம்

உபதேசகர்களினாலே தர்மப் பிரசாரம் நடக்கவேண்டும். அதற்காக 256 குருக்களையும் தர்மோபதேசகர்களையும் அனுப்பி யிருக்கின்றேன். இந்த விஷயத்தைக் குகைகளிலும் ஸ்தம்பங்களிலும் எழுதிவியுங்கள். †

---

* இந்தப் பிரகாரமே சித்தபுரத்திலுள்ள லேகையிலும் எழுதப்பட்டிருக்கின்றது. † ரூபநாதமென்னு மிடத்தில் அகப்பட்ட லேகையிலும் மேற் சொல்லியபடியே எழுதப்பட் டிருக்கின்றது.

நேபாள தேசத்திலுள்ள படேரம், நிக்லீவம் என்னும் பிரதேசங்களிலிருக்கும் ஸ்தம்பங்களிலுள்ள ஆதேசங்களை டாக்டர் புரர் என்பவர் கி. பி. 1895-96-ஆம் ஆண்டில் சம்பாதித்தார். அவைகளின் ஸாராம்சத்தை இங்கே விவரிப்போம்:—

படேரத்து ஆதேசம்

பிரியதரிசி ராஜன் தன்னுடைய ராஜ்யாபிஷேகம் நடந்த இருபதாம் வருஷத்தில் இங்கே வந்தான். இவ்விடத்தில் புத்தசாக்கிய முனி ஜன்மித்தாரென்றும், இந்த ஸ்தலத்தில் சிலாஸ்தம்பம் பிரதிஷ்டிக்க வேண்டுமென்றும் அனுமதி கொடுத்தான். இந்த லும்பினீநகரத்தில் புத்தர் அவதரித்தாராகையால், இவ்வூரில் இறையை ஒழித்துவிட்டு, இவ்விடத்துத் தனத்தைப் பங்கிட்டுக் கொடுத்தான்.

இந்த லேகை புத்தருடைய ஜன்மஸ்தானத்தை நிச்சயிப்பதற்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றது.

பிரியதரிசி ராஜன் ராஜ்யாபிஷேகஞ் செய்துகொண்ட பதினான்கு வருஷங்களுக்குப் பிறகு புத்தகோனகமன ஸ்தூபியை இரண்டாம் முறை விஸ்தரித்தான். ராஜ்யாபிஷேகம் நடந்த இருபதாம் வருஷத்தில் அவனே வந்து பூஜை செய்தான். இந்த ஸ்தம்பம் அவனுடைய ஆக்கினையின்படி பிரதிஷ்டிக்கப்பட்டது.

இந்த லேகை புத்தருடைய அவதார காலத்தை நிர்ணயிப்பதற்குச் சாதனமாயிருக்கின்றது. எப்படியெனின், அசோகர் தம்முடைய அரசாட்சியின் பதினான்காம் ஆண்டில் புத்தகோனகமன ஸ்தூபியை விஸ்தரித்தாரென்பதனால் அவருக்கு முன்னரே, அஃதாவது கி. மு. 259 வருஷங்களுக்கு முன்னரே, அந்த ஸ்தூபி

ஜீர்ணமான ஸ்திதியி லிருந்ததென்பது தெளிவாகின்றது. கோனகமன புத்தரென்பவர் கௌதம புத்தருக்கு வெகு காலத்திற்குப் பிறகு பிறந்தவராகையால், கௌதம புத்தருடைய நிர்யாணகாலத்தைச் சிலர் கி. மு. 250 அல்லது 325 வருஷத்தி லென்று நிச்சயிப்பதற்குச் சாத்தியமாகாது. அதனினும் நூறு வருஷங்களுக்கு முன்னர் (கி. மு. 477ல்) இருந்ததாகத் தெளிவாகின்றது.

மற்றும், அசோகன் யாத்திரை செய்த விஷயம் இந்த லேகையினால் விளங்குகின்றது. உலும்பினீ நகரத்து இறையை நீக்கிவிட்டார் என்று சொல்லி யிருப்பதனால், அசோகருடைய ராஜ்யம் நேபாளம் வரையில் வியாபித்திருந்தது என்று தெரிகின்றது.

பௌத்த சாஸ்திரங்களைப் பரிசோதிக்கும் பொருட்டு அசோகர் சபை கூட்டிய விஷயமாக ஒரு லேகை இருக்கின்றது:—

பிரியதரிசி ராஜன் மகா சங்கத்திற்கு அபிவாதனஞ் செய்து, சபையினர்களுடைய ஆயுள்விருத்தியையும் சுக விருத்தியையும் கோருகின்றான். பூஜ்யர்களே! புத்தர், தர்மம், சங்கங்கள் ஆகிய இம்மூன்று ரத்தினங்களும் பூஜிக்கத்தக்கவை யென்று நான் தெரிந்துகொண் டிருக்கிறேன் என்பது தாங்கள் அறிந்தவிஷயம். மகாராஜர்களே! புத்தர் சொல்லியன வெல்லாம் நற்கூற்றுகளே. அவைகளை என்னால் ஆனவரையில் பிரசுரஞ் செய்கின்றேன். அந்தக் காரியம் நிறைவேறினால் ஸத் தர்மம் நிலை கொள்ளும். பூஜ்யர்களே! தர்மபரியாத்திரையில் (தர்ம கிரந்தங்களில்) விநயஸமுத்கருஷி, ஆரியவஸானி, அநாகதபயானி, முனிகாதா, மௌநேய சூத்திரம், உபதிஷ்ய பிரச்னே, லாகுலோவாதம் என்பவை மாத்திரமே ஸமாவேசமாகின்றன.........மகாசயர்களே! அநேக பிக்ஷு

கர்களும் பிக்ஷுணிகளும் எப்பொழுதும் தர்மகிரந்த சிரவணஞ் செய்யவேண்டு மென்றும் நான் கோருகின்றேன். இவர்கள் அப்படிச் செய்தால், உபாசகர்களும் அப்படிச் செய்வார்கள். இந்த உத்தேசத்தோடேயே இந்த ஆதேசம் எழுதுவிக்கப்பட்டது.

அசோகர் சபை கூட்டுவித்து, அந்தச் சபையினர்களுக்குத் தமது கோரிக்கையைத் தெரிவித்து, அதனையே சாசுவதமாக நிலைநிறுத்த வெண்ணி மேற்கண்டவாறு எழுதுவித்தார். ஏனெனில், அந்தக் காலத்தில் பௌத்த மதத்தில் 18 சம்பிரதாயங்கள் இருந்தன. ஒரு மதத்திலேயே பற்பல பேதங்கள் இருப்பின், சங்கத்திற்குச் சக்தி குறைந்துபோமென் றெண்ணி இந்தச் சபை கூட்டப்பட்டது. அசோகருடைய கோரிக்கை பெரும்பாலும் நிறைவேறிற்று.

சகல ஆதேசங்களின் சாரம்

அசோக ராஜர் எழுதுவித்துள்ள ஆதேசங்களினின்று நாம் அநேக விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளலாம். அவரைப்பற்றிச் சரித்திரக்காரர்கள் மிகைபட எழுதியிருக்கிறார்களென்று சிலர் நினைப்பது தவறென்பது ஏற்படுகின்றது. அசோகர் தம்முடைய விஷயத்திலும் மற்றவர்களுடைய விஷயத்திலும் உள்ள விஷயங்களை உள்ளபடியே எழுதுவித்தாரென்பது இந்த ஆதேசங்களைப் படிப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கும்.

அசோகருடைய ராஜ்யவிஸ்தாரம், குலவிருத்தாந்தம், தர்மவிஷயக் கட்டளை, நீதி பரவச்செய்வதற்காகப் பண்ணின ஏற்பாடுகள் ஆகிய இவையெல்லாம் இந்த ஆதேசங்களினால் விளங்குகின்றன. மற்றும், அசோகரது உபகாரந்தயை, ஔதாரியம், தானம், சத்தியம், பவித்திரதை,

அஹிம்சை என்னும் இவ்வேழு விஷயங்களும் தர்ம விஷயத்தோடு ஸமாவேசமாகும்படி அவர் செய்வித்தாரென்று நாம் நிர்ணயித்தல் கூடும்.

தாய் தந்தையர்கள், பெரியவர்கள், பந்துமித்திரர்கள் ஆகிய இவர்களுடைய ஆக்கினைக்கு உட்பட்டு நடக்கவேண்டும்; சேவகர்கள் அதிகாரிகளிடத்துக் கௌரவம் பாராட்டவேண்டும்; பிராமணர்களுக்கும் சமணர்களுக்கும் தான தர்மங்கள் செய்யவேண்டும்; பேசும் வார்த்தைகளில் மட்டும் மரியாதையும் இருக்கவேண்டும்; சகல பிராணிகளிடத்தும் தயையுடன் விவகரிக்கவேண்டும் — ஆகிய இவ்விஷயங்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாமென்று அவர் போதித்திருக்கின்றார். கேவலம் பௌத்த மதத்தின் பொருட்டே அவர் இந்த ஆதேசங்களை எழுதுவிக்கவில்லை. சகலமானவர்களும் நன்னெறியில் நடக்கவேண்டுமென்னும் விருப்பத்தோடே அநேக ஆதேசங்களை எழுதுவித்திருக்கின்றார். மனிதன் நாஸ்திகனாயினும், கடைசியில் அவனுடைய உத்தேசம் ஒரே விதமாகவே முடியுமென்றும், ஆகையால் அவனிடத்தே திடமான புத்தி வைக்கவேண்டுமென்றும் சொல்லி யிருக்கின்றார். இதர மதஸ்தர்கள் தங்கள் தங்களுடைய தருமத்தின்படி நடக்கவேண்டியதென்றும், அவர்களுக்குத் தீமை செய்யக் கூடாதென்றும் தெரிவித்துள்ளார். அதிகாரிகள் அநியாயஞ் செய்கின்றார்களென்று உணர்ந்து, 'தர்ம மகாமாத்திரை' என்னும் தர்மாதிகாரிகளை நியமித்தார். இவை முதலான விஷயங்கள் பல இந்த ஆதேசங்களினால் விளங்கப்பெறுகின்றன.

இறுதிக் காலம்.

அசோகர் தமது காலத்தைத் தர்மவிஷயத்திலேயே கழித்துவந்தார். அதுவன்றி, தர்மத்தை அபிவிருத்தி செய்வதற்காகத் தகுந்த அதிகாரிகளை நியமித்தாரென்பது முந்திய அத்தியாயத்திற் காணப்படும் ஆதேசங்களினாலே விளங்கும். அந்த 'தர்ம மகா மாத்திரைகள்' உயர்வு இழிவு என்னும் வேற்றுமைகளை எண்ணாமல் எல்லாருடனும் கலந்து விவகரித்து, அவர்களைத் தர்ம மார்க்கத்தில் நடக்கச் செய்துகொண்டு, ஸத் தர்மத்தைப் போதித்துக்கொண்டு, துஷ்டர்களைக் கண்டித்துச் சிஷ்டர்களைச் சம்மானித்துக்கொண்டு இருக்கவேண்டியது.

தர்ம மகா மாத்திரைகளல்லாமல், வசபூமிகர், ரஜ்ஜகர் என்னும் அதிகாரிகள் சிலரை நியமித்தார். ஜனங்களுடைய நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டியது வசபூமிகர்களுடைய காரியம். இந்த அதிகாரிகளுக்கு அப்போதைக்கப்போது வேண்டிய சகாயஞ் செய்வதும் பலங் கொடுப்பதும் ரஜ்ஜகர்களுடைய காரியம். இந்த ரஜ்ஜகர்கள் அப்போதைக்கப்போது சபைகள் கூட்டித் தர்ம சம்பந்தமான விஷயங்களைச் சர்ச்சிப்பார்கள். ராஜ்ய விஷய சம்பந்தமான விசாரணை செய்வதற்காக ஒவ்வொரு பிராந்தியத்திலும், ஒவ்வொரு முக்கியாதிகாரியை நியமித்தார். அந்த முக்கியாதிகாரிகளுக்கு பிராதேசிகர்கள் என்று பெயர். பிராதேசிகர்களுக்குமேல் அதிகாரிகளாக மகா மாத்திரைகள் (அமாத்தியர்கள்) என்பவர்களை நியமித்தார். ராஜ்யத்தின் எல்லைகளைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதும், திருடர்களைப் பிடித்துத் தண்டிப்பதும் அந்த அமாத்தியர்களுடைய காரியமாகும். அன்றியும், அந்தப் புரத்திலுள்ளவர்களுடைய அவஸ்தையைப் பரிசீலனஞ்

செய்வதற்காக இதிஜக மகா மாத்திரைகள் (?) என்னும் அதிகாரிகள் நியமிக்கப்பட் டிருந்தார்கள். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அந்தச் சிக்ஷை விதிக்கப் பட்டது முதற்கொண்டு மூன்று தினங்கள் ஈசுவரப் பிரார்த்தனைசெய்து கொள்வதற்காக இடை கொடுக்கப்பட்டு வந்தது. அசோகர் இன்னும் எத்தனையோ ஏற்பாடுகள் செய்திருக்கக்கூடும். ஆனல், நமக்கு மேற் சொல்லியவைகளைவிட அதிகமாகத் தெரியவில்லை.

அசோகர் இல்லறத்தி லிருந்தமையின், சகலமானவர்களும் அனுபவிக்கின்ற சோகம் முதலியவைகளை அவரும் அனுபவித்து வந்தார். அவருடைய தம்பியாகிய வீதாசோகன் பிக்ஷுவிரதத்தை மேற்கொண்டிருக்கையில் அவனுடைய தலையை அமீர் ஒருவன் நறுக்கிக் கொண்டு வந்தானென்று முன்னர்க் கூறியிருக்கின்றோம். பிறகு, நற்குணசீலனான குநாலனை, அவனுடைய சிறிய தாயாராகிய திஷ்யரக்ஷிதையின் மோகபாசத்தினுற் கட்டுண்டு, போக்கடித்துக் கொண்டார். மகேந்திரனென்னுங் குமாரனும் சங்கமித்திரை யென்னுங் குமாரியும் இரண்டாம் ராணியின் வயிற்றிற் பிறந்ததனுலும், அவர்கள் துறவறம் பூண்டதனுலும் ராஜ்ய பாலனஞ் செய்வதற்கு அதிகாரிகளாகாமற் போயினர். கடைசிக்காலத்தில் குநாலனுடைய குமாரனுகிய சம்பதி என்பவன் ஒருவனே மிகுந்திருந்தான். அசோகருடைய விசுவாஸத்திற்கு உரியவர்கள் வேறு எவருமில்லை. மனிதர்கள் வாலிபத்திலும் யௌவனத்திலும் தமக்கு உற்றுரை லக்ஷியஞ் செய்வதில்லை. மூப்பு மேலிட்ட காலத்தில் தன்னைச் சேர்ந்தவர்களெல்லாரும் தன்னைச் சூழ்ந்திருக்க வேண்டு மென்னும் விருப்பம் உண்டாகின்றது. அசோகருக்கு அப்படிப்பட்ட விருப்பமுண்டாகியும் அது நிறைவேறுவதற்கு வேண்டிய குறி

கள் எவையும் இல்லை. கிழவயதில் அவர் விரக்தராகி உபகுப்த ரென்னும் ஆசாரியரிடத்தில் பிக்ஷுவிரத தீக்ஷையைக் கைக்கொண்டார்.

இந்த விஷயமான சரித்திரம் அநேக நூல்களில் இருக்கின்றது. அவற்றுள் ஒரு நூலிற் காணப்படுவதை இங்கே விவரிப்போம்:—

ஒருநாள் அசோகர் தம்முடைய குருவாகிய ஆசாரிய உபகுப்தரை வரவழைத்து, "சுவாமி! பௌத்தர்களுள் இதுவரையில் விசேஷமாகத் தானஞ் செய்தவர் எவர்?" என்று வினவினர். அதற்கு உபகுப்தர், "அநாத பிண்டிகன் என்னும் கிருகஸ்தனே விசேஷமான தானஞ் செய்தவனுவான். அவன் சிராவஸ்தி என்னும் ஊரில் இருந்தான். அவ்விடத்திற்குப் புத்ததேவர் விஜயஞ் செய்த பொழுது அவன் ஜேதவனம் என்னும் தன்னுடைய சுந்தரமான உத்தியானவனத்தை அவருக்குக் கொடுத்தான். அந்த வனத்திலே புத்தர் தம்முடைய சிஷ்யர்களுடன் சாதுர்மாஸ்யம் கழித்தார்" என்று பதில் சொன்னர்.

"இன்னும் எவ்வளவு பணம் கொடுத்தான், எவ்வளவு தர்மம் செய்தான்?" என்று அசோகர் வினவ, "நூறு கோடிப் பொன் தானஞ் செய்தான்" என்று உபகுப்தர் உரைத்தார். அதைக் கேட்டு அசோகர், "நானும் அது போலவே நூறுகோடிப் பொன் கொடுக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுங்கள். இதுவரையில் எண்பத்து நான்காயிரம் ஸ்தூபிகள் கட்டுவித்திருக்கின்றேன். ஒவ்வொரு ஸ்தூபிக்கும் ஒவ்வொரு லக்ஷம் பொன் கொடுக்கின்றேன். அன்றியும், சாக்கியமுனி ஜன்மித்த இடத்திற்கும், அவர் புத்தரான பிரதேசத்திற்கும் அவர் தர்மோபதேசஞ் செய்த இடத்திற்கும், அவர் நிர்வாணமெய்திய இடத்

திற்கும் ஒவ்வொரு லக்ஷம் பொன் கொடுக்கின்றேன். சாதுர்மாஸத்தில் பிக்ஷுக்களெல்லாரும் இங்கே வந்து என்னுடைய ஆதித்தியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அதற்காக நான்கு லக்ஷம் பொன் கொடுக்கிறேன்.

"மற்றும், மூவாயிரம் பிக்ஷுக்களை எப்பொழுதும் போஷிப்பதற்குப் போதுமான ஏற்பாடு செய்யமாட்டுவேன். நானும், என்னுடைய ராணிகளும், என்னுடைய புத்திரர்களும் பூமிரூபமாக வைத்திருந்த சம்பத்தை நான் தானஞ் செய்துவிட்டேன். இந்தத் திரவியத்தில் நான்கு லக்ஷம் பொன்னைக் கொடுத்து அந்தப் பூசம்பத்தை மறுபடி நான் வாங்கிக்கொண்டேன். மொத்தம் தொண்ணூற்றாறுகோடி பொன் நாணயங்களைத் தானதர்மம் செய்தேன்" என்று தம்முடைய ஏற்பாடுகளையெல்லாம் அசோகர் விவரித்துரைத்தார். இப்படி வார்த்தை சொல்லிய ஆயாசத்தினால் அசோகர் அப்படியே ஆசனத்திற் சாய்ந்துறங்கினர்.

மகாராஜன் தேக ஸௌக்கியந் தவறியிருப்பதைக் கேட்டுப் பிரதானியாகிய ராதாகுப்தன் உடனே வந்து சேர்ந்தான். அப்பொழுது அரசனுடைய கண்களினின்று நீர் ஒழுகிக்கொண்டிருந்தது. பிரதானி அரசனுக்கு நமஸ்காரஞ் செய்து, "சுவாமி! ஈதென்ன?" என்று கேட்டான்.

"ராதா குப்தா! தனம், ராஜ்யம், குடும்பம் ஆகிய இவைகளை விட்டுப் போகின்றேனென்கிற துக்கம் எனக்குச் சிறிதும் இல்லை. நான் ஸ்தாபித்துள்ள சங்கத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லாமற் போகின்றதே என்கிற துக்கம் மாத்திரம் என்னை வாதிக்கின்றது. புத்த தேவருடைய

தர்மத்தை வியாபிக்கச் செய்வதற்காக நூறுகோடிப் பொன் தானஞ் செய்வதாக நான் சங்கற்பித்திருப்பது உனக்குத் தெரிந்த விஷயமேயன்றோ? அந்தச் சங்கற்பம் நிறைவேறுதலைப்பற்றி மிகவுந் துக்கிக்கின்றேன். தொண்ணூற்றாறு கோடிக்கு ஏற்பாடாய்விட்டது. இன்னும் நான்கு கோடிப் பொன் வேண்டும்'' என்று அசோகர் பிரதானியைப் பார்த்துச் சொன்னார்.

இப்படியிருக்க, யுவராஜபட்டத்திற்கு அதிகாரியாகிய குநாலனுடைய புத்திரனாகிய சம்பதியினிடத்துச் சில மந்திரிகள் போய், "ஐயா! தர்மாவதார மூர்த்தியாகிய உன்னுடைய பாட்டனார் பொக்கிஷத்திலுள்ள திரவியத்தையெல்லாம் ஆசாரிய உபகுப்தரது மடமாகிய குக்குடாராமத்திற்கு அனுப்பிவிட்டார். இனி நெடுநாள் அவர் ஜீவித்திருக்கமாட்டார். உடனே அதை நிவாரிப்பது நன்று'' என்று போதித்தார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டுச் சம்பதியின் மனம் மாறுபட்டது. "இனிமேல் பொக்கிஷத்திலுள்ள திரவியத்தைக் கொடுக்கவேண்டாம்'' என்று அவன் உத்தரவு செய்தான். அசோக மகாராஜர் தினந்தோறும் பொற்பாத்திரத்தில் அன்ன மருந்திப் பின்னர் அந்தத் தாம்பாளத்தைக் குக்குடாராமத்திற்கு அனுப்பிவந்தார். சம்பதி உத்தரவு செய்த தினம் முதற் கொண்டு மந்திரிகள் வெள்ளித் தாம்பாளம் அனுப்பிவந்தார்கள். ஆயினும், அந்த வெள்ளித் தாம்பாளத்தையே அசோகர் குக்குடாராமத்திற்கு அனுப்பி வந்தார். சிலநாள் சென்றபின்னர், அந்த வெள்ளித் தாம்பாளமும் இல்லாமற் போனதனால், அசோகர் மண்பாத்திரத்தில் அன்னம் புசித்து வந்தார்.

அசோக மகாராஜருடைய கதி இப்படியான பிறகு, அவருடைய நிலைமையைக் காணவெண்ணி மந்திரிகள் ஒரு

நாள் அவரிடத்திற்குப் போனார்கள். அப்பொழுது அவர் தமது கையில் பாதிநெல்லிக்காயை வைத்துக்கொண்டு, "மந்திரிமார்களே! இந்தத் தேசத்திற்கு அரசன் எவன்?" என்று வினவினர். மந்திரிகள் பிரமித்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு, "பிரபுவே! ஏன் இப்படிக் கேட்கின்றீர்கள்? இந்த ராஜ்யம் தம்முடையதே" என்றார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டு அசோகர் கண்ணீர் ததும்ப, மந்திரிகளைப் பார்த்து, "சத்தியமாகச் சொல்லுகின்றீர்களா? நான் ராஜ்யபதத்தை விட்டு நீங்கினவன் ஆகவில்லையா? பாருங்கள். இந்த நெல்லிக்காயிற் பாதியைத் தவிர நான் என்னுடையதென்று சொல்லத்தக்க வஸ்துவே இல்லை. நான் சார்வபௌமனாக இருந்தும், மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. இந்த இம்மைச் சாம்ராஜ்யத்தையும், நீர்க்குமிழி போன்ற நிலையில்லாப் பிரபுத்துவத்தையும் வெறுத்துத் தள்ளினேன். நான் ஜனங்களை ஆள்கின்றேன். ஆயினும், என்னை துக்கம் ஆள்கின்றது. எவன் ஏகசக்கராதிபதியாக ராஜ்யத்தை ஆண்டனனோ, எவன் 'நான்' என்னுங் கர்வத்துடன் சகல ராஜர்களையும் வசப்படுத்திக் கொண்டனனோ, அந்த அசோகனே இப்பொழுது ராஜ்யப் பிரஷ்டனாகி துக்கத்துடன் காலக்ஷேபஞ் செய்துகொண்டிருக்கின்றான். இதைவிடத் துரதிஷ்டமான பிரத்தியக்ஷ உதாரணம் எங்கே கிடைக்கும்? செடியிலிருக்கும் மலர் காம்புடன் கூடியிருக்குமளவும் சோபிக்கும்; அது நிலத்தில் விழுந்த பிறகு வாடி உலர்ந்துபோம். அப்படியே நானும் காலங் கழித்து வருகின்றேன்" என்று பதில் உரைத்தார்.

மற்றொருவனை விளித்து அசோகர், 'உறவினனே! இப்பொழுது கட்டளையிடும் அதிகாரம் எனக்கு இல்லையென்பது நிச்சயம்; ஆயினும், விண்ணப்பஞ் செய்து

கொள்வதற்கு ஆக்ஷேபம் இல்லை யன்றே? ஆகையால், இந்தக் கடைசி விண்ணப்பத்தை நீ நிறைவேற்றுவையாக. அஃதென்னவெனின், குக்குடாராமத்திற்குப் போய், என் பெயரைச்சொல்லி ஆசாரியருடைய பாதங்களிற் பணிந்து, இந்தப் பாதி நெல்லிக்காயை அவருக்கு அளிக்க வேண்டும்; ராஜாதி ராஜனான அசோகனுடைய ஐசுவரியம் இவ்வளவுதான் மிகுந்திருக்கிறது; இதனைத் தங்களுடைய சரணங்களில் அர்ப்பித்திருக்கின்றான். இந்தப் பலத்தின் அம்சம சங்கத்திலுள்ளவர்கள் எல்லாருக்கும் கிடைக்குமாறு செய்விக்கவேண்டும் என்று அவரைப் பிரார்த்திக்கவேண்டும். இந்தக் காரியம் செய்து முடிக்கும் பொறுப்பு உங்களுடையது" என்று கேட்டுக் கொண்டார்.

பிறகு, ராதாகுப்தனை நோக்கி அசோகர், "மந்திரி சிரேஷ்டா! இப்பொழுது இந்தத் தேசத்தை எவர் ஆளுகின்றார்?" என்று கேட்டார். ராதாகுப்தன் முன்னர்க் கூறியது போலவே, "இந்த ராஜ்யம் தங்களுடையதே" என்று பதில் உரைத்தான். அந்தப் பதிலைக்கேட்டவுடனே அசோகர் ஆசனத்தினின்று எழுந்து, ஆகாசத்தை அண்ணாந்து பார்த்து, நான்கு திக்குகளையும் உற்றுநோக்கி, கம்பீரமான குரலோடு, "நான் இன்றையதினம் தனபாண்டாகாரம் தவிர, அநேக ரத்னங்களோடு கூடிச் சோபித்துக் கொண்டிருக்கும் பூமியையெல்லாம் புத்தசங்கத்திற்கு அர்ப்பிதஞ்செய்துள்ளேன். இந்தப் புண்ணியகர்மத்தின் பயன் எனக்கு எய்துமாக! மறுஜன்மத்தில் எனக்கு ராஜ்யசுகம் கிடைக்கவேண்டுமென்றாவது, பிரம்மலோகம் ஸித்திக்க வேண்டுமென்றாவது, நான் விரும்பவில்லை. அவையெல்லாம் நீர்க்குமிழிகளைப்போலக் கணப்பொழுது இருந்து நசிப்பவை. தர்ம விஷயத்தில் எனக்கு உள்ள

திடமான சிரத்தைக்குப் பயன் ஆத்மசமயமனம் கிட்டினற்போதும். மண்ணுலகத்து சாம்ராஜ்யம் கணப்பொழுது இருக்கத் தக்கது; ஆத்மசாம்ராஜ்யம் நிலையானது'' என்று கூறினர். பூமிமுழுவதையும் கொடுத்துவிட்டதாகத் தான பத்திரம் எழுதிக்கொண்டு வரும்படி ராதாகுப்தனுக்குச் சொன்னர். மறுநாள் அவன் தான பத்திரத்தை எழுதிக்கொண்டு வந்தபிறகு, அசோகர் தமது கையினலேயே முத்திரிகை இட்டு, அதனைக் குக்குடாராமத்திற்கு அனுப்பினர். * இந்தப் பத்திரம் ஆசாரியருடைய கைக்குப் போய்ச் சேர்ந்தவுடனே, இங்கே அசோகமகாராஜர் பூவுலகத்து யாத்திரையை முடிவுசெய்துகொண்டு பரலோகத்திற்கு ஏகினர்.

அசோகருடைய அந்திய கர்மங்கள் முதலானவையெல்லாம் முடிந்த பிறகு, மந்திரிமார்களை யெல்லாம் சபைகூட்டி ராதாகுப்தன் அவர்களைப் பார்த்து, "அசோக மகாராஜர் நூறுகோடிப் பொன்னைத் தானஞ் செய்வதற்குச் சங்கற்பித்தார். அதனில் தொண்ணூற்றாறு கோடிப் பொன் கொடுத்தாய் விட்டது. இன்னும் நான்கு கோடிப் பொன் கொடுக்க வேண்டியிருந்தது. அந்தப் பாக்கியைப் பூர்த்திசெய்யும் பொருட்டு அவர் பூமிமுழுதையும் தானஞ் செய்தார். இப்பொழுது நாம் ஒரு காரியம் செய்யவேண்டி யிருக்கின்றது. இந்த நான்கு கோடிப்

* இவ்வாறு சம்பூத்திவை மூன்று முறை அசோகர் தானஞ் செய்ததாகவும், மூன்று முறையும் சங்கத்திற்குச் சரியான விலை கொடுத்துப் பூமியை யெல்லாம் விடுவித்துக் கொண்டதாகவும் அவருடைய சிலா லேகைகளில் எழுதப்பட்டிருக்கின்றதென்று பாஹ்யான் என்னும் சீனதேசத்து யாத்திரிகன் தன்னுடைய யாத்திரைக் குறிப்புகளில் எழுதி யிருக்கின்றான். ஆயினும், அந்தச் சாசனம் எங்கும் அகப்படவில்லை.

பொன்னையும் சங்கத்திற்குக் கொடுத்து, ராஜ்யத்தை விடுவித்துக் கொள்ளவேண்டும்'' என்றான். எல்லாருஞ் சம்மதித்தார்கள். அவ்வண்ணமே கிரயங்கொடுத்து வாங்கிக்கொண்ட ராஜ்யத்தைச் சம்பதி ஆண்டுவந்தான். அவனுக்குப் பிறகு, அவனுடைய குமாரனாகிய பிருகஸ்பதி என்பவன் ராஜ்யத்திற்கு வந்தான். பிருகஸ்பதிக்குப் பிறகு, விருஷசேனன், சூரியவாமன், புஷ்பமித்திரன் என்பவர்கள் நாட்டை ஆண்டார்கள்.

அசோகனுக்கும் சம்பதிக்கும் பிறகு ஸாயசன், தசரதன், சங்கதன், சாலிசுகன், சோமசர்மன், பிருகத்ரதன் என்பவர்கள் மகததேசத்தை ஆண்டதாக விஷ்ணுபுராணம் கூறுகின்றது.

பிருகத்ரதனுடைய சேனாதிபதியான புஷ்பமித்திரன் என்பவன் பிரகத்ரதனைக் கொன்று ராஜ்யாபிஷேகஞ் செய்துகொண்டானென்று சொல்லுவார்கள். அந்தப் புஷ்பமித்திரன் பௌத்த மதத்திற்கு விரோதி. அசோகர் சம்பாதித்த கீர்த்திக்குப் பதிலாக, அதே பீடத்தில் வீற்றிருந்து அவ்வளவு அபகீர்த்தியைப் புஷ்பமித்திரன் சம்பாதித்துக் கொண்டான். அவன் புத்தகயையிலிருந்த புத்த மூர்த்தியை எடுத்தெறிந்துவிட்டு, அந்த இடத்தில் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். குக்குடாராமத்தைப் பாழாக்கி, அங்கிருந்த பௌத்த பிக்ஷுகர்களையும் பிக்ஷுணிகளையும் மகா குரூரமாகக் கொல்லுவித்தான். மற்றும், பௌத்தாலயங்களையும் விஹாரங்களையும் நிர்மூலமாக்கினான். பௌத்தர்கள் வசிக்குமிடங்களுக்கெல்லாம்போய், அவர்களை வருத்தினான்.

புஷ்பமித்திரனுக்குப் பிறகு, சுங்கவம்சத்து ராஜர்கள் பாடலீபுத்திரத்தைப் பாலிக்கத் தொடங்கினார்கள்.

அது முதற் சிறிது காலத்துச் சரித்திரம் கிடையாதிருக்கின்றது. அதன் பிறகு, மகா பராக்கிரம முள்ளவனும், நற்குண மிகுந்தவனும், தர்மத்திற் சிறந்தவனும் ஆகிய கானிஷ்கன் என்னும் பௌத்தன் அரசனானான். அவன் பௌத்த தர்மத்தை, அசோகருக்குப் பிறகு, பாரதவருஷ முழுமையும் வியாபிக்கச் செய்தான். அவனுடைய காலத்தில் பௌத்தர்களுடைய நான்காம் மகாசபை கூட்டப்பெற்றது.

முடிவுரை

அசோகருடைய பாலனகாலத்தை ஒரு சரித்திரக் காரன் பொற் காலமென்று கூறியிருக்கின்றான். அந்தப் பெயர் அதற்குத் தகுமென்றே சரித்திரக்காரர்க ளெல் லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அவருடைய காலத் தில் தர்மப் பிரஷ்டர்கள் மறுபடி சன்மார்க்கர்கள் ஆவ தற்கு ஏற்பாடு செய்யப்பட்டது ; நீதியின் பயனையும் சாந் தத்தின் பயனையும் எல்லாரும் உணர்ந்து எல்லாரும் அனுசரிக்கும்படி செய்யப்பட்டது.

அசோகர் பலமிருந்தவர் ; ராஜ்யகாரியங்களை நிர் வகிப்பதிற் சமர்த்தர் ; குடிகளைப் பாலிப்பதில் ஊக்க முடையவர் ; சத்தர்மத்தில் பிரவர்த்திப்பவர். ஆதலி னாலே, அவர் அரசர்களுக்குள் முதன்மைபெற்றிருக் கின்றார். அவருடைய குணவிசேஷாதிகளை மற்ற அரசர் களுடன் ஒப்பிட்டு நோக்கின், அவரே சிறந்தவரென்று பக்ஷபாதமில்லாதவர்களெல்லாரும் அங்கீகரிப்பார்கள்.

பிரான்சுதேசத்து நேபோலியன், இராணதேசத்துச் சைரஸ், ஜர்மனிதேசத்துச் சார்லிமேன், ருஷ்யாதேசத்து பீற்றர்-தி-கிரேட், கிரீஸ் தேசத்து அலெக்சாண்டர், ரோமானியதேசத்து கான்ஸ்டன்டைன், டில்லி ஆக்பர் ஆகிய இவர்களெல்லாரையும்விட அசோகர் சிறந்த மகா புருஷரென்று தெரிகின்றது. அவர் நேபோலியனைப் போல சாகசியாயும் சூரராயுமிருந்தார். ஆனால், நேபோ லியனைப்போலத் தன்னயத்தையே கருதிச் சர்வநாசனஞ்

செய்துகொள்ளவில்லை. சைரசைப்போல் இதர ராஜ்யங்களைச் சுவாதீனஞ்செய்து கொண்டார்; ஆனால், அவனைப் போலக் கர்வங்கொள்ளவில்லை. பீற்றர்-தி-கிரேட்டைப் போலக் குடிகளின்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்; ஆனால், அவனைப்போல் இம்மை நயத்தை மாத்திரமே கோராமல் பாரமார்த்திக விஷயத்திலும் தம்முடைய உடல் பொருள் ஆவிகளை அர்ப்பித்தார். அலெக்சாண்டரைப்போலத் திக்குவிஜயஞ்செய்தார்; ஆனால், அவன் தன்னுடைய மனோவிகாரங்களை வெல்லமாட்டாது துக்கித்ததுபோலத் துக்கியாமல் அசோகர் தம்முடைய மனத்தைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தார். கான்ஸ்டன்டைன் * கிறிஸ்துமதத்தை மேற்கொண்டு தன்னுடைய ராஜ்யம் முழுவதிலும் அந்த மதத்தைப் பரவச்செய்தான். ஆனால், அசோகர் அவனுக்கு வெகுகால முன்னர் தாம் மேற்கொண்ட பௌத்த மதத்தைத் தம்முடைய ராஜ்யத்தில் மாத்திரமேயல்லாது பிறநாடுகளிலும் பரவச்செய்வதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் அநேகம் பண்ணினார். அசோகர் பிறவாதிருப்பின், கௌதம புத்தர் மிகப் பிரயாசைப்பட்டுப் பிரதிஷ்டைசெய்த மதம் அபிவிருத்தியாயிருக்கும் என்பது சந்தேகிக்கத் தக்கதே. ஏனெனில், சீனா, ஜப்பான், பர்மா, திபேத், சயாம், சிங்களம் முதலான இடங்களுக்கு அசோகர் தர்மோபதேசகர்களை அனுப்பி மதத்தை விருத்திசெய்யாதிருப்பின், பௌத்தமதம் உருவழிந்து போயிருக்கும்.

இந்துஸ்தானத்து இதிஹாசங்களில் அசோகருக்குச் சமானமானவர் ஆக்பர் ஒருவரே. ஏனெனில், ஆக்பரு

* அசோகரை பௌத்த கான்ஸ்டன்டைன் என்று சரித்திரக்காரர் சிலர் கூறுகின்றார்கள். அஃதாவது, அவனைப்போல மதத்தைப் பரவச்செய்யும் விஷயத்தில் அசோகர் சமர்த்தரென்று அவரைப் புகழ்ந்து கூறுவதாகும்.

டைய பாட்டனாராகிய பாபரும் அசோகருடைய பாட்டனாராகிய சந்திரகுப்தரும், தம்முடைய சொந்த புஜ பலத்தினலே ராஜ்யத்தைச் சம்பாதித்துப் பிரசித்தியடைந்தவர்கள். அசோகரும் ஆக்பரும் பண்டிதர்களைப் போஷித்தவர்கள். ஆக்பருடைய ஸம்ஸ்தானத்தில் அபுல் பாசல், விதோனி, பைஜி முதலாகிய மகாவித்வான்கள் இருந்தார்கள்; அசோகருடைய ஸம்ஸ்தானத்தில் ஆசாரிய உபகுப்தர், மொக்கல புத்திரர், திஷ்யர்முதலான மகாபண்டிதர்கள் இருந்தார்கள். வேறுவேறாக இருக்கும் மதங்களைப் பரிசோதித்து ஒரே மதமாகச் செய்யவேண்டுமென்று ஆக்பர் சபைகூட்டியது போலவே, அசோகரும் தர்மசபை கூட்டினர்; ஆனல், ஆக்பருடைய பிரயத்தனம் நிறைவேருமற் போயிற்று. அசோகருடைய பிரயத்தனம் ஈடேறிற்று.

மற்றும், அசோகர் பௌத்தமதத்தை மேற்கொண்ட பிறகு, புத்தர், தர்மம், சங்கம் ஆகிய இம் மூன்றையும் நாடிப்போற்றினலன்றி முக்தியில்லை யென்று அவர் தெரிந்துகொண்டு, அதன் நிமித்தமாக உலகத்து அபவாதத்திற்குச் சிறிதும் பயப்பட்டுப் பின் வாங்காமல், தம்மைப் போலவே குடிகளெல்லாரும் நடந்துகொள்ளவேண்டுமென்றெண்ணி அவர் இடைவிடாமற் பிரயத்தனஞ்செய்துகொண்டிருந்தார். இவ்வாறு பிரஜைகளின் இம்மைச் சுகத்தையும் மறுமைச் சுகத்தையுங் கருதி அவ்விஷயங்களில் மனத்தைச் செலுத்தி வியவஸ்தை செய்தவர் அசோகருக்கு முன்னரேனும் பின்னரேனும் இதுவரையிற் பிறக்கவில்லை.

அசோக மகாராஜருடைய பிறப்பைக்குறித்து நாம் நன்முக ஆலோசிக்குமிடத்து, ஈசுவரர் அவர் மூலமாக உலகத்தவர்கள் சில சன்மார்க்கங்களை அனுஷ்டிக்க வேண்டு

மென்றெண்ணியே அவரைப் பிறப்பித்தாரென்று தோன்றாமற் போகாது. அக் காலத்தில் பிராணிஹத்தி அதிகமாக நடந்துவந்தது; நற்காரியங்களுக்கெனச் சிலரும், கெட்டகாரியங்களுக்கெனச் சிலரும் பிராணிகளை வதைத்துக்கொண் டிருந்தார்கள். எப்படியாயினும் என்ன? பிராணிஹிம்சை யென்பது ஒன்றேயன்றோ? அப்படிப்பட்ட மூடாசாரத்தை ஒழித்துச் சதாசாரத்தைத் தேசமெங்கும் பிரசித்தப் படுத்துவது சாமானியர்களினால் நிறைவேறத்தக்க காரியமன்று; குருவினாலும் அந்தக் காரியம் செய்ய முடியாது; அரசனுடைய ஆக்கினையினால் மாத்திரமே எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகையினாலே, தர்மத்தை நிலை கொள்ளச் செய்யும்பொருட்டு அசோகரைக் கடவுள் பிறப்பித்தார்.

பௌத்தமதத்தில் ஜாதிபேதம் இல்லாததனால், அக்காலத்தில் அசோகருடைய பிரயத்தனம் நிறைவேறிற்று. ஒருவருக் கொருவர் மனஸ்தாபப் படுவதற்குக் காரணம் இல்லாமற் போயிற்று. எல்லாரிடத்தும் சமதிருஷ்டியுள்ள அந்த மத மில்லாது வேறு மதமாக இருப்பின், அப்பொழுது அனர்த்தம் விளைந்திருக்கும். ஆயினும், அசோகர் எண்ணியவாறு அவருடைய மதம் நிலைகொள்ளவில்லை. அதற்குக் காரண மென்னவெனில், பிக்ஷுகர்களுக்கும் பிக்ஷுணிகளுக்கும் அவர் மிகுதியான போஜனம் அளித்திருந்தார். அதனால் சோம்பலும் துராசாரமும் நாளடைவில் அவர்களைத் தம்வயப்படுத்திக் கொண்டு, முடிவில் அந்த மதம் பரதகண்டத்தை விட்டு ஒழிந்து ஓடிப்போமாறு செய்தன.

எவ்விடத்தில் தர்மோபதேசகர்களுக்கு அதிகசௌக்கியம் ஏற்பட்டிருக்குமோ, அவ்விடத்தில் அவர்களுக்கு அகம்பாவம் அதிகமாக உண்டாயிருக்கும். அந்த அகம்

பாவத்தினுல் ஜனங்களிடத்து அவர்களுக்குத் திரஸ்கார புத்தி யுண்டாகும். அவர்கள் வெறுப்பதனுல் ஜனங்கள் அவர்களை லக்ஷியஞ் செய்யாமல் வேறு மதங்களிற் பிரவே சிப்பார்கள். இது சர்வஜனங்களுக்கும் சாமானியமான விஷயமன்ருே? அவ்விதமாகவே பௌத்த மதோபதேச கர்களுக்குத் துராசாரங்கள் பழக்கப்பட்ட தன்றி ஜனங்க ளிடத்து வைஷம்யமும் திரஸ்காரபாவமும் உண்டாயின. ஆகையினுலே, ஜனங்கள் அந்த மதத்தை விட்டுப் புதிய மதங்களை மேற்கொண்டார்கள்.

சுபமஸ்து.

Caxton Press, Madras — 1919.